**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 12.**

# இதழியல்

## முதுகலைத்தமிழ் முதலாமாண்டு

**Manonmaniam Sundaranar University, Directorate of Distance & Continuing Education, Tirunelveli.**

**MSU / 2021-2022 / PG –Colleges / M.A. Tamil / Semester – I/Ppr.no.6/ Elective-2**

## இதழியல்

**நோக்கம்:**

1. இதழியல் குறித்து அறியச் செய்தல்
2. பத்திரிக்கைத் துறையில் மாணவர்களின் பங்கை அறியச் செய்தல்
3. பத்திரிக்கைகள் ஏற்படுத்தும் சமூக மாற்றத்தை உணரச் செய்தல்
4. இதழ்களில் பணியாற்றும் முறைகளைக் கற்றுக் கொடுத்தல்.

**அலகு-1**

இதழியல் - விளக்கம் - மக்கள் தொடர்புச் சாதனங்கள் - மக்கள் தொடர்புக் கருவிகளில் பத்திரிக்கைகள் - பத்திரிக்கைகளின் பணிகள் - இதழியல் விதிகள் - பத்திரிக்கைகளின் பொறுப்புகளும் கடமைகளும் - மக்களாட்சியில் பத்திரிக்கைகளின் பங்கு

**அலகு-2**

செய்தித்தாளின் தோற்றம் - இந்திய இதழியல் - இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கு – தமிழக இதழ்கள் - தோற்றம் - தேசிய இதழ்கள், திராவிட இயக்க இதழ்கள், பிற இதழ்கள், விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்கள், தற்காலத் தமிழ் இதழ்கள், பழைய இதழ்கள், புகழ் பெற்ற இதழ்கள், புகழ் பெற்ற பத்திரிக்கையாளர்கள் - இதழியல் சட்டங்கள் - பத்திரிக்கை கவுன்சில் - இதழ்களின் சுதந்திரம் - இதழ்களின் நடத்தையறம் - இன்றைய இதழியல்

**அலகு-3**

செய்தி – வகைகள் - களங்கள் - செய்தியாளர்கள் - செய்தி சேகரிப்பு – செய்திகளை எழுதும் முறை – பேட்டி – தலைப்பு – முகப்பு – தலையங்கம் - பக்க அமைப்பு – செய்தி நிறுவனங்கள் - நிால்வாக அமைப்பு – ஆசிரியர் பிரிவு – வாணிபப் பிரிவு - இயந்திரப் பிரிவு - இதழ்களின் பகுப்பும் அமைப்பும் - கால அடிப்படை – தன்மை அடிப்படை – உள்ளடக்க அடிப்படை.

**அலகு-4**

கருத்துப்படங்கள் - கேலிச்சதிரங்கள் - பெட்டிச் செய்திகள் - காலநிலைக் குறிப்புகள் - அங்காடி நிலவரம் - இலச்சினை இடநிரப்பி – கையெழுத்துப் பத்திரிக்கைகள் - இராயல்டி ஆசிரியருக்குக் கடிதங்கள் - துணுக்குள் - விளம்பரம் - விளக்கம் - நோக்கம் - வகைகள் - ஒழுக்க நெறிகள், நிறைகுறைகள்.

**அலகு-5**

புலனாய்வு இதழ்கள் - நச்சு இதழ்கள் - இன்றைய கால இதழ்களும் சமூகமும் இதழியல் கலைச்சொற்கள்.

**பாடநூல்**

1. முனைவர் ச.ஈஸ்வரன், முனைவர் இரா. சபாபதி, இதழியல், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

**பார்வை நூல்**

1. மா.பா. குருசாமி, இதழியல் கலை, சக்தி ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி
2. கி.ராசா, இதழியல், தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை
3. வி.மோகன், இதழியல் பார்வை, மோனார் கிராபிக்ஸ், சென்னை.
4. சு.சக்திவேல், இதழியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. என்.கிருஷ்ணன், எஸ்.ஸ்ரீகுமார், மக்கள் தகவல் தொடர்பியல்.

# இதழியல்

## இதழியல்

டயர்னல் என்ற இலத்தீன் சொல்லிலிருந்து Journalism என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது. Journal அல்லது Dianal என்றால் அன்றாடம் நடந்ததை எழுதி வைப்பது என்பது பொருளாகும். தற்போது அச் சொல் இதழ்களைக் குறிக்கிறது.

செய்திகளைச் சேகரித்தலும், சேகரித்த செய்திகளைப் பத்திரிகை வாயிலாகப் பரப்புதலும் இதழியல் எனப்படும்.

### விளக்கம்

வெளியிடுவதற்காக நடைமுறையில் உள்ள மாறுபட்ட விவரங்களைக் கொடுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல் என வெப்ஸ்டர் அகராதி பொருள் தருகிறது.

பத்திரிகைகளுக்கு எழுதுதல், நடத்துதல் இதழியல் என சேம்பர்ஸ் 26ஆம்நூற்றாண்டு அகராதி பொருள் தருகிறது.

செய்திகளைப் பெறுவதும், பிறருக்குத் தருவதும் ஆகிய கலையே இதழியல் என்கிறார் கி.இராசா.

பொதுச் செய்தி, கருத்துக்கள், பொழுது போக்கு அம்சங்களை மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் பரப்புவது இதழியல் என ஜி.எப்.மோட் கூறுகிறார்.

பத்திரிகைகளுக்குக் குறிப்பாகச் செய்தித்தாளுக்கு எழுதுவதுதான் இதழியல் என்கிறார் இராமச்சந்திரன்.

# மக்கள் தொடர்புச் சாதனங்கள்

**தொலைக் காட்சி**

Tele Vision என்ற ஆங்கிலச் சொல் தமிழில் தொலைக் காட்சி என ஆனது. 1925இல் ஜான்பெயர்டு தொலைக் காட்சிக் கருவியைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டினார். ஆனால் அதற்குரிய கருவிகள் ஏதும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஸ்காட்லாண்டு விஞ்ஞானி ஒருவர் 1926 ஜனவரி இல் ஒரு கருவியைக் கண்டறிந்தார். இதன் மூலம் சிலுவை ஒன்றின் நிழலை சில அடி தூரத்தில் அஞ்சல் செய்து காட்டினார். அதன் பின்னர் பல முயற்சிகள் நடந்தன. வணிக முறையில் தொலைக்காட்சி பத்தாண்டுகளுக்குப் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டது.

தொலைக்காட்சியில் Video எனப்படும் இலத்தீன் சொல்லுக்கு நான் பார்க்கிறேன் என்றும் Audio எனப்படும் இலத்தீன் சொல்லுக்கு நான் கேட்கிறேன் என்றும் பொருளாகிறது.

## தொலைக்காட்சித் தொகுதி

தொலைக்காட்சி

1. ஒளி, ஒலியை ஈர்க்கும் காமிரா

2. ஒளி, ஒலியைச் சீராக இயக்க ஒரு கட்டுப்பாட்டமைப்பு

3. அஞ்சல் செய்ய வசதி உண்டாகும் திட்டம்

4. நிகழ்ச்சியைக் காண ஒரு தொலைக்காட்சிப் பெட்டி

ஆகியனவற்றின் தொகுதியே தொலைக் காட்சி ஆகும்.

ஒரு இடத்தில் ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சியை நாட்டின் எந்த மூலையிலிருந்தும் கண்டு களிப்பது என்பது இதன் சிறப்பம்சமாகும்.

## இயங்கும் முறை

### ஒளி – ஒலி பரப்பல்

1. ஒளி

ஒரு காட்சியை கேமிரா மூலம் படம் பிடிப்பர். பின் இது R.F. அலைகளாக மாற்றப்பட்டு, பெருக்கி, மற்றும் அலையியற்றி துணை கொண்டு கலப்பி என்ற சாதனத்திற்கு வரும்.

2. ஒலி

ஒரு நிகழ்வின் ஒலிக் கூறுகள் மைக் மூலம் பெறப்பட்டு, மின்னலைகளாக A.F. ஆக மாற்றப்பட்டு, பெருக்கியின் துணை கொண்டு பெருக்கப்பட்டு, கலப்பி என்ற சாதனப் பகுதிக்கு வரும்.

இங்கு

A.F., R.F. அலைகள் கலக்கப்பட்டு ஆண்ட்டெனா மூலம் வான் வெளியில் தொலைக் காட்சி அஞ்சல் நிலையக் கோபுரம் வழி அனுப்பப்படும்.

### ஒளி – ஒலி ஏற்றல்

வீட்டில் உள்ள ஆண்ட்டெனா ஒளி பரப்பப்பட்ட மின்காந்த அலைகளை ஏற்கும். பின்னர் இது பிரிப்பியால் A.F., R.F. அலைகளாகப் பிரிக்கப்படும். பின் பெருக்கும். தொடர்ந்து ஒளி தொலைக்காட்சிப் பெட்டியில் தோன்றும். இங்கு ஒரு படம் வரி வரியாகப் பிரிக்கப்பட்டுத் திரையில் தோன்றும் நம் கண் ஒரு காட்சியை 1/8 வினாடி வரை நம் மூளை நினைவில் வைத்துக் கொள்ளும் திறன் பெற்றது. இதற்குப் பார்வை நீட்டிப்பு சக்தி என்று பெயர். இது வேகமாக நிகழ்வதால் படம் தொடர்ச்சியாகத் தெரியும். ஒலி தொலைக்காட்சிப் பெட்டியிலுள்ள ஸ்பீக்கருக்குச் சென்று ஒலிக்கும்.

இவ்விரண்டும் ஒரே சமயத்தில் தொலைக் காட்சிப் பெட்டியில் ஏற்படும்.

## இந்தியாவில் தொலைக்காட்சி

ஜான் பெயர்டு வித்திட்ட தொலைக்காட்சி 33 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் அடியெடுத்து வைத்தது. அகில இந்திய வானொலி நிலையம் 1959ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் புதுதில்லியில் ஒரு தொலைக்காட்சி நிலையத்தைத் தொடங்கியது.

**முதல் நிகழ்வு – தில்லி**

தொலைக்காட்சி முதன் முதலில் கல்வி தொடர்புடைய நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. இந்நிகழ்ச்சி 10 முதல் 12 மைல் வரை தெரியும்படி 5 கிலோவாட் சக்தி கொண்ட ஒளி பரப்பு வசதியுடன் தொடங்கப்பட்டது. பின்னர் தொலைக் காட்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சமூகவியல், கல்வி நிகழ்ச்சி அரை மணி நேரமும், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் அரைமணி நேரமும் வாரத்திற்கு இரண்டு நாட்கள் ஒளிபரப்பாகியது. இது மக்களிடம் மிகுந்த வரவேற்பையும், பயனையும் நல்கியதால் விரிவுபடுத்தப்பட்டது. 1961 இல் இயற்பியல், வேதியியல், ஆங்கிலம், இந்தி முதலான பாடங்கள் தொலைக் காட்சி வழி ஒளிபரப்பப்பட்டது.

1965 ஆகஸ்ட் திங்கள் முதல் தில்லி தொலைக்காட்சி நிலையம் முழுமையான நிலையமாகச் செயல்பட்டது. வாரத்தில் நான்கு நாள்கள் அரைமணி நேர நிகழ்ச்சிகள் ஒளி பரப்பப்பட்டது. நாடகம், திரைப்படச் செய்திகள், பல்சுவை நிகழ்ச்சிகள் எனப் பலதரப்பட்டவை ஒளிபரப்பாகியது.

மும்பை

1972 அக்டோபர் 2இல் மும்பை தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது, இதன் கிளை நிலையம் புனேயில் தொடங்கப்பட்டது.

**கல்கத்தா – சென்னை – லக்னோ**

1975 ஆகஸ்ட் 9ஆம் நாள் கல்கத்தா, சென்னையிலும். 1975 நவம்பர் 17இல் இலக்னோவிலும் தொலைக் காட்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

**பெயர்மாற்றம்**

1976 ஏப்.1 முதல் தூர்தர்ஷன் என்ற பெயரில் தொலைக்காட்சி நிலையம் செயல்படத் தொடங்கியது. இதில் வர்த்தக ஒலிபரப்பும் இணைந்து கொண்டது.

**செயற்கைக்கோள்**

1975இல் இந்தியாவில் SITE என்ற செயற்கைக் கோள் வழி தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கப்பட்டது.

## நிகழ்ச்சித் தயாரிப்பு

நிகழ்ச்சித் தயாரிப்பு என்பது கூட்டுப் பொறுப்பாகும். அரங்க வடிவமைப்பாளர், ஒப்பனையாளர், அரங்கத் தலைவர், பொறியியல் வல்லுனர், ஒலியமைப்பு இயக்குநர், கேமிராக் கலைஞர் போன்ற அனைவரும் ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பில் ஒத்துழைப்பர். அவரவர் தங்கள் கோணத்திலிருந்து ஆலோசனை வழங்குவர்.

நிகழ்ச்சியில் பங்குபெறும் குழுவினர் ஒவ்வொருவருக்கும் நிகழ்ச்சிக்குரிய பிரதி கொடுக்கப்படும். அது சார்ந்த ஒத்திகைகள் தொடர்ந்து நடைபெறும். நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்யப்படும். நேரடியாக ஒளிபரப்பப்படுவதும் உண்டு. ஒலியமைப்பும் தொடர்ந்து நடைபெறும்.

தயாரிப்பாளர், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறையில், காட்சிக் கலப்பாளர், பொறியியல் இயக்குநர், பொறியியல் உதவியாளர் ஆகியோருடனிருந்து நிகழ்ச்சியைத் தயாரிப்பர். நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டறையில் ஒலி பெருக்கியும், கடிகாரமும் இருக்கும். அவ்வறையின் முன்பக்கம் ஒளிக் கட்டுப்பாட்டறையும், பின்புறம் ஒலிக் கட்டுப்பாட்டறையும் இருக்கும். இம்மூன்று அறைகளும் நிலைய அரங்கின் மேல் தளத்திலிருக்கும். ஒலிக்கட்டுப்பாட்டறையும், தயாரிப்புக் கட்டுப்பாட்டறையும் ஒரு கண்ணாடியால் பிரிக்கப்பட்டிருக்கும். ஒலி வாங்கி மூலம் வரும் ஒலிகளை ஒருங்கிணைத்து ஒலி வழங்குவார்கள். பதிவு நிகழ்ச்சியாக இருந்தால் நாடாப்பதிவறைக்குத் தொடர்பு கொண்டு எல்லா ஏற்பாடுகளும் தயாரான பிறகு பதிவைத் தொடங்கச் செய்வார்கள்.

**வெளிப்புற ஒளிபரப்புகள்**

வெளியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நிலையத்திற்குக் கொண்டு வந்து ஒளிபரப்புவது வெளிப்புற ஒளிபரப்பாகும். இப் படப்பிடிப்பிற்கு வெளிப்புற வண்டி மிகவும் அவசியமாகும். இதனை மின்சாரம் அல்லது ஜெனரேட்டர் மூலம் இயக்கலாம். இதனைக் குட்டித் தொலைக்காட்சி நிலையம் என்பர். இந்த வண்டியில் நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், கேமிராவைக் கட்டுப்படுத்தவும், ஒலியைக் கட்டுப்படுத்தவும் மூன்று பிரிவுகள் உள்ளன.

**தொலைக்காட்சிக் கலைஞர்கள்**

தொலைக்காட்சிக் கலைஞர்களுக்கும், பார்வையாளருக்கும் தொடர்பு இருக்க வேண்டும். கலைஞர்கள் தம் திறமையைக் காட்டி, சொல்ல எண்ணியதை அவர்கள் முன் சொல்ல வேண்டும். தொலைக்காட்சிக் கலைஞர்களின் கடமைகளாக மகிழ்வூட்டல், செய்தி சொல்லல், அறிவுறுத்தல் என்ற மூன்றும் அமைகின்றன.

**கலைஞர்களின் வகைகள்**

கலைஞர்களை

1. நிகழ்ச்சி நடத்துநர், செய்தியளிப்பவர், அறிப்பாளர்

2. நடிகர்கள்

என இரு வகையாகப் பிரிப்பர்.

கலைஞர்கள் தயாரிப்பாளர் ஏற்பாடு செய்த முறைப்படி செய்தியை வழங்குவார்கள். செய்தி வழங்குவோர் செய்தியை மனதில் வாங்கிக் கொண்டு பார்வையாளர் மனதில் பதியும்படி சொல்ல வேண்டும். செய்தி வாசிப்பாளர் டெலிபிராம்டர் என்ற கருவியைப் பயன்படுத்துவதன் மூலம், பார்வையாளருக்கு செய்தி வாசிப்பாளர் மனப்பாடமாக, சரளமாகச் சொல்லுவது போல் தோன்றும்.

செய்தி ஆசிரியர்களே செய்திகளை உருவாக்குவர். செய்திகளைப் பிற மொழித் தொலைக்காட்சிகளிலிலிருந்து பெற்று மொழியாக்கம் செய்வதுமுண்டு.

## வானொலி

இங்கிலாந்தில் 1896இல் மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்தார். பின்னர் உலக நாடுகளுக்குப் பரவத் தொடங்கியது. இந்தியாவிற்கு 1924இல் மே 16ஆம் நாள் தான் வானொலிக் குழு அமைக்கப்பட்டது. வானொலி இந்தியாவிற்கு அறிமுகமாகியது ஏறத்தாழ 28 ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்தது.

### சென்னை – மும்பை- கல்கத்தா வானொலி

1924 ஜீலை 31இல் சென்னை மாகாண ரேடியோ கிளப் ஒலிபரப்பைத் தொடங்கியது. 1927 ஜீலை 23இல் இர்வின் பிரபு மும்பையில் வானொலியைத் தொடங்கி வைத்தார். 1927 செப்டம்பர் முதல் வாரத்தில் கல்கத்தாவில் வங்காள ஆளுநர் ஸ்டான்லி ஜாக்சன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கி வைத்தார். 1930இல்தான் சென்னை நகராட்சிக் கழகம் முறையான ஒலிபரப்பைத் தொடங்கியது.

### பொருளாதாரப் பற்றாக்குறை

இந்திய வானொலி தொடக்க நிலையில் பல பொருளாதாரத் தட்டுப்பாடுகளை சந்திக்க நேரிட்டது. எனவே இந்திய வானொலி ஒலிபரப்பு நிறுவனத்தார் இந்திய அரசிடம் நிதி உதவி கேட்டனர். இந்தியரசு உதவ முடியாத நிலையிலிருப்பதாக அறிவித்தது. எனவே இந்தியன் டேியோ டெலிகிராப் கம்பெனி 3.5 இலட்சம் கடனாகக் கொடுத்து உதவியது. வானொலி பெட்டித் தயாரிக்கும் நிறுவனங்கள் தங்களுக்கு இழப்புகள் ஏற்படும் என்று முறையிட்டன. நாடெங்கும் வானொலிக்கு ஆதரவாக முறையீடுகள் தோன்றின. பின்னர் 1930 ஏப்ரல் மாதம் முதல் நாளில் தொழிலாளர் துறையின் கீழ் அரசே வானொலி ஒலிபரப்பை ஏற்று நடத்தத் தொடங்கியது. அரசு பிராட்காஸ்ட் சர்வீஸ் என்ற அமைப்பை உருவாக்கியது.

### அரசு நடத்தல்

1931 நவம்பர் 23இலிருந்து ஒலிபரப்புத் துறையைத் தற்காலிகமாக அரசே ஏற்று நடத்த முடிவு செய்தது. 1934ஆம் ஆண்டு முதல் அரசு பி.பி.சி. நிறுவனத்திலிருந்து ‘பாலோ’ என்ற ஒலிபரப்பு வல்லுநரை அழைத்து அவரிடம் வானொலி வளர்ச்சிக்கென ஒரு திட்டத்தைக் கேட்டது. அது முதல் வானொலி நன்கு வளர்ச்சி பெற்றது.

1935 ஜனவரியில் இந்தியரசு மார்க்கோனி நிறுவனத்திடமிருந்து டெல்லி வானொலி நிலையத்திற்குக் கருவிகளை வாங்கத் திட்டமிட்டது. 1935 ஆகஸ்ட் திங்கள் லயனல் பில்டன் என்பவர் முதல் ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளராக இந்தியா வந்தார். மேலும் பி.பி.சியின் ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்த எச்.எல்.கே.கிர்கே என்பவரும் இந்தியா வந்தார். பின் ஏழு புதிய மத்திய அலை வரிசை நிலையங்களைத் தொடங்கவும், ஒரு சிற்றலை ஒலிபரப்பை அமைக்கவும் பரிந்துரை செய்தார். 1936 ஆகஸ்ட்டில பி.பி.சி.யிலிருந்த் சி.டபிள்.யூ. கார்டர் தலைமைப் பொறியாளாராகப் பொறுப்பேற்றார். இந்திய கம்பியில்லாத தந்திச் சட்டமும் அமுலுக்கு வந்தது.

**இந்திய வானொலி வளர்ச்சி**

இந்திய வானொலி 1935ஆம் ஆண்டு முதல் ஏறுமுகத்தில் இருந்தது. 1935 செப்டம்பர் 10இல் மைசூரில் ஆகாசவாணி, 1936இல் டெல்லி, 1938இல் சென்னை, 1939இல் திருச்சி ஆகிய இடங்களில் வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு வரை வானொலி எதிர்பார்த்தளவு வளர்ச்சியடையவில்லை. பின்னர் வந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வானொலி ஏற்றம் பெறத் தொடங்கியது. இந்நிலையில் 16 ஒலிபரப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 205 வானொலி நிலையங்கள் நிறுவப்பட்டது. 97.5 சதவீதம் மக்கள் வானொலியின் பயனை அடைந்தனர்.

**நோக்கம்**

வானொலியின் நோக்கமாக கற்பித்தல், தகவளித்தல், மகிழ்ச்சியூட்டல் ஆகிய மூன்றும் அமைந்தன. வானொலியின் தலையாயப் பணி மக்களுக்குத் தகவலளிக்கும் பொறுப்பு ஆகும்.

**தனித்தன்மைகள்**

வானொலி

1. சிந்தனையைத் தூண்ட

2. கேட்டுக் கொண்டே வேலை செய்ய

3. உடனடியாகத் தகவல் பெற

4. மக்கள் எழுச்சி அடைய

உதவுவது தனித்தன்மையாக அமைகிறது.

**கோட்பாடுகள்**

1. நட்பு நாடுகளைக் குறை கூறக் கூடாது.

2. குறிப்பிட்ட ஒரு இனத்தையோ, இனத்தைச் சார்ந்தவரையோ குறை கூறக் கூடாது.

3. வன்முறையைத் தூண்டும் வகையில்

4. நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில்

5. குடியரசுத் தலைவரின் செயல்முறைகளுக்கு எதிரான வகையில்

6. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையில்

7. தனிப்பட்ட ஒருவரைப் புகழும் வகையில் - ஒலி பரப்புச் செய்தல் கூடாது.

8. தேர்தல் அறிவிப்பிற்குப் பின்னா் எந்தக் கட்சி சார்ந்தவரையும் பங்கேற்கச் செய்தல் கூடாது.

9. சமுதாயத்தில் யாருடைய மனத்தையும் புண்படுத்தும் வகையில் செயல்படக் கூடாது.

10. சொற்களில் கவனம் மிக அவசியம்

**எ.கா.**

குருடர் - பார்வையற்றோர்

செவிடர் - கேட்க இயலாதோர்

ஊனம் உடையோர் - மாற்றுத் திறனாளி

**நிகழ்ச்சிகள்**

**இசை நிகழ்ச்சி**

வானொலியில் கருநாடக, இந்துஸ்தானி, நாட்டுப்புற, மேற்கத்திய, திரை இசை எனப் பல்வேறு இசை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் இசைக்கலைஞர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள், இளம் கலைஞர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

**பேச்சு நிகழ்ச்சி**

பேருரைகள், சிற்றுரைகள், உரையாடல்கள், விவாதங்கள், நாடகங்கள், சொற்சித்திரங்கள் போன்றவை பேச்சு நிகழ்ச்சியில் அடங்கும். இந்நிகழ்ச்சியின் வாயிலாக மொழியறிஞர்கள், எழுத்தாளர்கள் கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள் போன்றோர் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

**பிற நிகழ்ச்சி**

**பெண்கள் தொடர்புடைய நிகழ்ச்சி**

குடும்பக் கலை, குழந்தை வளர்ப்பு, தாய்சேய் நலம், இல்லற நிருவாகம், இல்லற வரவு - செலவு முதலான செய்திகள் ஒலிபரப்பாகின்றன..

**இளைஞருக்கான நிகழ்ச்சி**

வேலைவாய்ப்புச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், போட்டித் தேர்வுக்கான ஆயத்த நிகழ்ச்சிகள், வினாடி – வினா, பொது அறிவு, நாட்டு நடப்பு, இசை, நாடகம், போன்றவை இளைஞர்களுக்காக ஒலிபரப்பாகிறது.

**குழந்தை – நிகழ்ச்சிகள்**

குழந்தைகள் மனதில் இரக்கம், நேர்மை, ஊக்கம், பண்பாடு போன்றவற்றை உருவாக்கும் வகையில் குழந்தை நிகழ்ச்சிகள் அமைகின்றன.

**கல்வி நிகழ்ச்சிகள்**

மாணாக்கர் பயன் பெறும் வகையில்

1. அறிவியல் நிகழ்ச்சிகள்
2. இலக்கிய அரங்குகள்
3. கவியரங்குகள்
4. இலக்கிய நிகழ்ச்சிகள்
5. பொதுத் தேர்வுக்கான நிகழ்ச்சிகள்

போன்றவை கல்வி நிகழ்ச்சியில் அமையும்.

**வேளாண் நிகழ்ச்சிகள்**

வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகள் வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தத்தம் துறை தொடர்பான கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றன. வேளாண்மை உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற வேண்டும் என்பதே வானொலி ஒலிபரப்பின் நோக்கமாகும்.

**பயன்கள்**

வானொலியால்

1. நாட்டின் ஒருமைப்பாடு வளர்கிறது
2. ஒரு மொழிக்குரிய கலைகள்
3. ஒரு மொழிக்குரிய இலக்கியங்கள் - ஆகியன பிற மொழிக்காரர்கள் அறிந்து கொள்ள
4. பொழுது போக்க
5. சிந்தனையைத் தூண்ட
6. பொது அறிவை வளர்க்க

7. நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ள

8. கலைஞர்கள் தங்கள் திறமையைக் காட்ட

9. கலைஞர்களின் திறமைகளை வெளிக் கொணர

10. மகிழ்ச்சியடைய

வானொலி பயன்படுகிறது.

## திரைப்படம்

கினி என்ற இலத்தீன் சொல்லுக்கு அசைதல் என்பது பொருள். திரையில் அசையுமாறு செய்யப்பட்டதால் கினிமா என்று அழைத்தனர். பின்னர் இது சினிமா என்றானது. தமிழில் திரைப்படம் என்கிறோம்.

**அசையும் படம்**

1853இல் ஆஸ்திரியா, பிரான்சு நாட்டு மக்கள் வட்டத் தகட்டில் சுற்றிலும் புகைப்படங்களை ஒட்டி, தட்டை வேகமாகச் சுழற்றினர். அப்பொழுது உருவங்கள் மாறின. அதனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தும், பொழுதைப் போக்கியும் வந்தனர். பின்னர் மேபிரிஜ் என்ற வெள்ளைக்காரர் மனிதனின் அசைவு, விலங்குகளின் அசைவு ஆகியவற்றை நிழற்படமாக எடுத்தனர். அவற்றை வட்டத் தகட்டில் ஒட்டிச் சுழற்றினர்.

**வளர்ச்சி**

1. 1877இல் ரெய்னாடு என்ற பிரஞ்சுக்காரர் படங்களைத் திரையில் காணும் கருவி ஒன்றைக் கண்டறிந்தார்.

2. 1879இல் பிரான்சு நாட்டில் மேரி என்பவர் 16 ஆண்டுகள் உழைத்துப் பல்விதமான கேமராக்களைக் கண்டுபிடித்தார்.

3. 1884ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த ஈஸ்ட்மென் என்பவர் கோடாக் என்ற கேமிராவில் பேப்பராலான சுருள் ஒன்றில் படம்பிடித்துக் காட்டினார்.

4. எடிசனின் சீடர் டிக்சன் என்பவர் ஒலிக் கருவியின் மூலம் திரைப்படத்துக்கு ஒலியை இணைக்க முடியுமா என்று ஆராய்ந்தார். இரண்டாண்டுகளுக்குப் பிறர் ஈஸ்ட்மென்ட் செல்லுலாய்டு என்ற படச்சுருளைக் கண்டு பிடித்தார்.

5. பிரிட்டனைச் சார்ந்த பிரிஸ்கிரின் என்பவர் புரஜக்டரைக் கண்டறிந்தார்.

6. 1892இல் பாரிசில் திரைப்பட அரங்கு திறக்கப்பட்டது.

7. 1895இல் திரைப்படம் வளர்ச்சியடைந்தது.

8. ஒரு நிமிடப் படங்கள் காட்டப்பட்டன.

**கதைகள்**

குழந்தைகள் விரும்பும் வகையில் ஜார்ஜ்மெலி என்பவர் கற்பனைக் கதைகளைப் படமாக்கினார்.

எட்வின் எஸ்.போர்டர் என்பவர் ‘அமெரிக்கத் தீயணைப்பு வீரரின் வாழ்க்கை’ ‘தி கிரேட் டிரெயின் ராபெரி’ என்ற புகழ் பெற்ற படங்களைத் தயாரித்தார்

## மக்கள் தொடர்புக் கருவிகளில் பத்திரிகைகள்

1. அச்சு – பத்திரிகைகள்

2. ஒலி உணர்வு – வானொலி

3. கேட்டலும் பார்த்தலும் - தொலைக்காட்சி, திரைப்படம்

4. மரபு வழிச் சாதனம் - நாட்டுப்புறப்பாட்டு

**சொல் வழித் தொடர்பு**

1. பொதுக் கூட்டம்

2. பொது விவாதம்

**வெளிப்புறச் சாதனம்**

1. விளம்பரப் பலகை

2. அறிவிப்புப் பலகை

**இதழ்கள்**

**நாளிதழ்கள்**

**காலை**

1. தினமலர்

2. தினத்தந்தி

3. தினகரன்

4. தினபூமி

5. காலைக்கதிர்

**மாலை**

1. மாலை மலர்
2. மாலை முரசு
3. தமிழ் முரசு

**பருவ இதழ்கள்**

**வாரம்**

1. கல்கி
2. குமுதம்
3. ஆனந்தவிகடன்
4. குங்குமம்
5. ராணி
6. துக்ளக்
7. தேவி

**வாரமிருமுறை**

1. ஜுனியர் விகடன்
2. குமுதம் ரிப்போர்ட்டர்
3. நக்கீரன்

**மாதம்**

1. ராணி முத்து
2. மங்கையர் மலர்

**மாதமிருமுறை**

அவள் விகடன்

**கால், அரையாண்டு**

இலக்கிய இதழ்கள்

**ஆண்டு**

பொங்கல், தீபாவளி சிறப்பு வெளியீடுகள்.

## பத்திரிகைகளின் பணிகள்

**கட்சிப்பணி**

அரசியல் கட்சிகள் தங்கள் கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள், நிலவரங்கள், மக்களுக்குச் செய்த, செய்கின்ற, செய்ய இருக்கிற சேவைகள் போன்றவற்றை வெளியிட்டு வருகின்றன. இவை தவிர மாற்றுக் கட்சிகளைச் சாடுவது, பதிலடி கொடுப்பது போன்றவற்றைச் செய்து தங்கள் கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்தப் பாடுபடுகிறது. தங்கள் கட்சிக்காரர்கள் கட்சியினைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவும், அதே கட்சியில் தக்க வைத்துக் கொள்ளவும் கட்சிப் பத்திரிகைகள் செயல் பட்டு வருகின்றன.

**சான்று**

ஜனசக்தி, முரசொலி, அண்ணா, நமது எம்.ஜி.ஆர்.

**சமயப்பணி**

தாங்கள் சார்ந்திருக்கும் சமயம் பற்றிய கொள்கைகள், கோட்பாடுகள், நிகழ்வுகள், விழாக்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள சமயப் பத்திரிகைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வகையில் முதலில் தோன்றியது கிறிஸ்தவப் பத்திரிகைகளே. இதனைத் தொடர்ந்து இந்துக்களும், இஸ்லாமியர்களும் தங்கள் சமயத் தத்துவங்களை விளக்கப் பத்திரிகைகளைத் தொடங்கினர்.

**சான்று**

**கிறிஸ்தவ சமய இதழ்கள்**

நற்போதகம், தீபிகை, ஞானதூதன், வருகையின் தூதன், வேளாங்கண்ணி குரலொலி, இயேசு அழைக்கிறார், விழித்தெழு.

**இந்து சமய இதழ்கள்**

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், திருக்கோயில், ஞான ஒளி, காமகோடி வாணி, ஞான பூமி போன்றவை.

**இஸ்லாமிய சமய இதழ்கள்**

தாருல் இஸ்லாம், முஸ்லீம் முரசு, குர்ரானின் குரல், ரஹுமத் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**விடுதலை இயக்கப் பணி**

இந்திய விடுதலைப் போரில் வாளாகவும், கேடயமாகவும் பல இதழ்கள் பங்காற்றின. விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களும் இவ்விதழ்களை நடத்தினர். இவ்விதழ்கள் தேசிய உணர்வையும், விடுதலை வேட்கையையும் ஊட்டி வளர்த்தன.

இந்து, சுதேசமித்திரன் இதழ்கள் தமிழ்நாட்டில் தேசியமும், காந்தியமும் வளர அரும்பாடுபட்டன.

**பாரதியார்**

பாரதியார் சுதேச மித்திரனில் ஆசிரியராக இருந்த போது அதில் பல எழுச்சி மிக்க கட்டுரைகள், செய்திகளைத் தொடர்ந்து அளித்து வந்தார். பாரதியார் சொந்தத்தில் நடத்திய இந்தியா என்ற இதழ் சுதந்திரப் போராட்டத்தில் புரட்சியை ஏற்படுத்தியது. பாராதியார் முதன் முதலில் இந்தியா இதழில் கருத்துப் படங்களைப் போட்டு, புரட்சியை ஏற்படுத்தினார். உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்ப இவ்விதழ் பங்காற்றியது குறிப்பிடத் தகுந்ததாகும்.

**பரலி சு. நெல்லையப்ப பிள்ளை**

பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ‘லோகோபகாரி’ என்ற இதழை நடத்தினார்.

**சுப்பிரமணிய சிவா**

‘ஞானபானு’ என்ற இதழினையும் சுப்பிரமணிய சிவா பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடத்தினார்.

**திரு.வி.க**

திரு.வி.க. நடத்திய ‘தேசபக்தன்’ என்ற இதழ் தேசிய இதழாகச் செயல்பட்டது. இதில் அவர் தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகிறான், சுயாட்சி கோருகிறான் என்று எழுதினார்.

திரு.வி.க.வின் எழுது கோல் பாசுபதமாகவும், அவர் உருத்திரானகவும் மாறி எழுதியது பல தேசபக்தர்கள் உருவாகக் காரணமாயிற்று.  இவ்விதழில் வெ.சாமிநாத சர்மா பாரதத் தாயின் போர்க்களத்திலிருந்து ஒரு சுதந்திர வீரன் எழுதுவது என்ற தலைப்பில் பல உணர்ச்சி மிக்க கட்டுரைகளை எழுதினார். வ,வே.சு. ஐயர் தேசபக்தனில் எழுதிய ஒரு கட்டுரைக்காக ஒன்பது மாதம் சிறை சென்றார்.

**ஆந்திர கேசரி த.பிரகாசம்**

இவர் நடத்திய ‘சுயராஜ்யா’ இதழில் வ.ராமசாமி, சுத்தானந்த பாரதியார் பணியாற்றினர். இவர்களுக்கு மாதக் கணக்கில் சம்பளம் அளிக்கப்படாத போதும் நாட்டு விடுதலைக்காக, தேசப்பற்றுக்காக அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்து பணியாற்றினர். வ.ராமசாமியை அறிஞர் அண்ணா அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று அழைத்தார். இதற்குக் காாணமாக வ.ராமசாமியின் உரிமைப் போராட்டக் குணமும், சமூக சீர்திருத்தமும் அமைந்தது.

**டாக்டர் பா. வரதராஜுலு நாயுடு**

இவரின் இதழான தமிழ்நாடு பல விடுதலைப் போர் சார்ந்த செய்திகளை வெளியிட்டு விடுதலைப் போரில் வெடிகுண்டுகளாகத் திகழ்ந்தது. வரதராஜுலு எழுத்துக்கள் எறியீட்டிற்குச் சமமாகும் என்றார் அ.மா.சாமி.

**ஈ.வெ.ரா**

இவர் குடியரசு என்ற இதழை நடத்தினார். இவ்விதழ் சுதந்திரப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்து உதவியது. இவ்விதழின் நோக்கமாக அந்நிய ஆட்சியை அப்புறப்படுத்தி குடியரசை இந்நாட்டில் நிலவச் செய்வதாக அமைந்திருந்தது. இவ்விதழின் அட்டைப் படத்தில் கையில் கொடி ஏந்திய பாரதமாதாவும், இராட்டை சுற்றும் ஒரு பெண்ணின் படமும் இடம்பெற்றிருந்தது.

ஒவ்வொரு இதழும் தவறாது கதர் கட்டுங்கள் என்ற விளம்பரத்தைத் தாங்கி வந்தது. தமிழ்நாட்டில் கதரைப் பரப்பிய பெருமை பெரியாருக்கே உண்டு.

**டி.எஸ்.சொக்கலிங்கம்**

இவர் பேனா மன்னர் என்று அழைக்கப்பட்டார். இவர் காந்தி, வந்தே மாதரம், தினசரி, தினமணி ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். தமிழ்நாட்டில் தேசிய இயக்கம் வலுவாக இவர் தம் எழுத்தே உதவியது. இவரின் எழுத்து வன்மையினால் காந்தி இதழில் வெளிவந்தவை காந்தி பத்திரிகைக் கருத்தா? காந்தியின் கருத்தா? என்று எண்ணும் அளவுக்கு அமைந்தது. தமிழ்நாட்டில் தேசியத்தை மக்கள் சொத்தாக்க உதவிய பத்திரிகைகளுள் காந்திக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

**சதானந்தம்**

புகழ்பெற்ற விவேகசிந்தாமணியை நடத்திய சி.வி சாமிநாதனின் மகனே சதானந்தமாவார். இவர் மும்பைக்குச் சென்ற 1927இல் பிரிபிரஸ் என்ற செய்தி நிறுவனத்தைத் தொடங்கினார். தமிழகத்தில் விடுதலைப் போரில் முன்னணியில் நின்ற இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, பாரத தேவி ஆகிய இதழ்களைத் தொடங்கியவரும் இவரே.

**சுதந்திரச் சங்கு**

இவ்விதழ் சுதந்திர வேள்வியில் அக்னிக் குஞ்சாகத் திகழ்ந்தது. இதன் விலை காலணா. இதில் உள்ள மொத்த பக்கங்கள் எட்டு தான். இவ்விதழுக்கு சத்தியாக்கிரகமே உயிர், தர்மமே மூச்சு, காந்தியடிகளே தெய்வம் ஆகும். இவ்விதழின் முதல் பக்கத்தில் தீவிரமான கருத்துப் படமிருக்கும். இதன் சூடான நடை போராட்டக் காலத்துக்குப் படைக்கலமாகத் திகழ்ந்தது.

**பா.ஜீவானந்தம்**

இவர் 1937 இல் ஜனசக்தியைத் தொடங்கினார். இவர் விடுதலைப் போர்க்களத்தில் ஆற்றல் மிக்க சொற்பெருக்காலும், ஆண்மை மிக்க எழுத்தாலும் மக்களைத் திரட்டினார்.

**சி.பா. ஆதித்தனார்**

இவர் 1942இல் தொடங்கிய தந்தி என்ற இதழே பாமரனும் சுதந்திரப் போராட்டச் செய்திகளைப் படிக்கத் தூண்டின.

**பிற இதழ்கள்**

ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களும் விடுதலை வேள்விக்குத் தங்களால் இயன்ற அளவுக்கு பங்களிப்பைச் செய்தன. ஆனந்த விகடன் வாசன் கைக்கு மாறிய போது தலையங்கம், கருத்துப்படங்கள் எல்லாமே விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாகவே அமைந்திருந்தது.

**இலக்கியப்பணி**

ஒரு நல்ல இலக்கியப் பத்திரிகை பல்லாயிரம் பேருக்குக் கற்பிக்கும் பேராசிரியர் போன்றது என்ற தீபம். நா.பார்த்தசாரதியின் கருத்து போல் பல்லாயிரம் இலக்கியப் பத்திரிகைகள் தோன்றின. அவற்றுள் பல நீண்ட காலம் வெளிவரவில்லை. எனினும் அவற்றின் பணி மகத்தானதாகும்.

**தொடக்க கால இலக்கிய இதழ்கள்**

இவ்வகை இதழ்கள் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகளிலும், புலமை மிக்கோரின் தருக்கங்களிலுமே கவனம் செலுத்தின.

**சான்று**

1. மதுரைத் தமிழ்ச் சங்கம் - செந்தமிழ்
2. கரந்தைத் தமிழ்ச் சங்கம் - தமிழ்ப் பொழில்
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - செந்தமிழ்ச் செல்வி
4. மறைமலையடிகள் - ஞானசேகரம்
5. சுப்பிரமணிய சிவா – ஞான பானு

இவ்விலக்கிய இதழ்கள் மொழிக்கு விதை நெல்லைப் போன்று திகழ்ந்து, நாளைய இலக்கிய முயற்சிகளைப் பயிர் செய்ய உதவின. இவற்றின் விழுமியங்களும், குறிக்கோளும், சிறந்த முயற்சிகளும் பாராட்டத் தக்க வகையில் அமைந்திருந்தன.

**வளர்ச்சிக் காலம்**

தமிழ் இலக்கிய இதழ்களில் புதுமையும், செழிப்பும் பெருகத் தொடங்கின. இவற்றுள் குறிப்பிடத் தகுந்த நிலையில் மணிக்கொடி, கலைமகள், பொன்னி ஆகியனவற்றைச் சுட்டலாம்.

**மணிக்கொடி**

இவ்விதழ் புதிய எழுத்தாளர்களுக்குக் கை கொடுத்தது. மேலும் இவ்விதழ்களில் சிறுகதை, தொடர்கதைகள் வெளிவரத் தொடங்கியது. இலக்கிய இதழ்களின் வளர்ச்சி, எழுச்சிக் காலம் என்பது மணிக்கொடிக் காலம் என்றே சுட்டப்படுகிறது.

**கலைமகள்**

கலைமகளில் இலக்கியம், அறிவியல் போன்ற ஆழமான பொருள்களைப் பற்றி விவரமான கட்டுரைகள் வெளிவந்தன. நாளடைவில் கலைமகள் என்பது கதைமகள் என்ற கூறுமளவுக்கு நிறைய கதைகளைத் தாங்கி வெளிவந்தது.

**பொன்னி**

பொன்னி இதழ்தான் பாரதிதாசன் பரம்பரை என்ற கவிஞர் உலகத்தை உருவாக்கியது. இவ்விதழ் தமிழும் கலை நயமும் சிறக்க வேண்டும் குறிக்கோளோடு செயல்பட்டது.

பாரதிதாசன், சுரதா, முடியரசன் கண்ணதாசன் போன்றவர்கள் பாட்டுக் கலையை வளர்க்க உதவினர்.

**எ.கா.**

பாரதிதாசன் - குயில்

சுரதா – சுரதா கவிதை

பொன்னடியான் - முல்லைச் சரம்

போன்றவை மரபுக் கவிதைக்கு உரம் ஊட்டின.

கண்ணதாசன் - கண்ணதாசன்

போன்றவை பாமர மக்களும் இலக்கியத்தை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் பயன்பட்டன.

**சீர்திருத்தப்பணி**

இராஜாராம் மோகன்ராய்

இவர் ஒரு முற்போக்கு எழுத்தாளர். இவர் சமுதாயச் சீர்கேடான உடன்கட்டை ஏறுதலை ஒழிக்க அரும்பாடு பட்டார். இதன் பயனால் பெண்டிங் பிரபு உடன்கட்டை ஏறுதலைத் தடை செய்தார்.

**காந்தியடிகள்**

இவர் நடத்திய 'யங் இந்தியா', 'ஹரிஜன்' ஆகியன தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், மது விலக்கு போன்றவற்றில் கவனம் செலுத்தியது.

**இராஜாஜி**

இராஜாஜி நடத்திய 'விமோசனம்' குடிப் பழக்கத்தை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.

**பெரியார்**

இவர் நடத்திய 'குடியரசு', 'விடுதலை' இதழ்கள் சமுதாயத்தின் கண்மூடிப் பழக்கங்களைக் கண்டித்தன. சாதி சமயக் கேடுகளை உணரவைத்தன. மேலும் பெண்ணுரிமை, பெண் கல்வி, பெண் முன்னேற்றம், பெண் மறுமணம் போன்றவற்றை வலியுறுத்தியது.

**ஜீவானந்தம்**

இவர் நடத்திய ஜனசக்தி பொதுவுடைமை இயக்க இதழாகும். இது சமுதாய ஏற்றத் தாழ்வை ஒழிக்கவும், விவசாயிகள், தொழிலாளிகள் நலன்களை ஓங்கச் செய்யவும் அரும்பாடு பட்டது.

**தொழில்துறை**

கல்வி, மருத்துவம், சட்டம், வணிகம், சோதிடம், கிராம நலம், திரைப்படம்போன்ற பல தொழில் துறைகளிலும் சிறப்பான இதழ்கள் தோன்றி அத்துறைகளில் பணியாற்றுவோருக்கும், பொது மக்களுக்கும் பெரும்பயன் விளைவித்து வருகின்றன.

**பிற பொது நலப் பணிகள்**

இதழ்களே உலக, ஊர் நடப்பை தெரிந்து கொள்ளஈ உலகத்தோடு ஒட்ட ஒழுக உதவுபவை. உலகின், நாட்டின் ஒரு கடைக்கோடியில் நடக்கும் செய்திகளை மறுகோடியில் இருப்பவர் அறிந்து கொள்ள பயன்படுபவை இதழ்களே ஆகும்.

**பயன்கள்**

1. இன்றைய நிகழ்ச்சிகள்

அன்றாட

2. வானொலி

3. தொலைக்காட்சி

4. திரைப்படக் காட்சி விவரங்கள்

5. அங்காடி நிலவரம்

போன்றவற்றையும்

6. வேலைவாய்ப்புகள்

7. வீடுகள் தேவை

8. மணமக்கள் தேவை

9. புதிய கட்டிடங்கள் விற்பனை, வாடைகைக்கு

10. குற்றப் பின்னணி

11. அனாதையாக இறந்தோர் யார் என அறிந்து கொள்ள

12. தொலைந்து போனவர்களைக் கண்டறிய

13. குற்றவாளிகளைக் கைது செய்ய

14. வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களைத் தெரிந்து கொள்ள

15. மருத்துவ சிகிச்சை

16. கண்தானம், உடலுறுப்பு தானம் பற்றி அறிய

17. இரத்தானம் பெற

18. வரி விளம்பரங்களை வெளியிட

19. அரசியல் நிலவரங்களை அறிந்து கொள்ள

20. ஒன்றைப் பற்றிய விமர்சனத்தை முன் வைக்க

இதழ்கள் உதவுகின்றன.

# இதழியல் விதிகள்

**1. பொறுப்புடைமை**

வாசகர்களைக் கவர பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றும் உரிமை பத்திரிகைக்கு உண்டு. ஆனால் இது பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பொறுப்புணர்ச்சியோடு செயல்படும் வகையில் அமைய வேண்டும். வாசகர்கள் விரும்புகிறார்கள் என்ற போர்வையில் தரமற்ற, கவர்ச்சியான படங்களை வெளியிட்டு பொறுப்பில்லாமல் செயல்படக் கூடாது.

**2. பத்திரிகைச் சுதந்திரம்**

மனித இனத்தின் தலையாய உரிமைகளில் ஒன்று பத்திரிகை சுதந்திரம். சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படாமல், எதனைப் பற்றியும் வெளியி, விவாதிக்க, பத்திரிகைகளுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். செய்திகள் பிறந்த மேனிக்கு மறைக்கப்படாமல் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். செய்திகளை மறைத்து இருட்டடிப்பு செய்தல் பிழையான ஒன்றாகும்.

சுதந்திரம் இல்லாமல் தணிக்கை செய்யப்பட்டு வரும் பத்திரிகைகள் கால் ஒடிந்து போனவருக்குச் சமமாகும். எனவே நிருபர்களின் கையையும், பத்திரிகையின் வாயையும் ஒரு போதும் மூடக் கூடாது. ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

**தனித்துவம்**

பொது மக்கள் நலனுக்குக் கேடு விளைவிக்காமல் சுதந்திரமாக பத்திரிகைகள் தனித்து இயங்க வேண்டும். தனித்து இயங்கும் உரிமையைப் பயன்படுத்தும் போது இரண்டு கருத்துகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

அவை

1. தன்னலம் கருதி பத்திரிகைகள் செய்திகளை வெளியிடல்

2. தெரிந்தே உண்மைக்குப் புறம்பாக தலையங்கம் எழுதுவதோ፦ செய்திகளுக்குத் தவறாக விளக்கம் கொடுப்பதோ, விமர்சித்தல்

என்பனவாகும்.

எனவே பத்திரிகைகள் வாசகர்கள் விரும்பி, விலைக்கு வாங்கிப் படிக்கத் தூண்டும் வகையில் தனித்தன்மையுடன் வெளியிடப்பட வேண்டும்.

**நம்பிக்கை, உண்மை, துல்லியம்**

பத்திரிகைகள் விற்பனைக்காகவோ, விளம்பரத்திற்காகவோ, கவர்ச்சிக்காகவோ செய்திகளை வேண்டுமென்றே திரித்தோ, வேறு பொருள்படும் வகையிலோ வெளியிடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும். செய்திகளை ஒட்டியே அதற்குத் தலைப்புத் தர வேண்டும். பத்திரிகைகள் நம்பிக்கையாகவும், உண்மையாகவும், துல்லியமாகவும் செய்திகளை வெளியிட வேண்டும்.

**நடுநிலைமை**

பத்திரிகைகள் நடு நிலையில் நின்று செய்திகளை வெளியிட வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொதுவான செய்திகளை விருப்பு, வெறுப்பின்றி வெளியிட வேண்டும். பத்திரிகைகள் உரிய அறத்தை மீறக் கூடாது. ஆதரமின்றி எவரையும் குற்றம் சாட்டுவதோ, பெயருக்கும், புகழுக்கும் களங்கம் கற்பிப்பதோ நியாயம் ஆகாது. மற்றவர்களுக்கும் விளக்கம் கூற வாய்ப்பு தரவேண்டும். தவறுகள் ஏற்படின் திருத்திக் கொள்ளத் தயங்கக் கூடாது. வாசகர்களின் குறை நிறைகளை வெளியிட்டு சமுதாயத் தொண்டு புரிதல் நலம் பயக்கும்.

**பண்பாடு**

பண்பாடு என்பது தமிழிலக்கியமான கல்த்தொகையில் ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ என்கிறது. பண்பாடு என்ற சொல்லை Culture என்ற ஆங்கிலச் சொல்லாக்கி அதற்குக் கலாச்சாரம் என்ற மொழி பெயர்ப்பினை வழங்கி வந்தனர். ரசிகமணி டி.கே.சி. கலாச்சாரம் என்ற சொல்லை ‘பண்பாடு’ என்று மொழி பெயர்த்து பயன்பாடடிற்குக் கொண்டு வந்தார்.

பத்திரிகைகள் செய்திகளைப் பண்பு நெறிகளிலிருந்து விலகாமல் வெளியிட வேண்டும். குறிப்பாகக் குற்றங்கள், கொலைகள் போன்றவற்றை வெளியிடும் போது வாசகர்களின் விலங்கு உணர்வைத் தூண்டாது சமுதாயம் கட்டிக் காக்கும் மரபுகளைக் காப்பதோடு பண்பாடுகளையும் சீர்குலைக்காமல் வெளியிட வேண்டும்.

குற்ற பாலுணர்வுச் செய்திகளை வெளியிடாமல் இதயமுடைய இதழ் எனப் பெயர் பெறும் வகையில் பணியாற்ற வேண்டும். மாறாக செயல்பட்டால் இழிநிலை இதழியல், மஞ்சள் பத்திரிகை என வாசகர்கள் மத்தியில் பெயர் ஏற்படும். அந்நிலை உருவாகாமல் பத்திரிகைகள் பாடுபட வேண்டும்.

# பத்திரிகைகளின் பொறுப்புகளும், கடமைகளும்

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பர். எனவே பத்திரிகைகள் மக்களுக்குச் செய்திகளைத் தருமுன்னர் தீர விசாரித்து கவனமாகச் செய்திகளை வெளியிடும் பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நாடு நலம் பெற பத்திரிகைகளின் பங்கு மகத்தானது. இதற்குக் காரணம் பத்திரிகைகள் ஆற்றல் மிக்கத் தொடர்புச் சாதனமாகத் திகழ்வது அமைகிறது. எனவே பத்திரிகைகள் கடமை, பொறுப்புணர்ச்சியோடு செயல்படுவது அவசியமாகும்.

**பொறுப்புகள்**

பத்திரிகைகள் மீது மக்கள் அபார நம்பிக்கை வைத்திருப்பதால்: அவை சொன்னவற்றை அப்படியே நம்பி விடுகின்றனர். செய்தித்தாளில் வெளிவருபவை எல்லாம் உண்மையானது தானா? என அறிந்து கொள்ளும் வாய்ப்பு பொது மக்களுக்கு மிகக் குறைவே. எனவே பத்திரிகைகள்

1. ஐயப்பாட்டிற்குரிய செய்திகளை
2. சாதி உணர்வைத் தூண்டும் வகையிலான செய்திகளை
3. தவறான, ஆதாரமற்ற செய்திகளை
4. சமுதாயத்தில் அமைதியைக் கெடுக்கும் வகையிலான செய்திகளை
5. சமயப் பூசல்களை வளர்க்கும் வகையிலான செய்திகளை

வெளியிடக் கூடாது.

**கடமைகள்**

பத்திரிகைகள்

1. நாட்டின் நலன்
2. நாட்டின் குறிக்கோள்கள்
3. நாட்டுப் பற்று

4. பொதுமக்கள் நலம் பேணல்

ஆகிய உணர்வுகளை மனதில் கொண்டு செயல்படுவது பத்திரிகையாளரின் கடமைகளாகும்.

மேலும்

1. குற்றச் செய்திகளை வெளியடும் போது வாசகர்களின் கெட்ட உணர்வுகளைத் தூண்டாமல் பண்பாட்டைக் காக்கும் வகையில் தக்க சொற்களை எழுதி வெளியிட வேண்டும்.

2. மக்களின் குறைகளை அரசுக்கும்

3. அரசின் குறைகளை மக்களுக்கும் - தெரியப்படுத்தும் கடமை உணர்வு அவசியம்.'..

4. செய்தித் தலைப்புகளை உள்ளடக்கத்தை ஒட்டியே அமைக்க வேண்டும்.

5. பத்திரிகைகள் இரு பொருள்படும்படியான சொல்லாடல்களைத் தவிர்த்து எழுதுவது மிகப் பெரிய கடமையாகும்.

6. பத்திரிகைகள் விற்பனைக்காக பாலியல் உணர்வைத் தூண்டும் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

7. பத்திரிகைகளில் தவறுகள் ஏற்படின் திருத்திக் கொள்ள வேண்டும்.

8. பொது மக்களுக்கு அறிவை வளர்க்கும் செய்திகளையும்

9. போட்டித் தேர்விற்கான குறிப்புகள், மாதிரி வினா- விடை - போன்றவற்றையும் வெளியிடல் அவசியமாகும்.

10. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை மனதிலிறுத்திக் கொண்டு பத்திரிகைகள் செயலாற்ற வேண்டும்.

# மக்களாட்சியில் பத்திரிகைகளின் பங்கு

மக்களாட்சியின் நான்காவது தூண் பத்திரிகை ஆகும். தற்கால வாழ்க்கையில் ஆற்றல் மிக்க சக்தி பத்திரிகைகள். பத்திரிகைகளிடம் எல்லையற்ற சக்திகளும் பொறுப்புகளும் உள்ளன. எனவே பத்திரிகைகளை மதிக்க வேண்டும் என்கிறார் ஜவகர்லால் நேரு.

பொது மக்களின்

1. கருத்தை உருவாக்குவதிலும்,

2. செப்பனிடுவதிலும்

3. பிரதிபலிப்பதிலும் - மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பத்திாழகை மிகவும் இன்றியமையாதன.

**விடுதலை வேள்வியில்**

நம் நாட்டில் விடுதலை இயக்கம் நல்பெற்ற போது பத்திரிகைகள் வரலாறு படைக்கும் வகையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றின. விடுதலை இயக்கத்தை நடத்திய பல தலைவர்கள் தங்களது இயக்க வளர்ச்சிக்குத் தாங்களே பத்திரிகைகள் நடத்தினர். தவிர பல பத்திரிகையாளர்கள் நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும் உடையவர்களாக இருநதுள்ளனர். நாடு விடுதலை பெற்ற பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை உணர்ந்து செயல்படத் தொடங்கின.'

**சமுதாயக் கல்வியில்**

நம் நாட்டில் பெரும்பாலானோர் கல்வியறிவு அற்றவர்களாகவே உள்ளனர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்க்கும் நாட்டு நடப்பு புரிவதில்லை. எனவே அவர்களுக்குத் தேவையான சமுதாயக் கல்வியைப் பத்திரிகைகள் தருகின்றன. இவை செய்திகளை மட்டுமே வெளியிடாது நாட்டின் நலனோடு தொடர்புடைய கட்டுரைகளையும் வெளியிடுகின்றன. தலையங்கம் எழுதியும், முக்கியமானவர்களின் நேர்காணல்களை வெளியிட்டும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. மக்களின் ஐயப்பாடுகளை நீக்கி ஓர் ஆசிரியராக மக்களாட்சியில் பத்திரிகைகள் திகழ்கின்றன.

**எதிர்க்கட்சிப் பணியில்**

‘மூக்கணாங் கயிறு போடாத மாடு வண்டியை இழுப்பது போல’ எதிர்க் கட்சியில்லாத ஆட்சியும் செயலாற்றும். எனவே பத்திரிகைகள் எதிர்க்கட்சியின் பணியைச் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்படும் போது ஆளுங்கட்சியின் செயற்பாடு சிறப்பாக அமையும். பத்திரிகைகள் அரசின் பொது நலனுக்கு எதிரான போக்குகளை வெளிச்சம் போட்டுக் காட்டி கட்டுப்பாடுக்குள் செயல்பட அரசினைத் துர்ண்ட வேண்டும். பொது மக்களின் கருத்துக்குப் பிரதிநிதியாகப் பத்திரிகைகள் செயல்படும். இதனை அரசு கட்டுப்படுத்தக் கூடாது என்கிறார் காந்தியடிகள்.

**வளர்ச்சிப் பணியில்**

பொறுப்புள்ள பத்திரிகைகள் அரசின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து செய்திகளை வெளியிட வேண்டும். பத்திரிகைகள் சாதி, மத, வேறுபாடுகளுக்கு, ஏற்றத் தாழ்வுகளுக்கு முக்கியத்துவமளிக்கக் கூடர்து. வாசகர்களிடையே முற்போக்கான எண்ணத்தை வளர்த்து வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். பொது மக்களுக்கு, சுயநலத்தோடும், குறுகிய நோக்கங்களோடும் செயல்படும் சக்திகளை இனம் காட்ட வேண்டும். வாசகர்களை தீய பாதைக்குக் கொண்டு செல்லக் கூடாது.

## பயிற்சி வினாக்கள்

1. மக்கள் தொடர்புச் சாதனங்கள் எவை? விளக்குக.

2. தொலைக் காட்சி இயங்கும் முறை குறித்து எழுதுக.

3. இந்தியாவில் தொலைக் காட்சி வரலாறு குறித்து கட்டுரைக்க.

4. வானொலியின் நோக்கங்கள் எவை?

5. வானொலி நிகழ்ச்சிகள் சிலவற்றை எழுதுக.

6. வானொலியின் பயன்கள் குறித்து எழுதுக.

7. திரைப்பட வளர்ச்சி பற்றி விளக்குக.

8. மக்கள் தொடர்புக் கருவிகளில் பத்திரிகைகளின் பங்கினை மதிப்பிடுக.

9. பத்திரிகைகளின் பணிகள் குறித்து கட்டுரை வரைக.

10. இதழியல் விதிகளை விளக்கி எழுதுக.

11. இதழ்களின் இலக்கியப் பணிகள் குறித்து எழுதுக.

12. பத்திரிகைகளின் பொறுப்பு கடமைகள் பற்றி விரிவான விளக்கம் தருக.

13. மக்ளாட்சியில் பத்திரிகைகளின் பங்கினை மதிப்பிடுக.

அலகு - 2

## செய்தித் தாளின் தோற்றம்

ஆதிகாலத்தில் ஒலி, சைகைகள் மூலம் செய்திகளை வெளிப்படுத்தினர். பேச்சு மொழி வளர, வளர செய்திகளைச் செவி வழிப்படுத்தினர். எழுத்து மொழி வளரஈ வளர ஓவியங்கள் மூலம் செய்திகளைத் தெரிவித்தனர்.

### இதழியலின் தந்தை

கி.மு.106இல் சிசரோ என்ற அரசர் பிறப்பு, இறப்பு விவரங்களைத் தனது அரண்மனை வாசலில் எழுதி வைக்கச் செய்துள்ளார். எனவே இவரே இதழியலின் தந்தை என அழைக்கப்பட்டார்.

ரோம் நாட்டரசன் ஜுலியஸ் சீசரே இதழியலின் தந்தை என்ற கருத்துமுண்டு. கி.மு,60இல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' என எழுதி பொதுவிடங்களில் வைத்தார். போர் நடைபெற்ற காலங்களில் போர்ச் செய்திகளும் எழுதி வைக்கப்பட்டன.

இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுக்களே இதழ்களின் முன்னோடி எனலாம். இவை புத்தமதக் கொள்கைகளையும், அரச கட்டளைகளையும் பரப்புவதற்கு பயன்பட்டன.

### காகிதமும் அச்சுக்கலையும்

இதழியலின் வளர்ச்சிக்குக் காகிதமும் அச்சுக் கலையும் பெரிதும் துணை நின்றது. கி.பி 105இல் முதன் முதலில் மல்பெரி பட்டையிலிருந்து சாய்லன் என்ற சீனாக்காரர் காகிதம் செய்வதைக் கண்டறிந்தார். சீனர்களோடு வாணிகத் தொடர்பு கொண்டோர் காகிதம் செய்யும் கலையைக் கற்றுக் கொண்டனர். கி.பி 795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகித ஆலையை நிறுவினர்.

அச்சுக்கலையும் முதன் முதலில் சீனாவில் தான் தோன்றியது. மர எழுத்துக்களில் மை தடவி தாளில் அச்சிட்டனர். இதனால் தான் அச்சகத்திற்கு பிரஸ் என்ற பெயர் வந்தது. பின்னர் கி.பி. 1041இல் பிசெங் என்ற பெயர் கொண்ட சீனர் களிமண்ணில் எழுத்துக்களை எழுதி, சுட்டு தகடு சுற்றி, கடினப்படுத்தி அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். பின் அச்சுக்

கலையில் புரட்சி ஏற்பட்டது. கி.பி.1450இல் ஜான் கூடன்பர்க் என்பார் முதன் முதலில் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். இவர் ஜெர்மன் நாட்டுக்காரர் ஆவார்.

## அச்சிட்ட இதழ்கள்

1609இல் உறவு என்ற பெயரில் வந்த இதழே முதல் அச்சு இதழாகும். அதோடமையாது தொடர்ந்து வெளிவந்த இதழ் என்ற பெருமைக்குரியதாகவும் அமைந்தது. இது ஜெர்மன் நகரில் ஸ்ட்ராஸ்பெர்க் நகரில் வெளியிடப்பட்டது. பின்னர் பிரான்சு, ஹாலந்து போன்ற நாடுகளிலும் அச்சிட்ட இதழ்கள் வெளிவந்தன.

## செய்தித்தாள்

கி.பி.1621இல் இங்கிலாந்தில் செய்தித் தாள்கள் வெளிவந்தது. தனிச் செய்தித் தாளாக கொரான்டோ வெளிவந்தது. 1665இல் வாரம் இருமுறை வரும் செய்தி இதழாக ஆக்ஸ் போர்டு கெசட் அமைந்தது.

1702இல் தி டெய்லி கோரண்ட் நாள்தொறும் வெளிவரும் செய்தித்தாளாக முதன் முதலில் வெளிவந்தது. அமெரிக்காவில் பாஸ்டன் செய்திக் கடிதம் என்ற பெயரில் ஜான்கேம்ப் பெல் என்பவர் முதல் செய்தி இதழை வெளிக் கொணர்ந்தார். 1703இல ருஷ்யாவில் இதழ்கள் வெளியீடு தொடங்கியது.

## இந்திய இதழியல்

இந்திய இதழியல் வரலாறு பல மொழிகளின் வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்திய இதழியல் வளர்ச்சியில் ஒரு ஒருமைப்பாடு உள்ளதைக் காணமுடிகிறது.

### இந்திய இதழியியல் மூலங்கள்

முதன் முதலில் கல்வெட்டுகள் வாயிலாகச் செய்திகளை மக்கட்குத் தெரிவித்தவர் அசோகரே. இவரைப் பின்பற்றியே பிற இந்திய அரசர்கள் கல்வெட்டுகள் மூலம் செய்தியயை மக்களுக்குத் தெரிவித்தனர்.

### செய்தித் தொடர்பு முறைப்படுத்தல்

செய்தித் தொடர்புகளை முகம்மதிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் முறைப்படுத்தப்பட்டதைக் காணமுடிகிறது. இதில் செய்தி எழுத்தாளர்கள் என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தியதைச் சிறப்பாகச் சுட்டலாம். இப்பிரிவினருக்கு ஔரங்கசீப் மிகுந்த சுதந்திரத்தை அளித்திருந்தார். கிழக்கியந்திய நிறுவனத்தினரும் செய்தி எழுத்தாளர்களைப் பயன்படுத்தி இங்கிலாந்து அரசுடன் தொடாபு கொண்டனர்.

### முதல் அச்சகம்

தமிழ்நாட்டில் கி.பி.1713இல் தரங்கம்பாடியில் முதல் அச்சகம் அமைக்கப்பட்டது. முதல் காகித உற்பத்தி ஆலை கி.பி.1715இல் பொறையாறில் அமைக்கப்பட்டது.

### முதல் செய்தித்தாள்

கி.பி. 1780ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் நாள் முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வங்காள கெசட் அல்லது கல்கத்தா பொது விளம்பரத்தாள் என்ற பெயரில் வெளியிட்டார். இது ஓர் வார இதழாகும். இவ்விதழ் 12'' x 8'' அளவில் இரு தாள்களைக் கொண்டதாக இருந்தது. இவ்விதழின் உள்ளடக்கமாக இங்கிலாந்து பத்திரிகையில் வெளியிட்ட செய்திகள், வாசகர் கடிதங்கள், விளம்பரங்கள் ஆகியனவாகும்.

இவை எள்ளல் நடையில் எழுதப்பட்ட கிழக்கிந்திய அலுவலர்களின் வாழ்க்கையையும் உள்ளடக்கியதாகத திகழ்ந்தது.

அன்றைய தலைமை ஆளுநராக இருந்த வாரன்ஹேஸ்டிங் கல்கத்தா கெசட் இதழுக்குத் தடை விதித்ததோடு, நிதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, ஹிக்கியைச் சிறையிலடைக்கவும் செய்தார்.- ஹிக்கி சிறையிலிருந்தே பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தினார். தனது நிறைந்த செல்வம் அனைத்தையும் இழந்த போதும் மனம் தளராமல் வீரத்தோடும், சுதந்திர உணர்வோடும் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தினார்.

பின்னர் இந்தியா கெசட், வங்காள ஜெர்னல், ஓரியண்டல் மேகசின் அல்லது கல்கத்தா அம்யூஸ்மென்ட, கல்கத்தா கிரானிகல் ஆகிய பத்திரிகைகள் அரசின் ஆதரவோடு வெளிவந்தது.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியே இந்திய இதழியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

## சென்னையில் இதழ்கள்

சென்னை கூரியர் என்ற ஆங்கில வார இதழை கி.பி.1785 அக்டோபர்12இல் ரிச்சர்டு ஜான்சன் அரசின் ஆதரவோடு வெளியிட்டார்.

1791இல் ஹார்கரு என்ற இதழை ஹயூக்பாய்டு என்பரால் வெளியிடப்பட்டது. 1795இல் வில்லியம்ஸ் சென்னை கெசட்டையும், ஹாம்பரீஸ் இந்தியன் ஹெரால்டு இதழையும் நடத்தி வந்தனர்.

### மும்பை இதழ்கள்

மும்பையில் முதன் முதலாக 1789இல் பம்பாய் ஹெரால்டு வெளியிடப்பட்டது. கி.பி.1790இல் லூக் ஆஸ்பர்னர் பம்பாய் கூரியர் என்னும் இதழை நடத்தினா. இதழ்கள் பெருகின. ஆட்சியாளர்கள் இதழ்களைக் கண்காணிக்கத் தொடங்கினர். இதன் விளைவாக இதழ்களுக்கான ஒழுங்கு முறைகள் 1799இல் தலைமை ஆளுநராகப் பொறுப்பு வகித்த வெல்லஸ்லி பிரபுவால் கொண்டு வரப்பட்டது.

**இதழ்களின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு**

1. ஒவ்வொரு இதழிலும் அதனை அச்சிடுவோர், ஆசிரியர், உரிமையாளர் பெயர்களை வெளியி வேண்டும்.

2. இதழாசிரியர், உரிமையாளர் தங்கள் முகவரிகளை அரசின் தலைமைச் செயலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

3. எல்லாச் செய்திகளையும் தலைமைச் செயலாளரிடம் காட்டி முன் ஒப்புதல் பெற்றே வெளியிட வேண்டும்.

4. இதழ்களை ஞாயிற்றுக் கிழமை வெளியிடக் கூடாது.

5. அரசின் செயலாளர்தான் இதழ்களின் கட்டுப்பாட்டாளர்.

இவ்விதிகளை மீறுவோர் நாடு கடத்தப்படுவோர்

இக்கட்டுப்பாடுகளால் ஏறத்தாழ இந்திய இதழியல் முடங்கியது.

## இதழ்களின் வளர்ச்சி

கி.பி.1813இல் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக வந்த போது இதழ்கனின் மீதிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார். பின்னர் இதழ்களின் வளர்ச்சி ஏறுமுகமாக அமைந்தது.

இந்தியரால் நடத்தப்பட்ட முதல் இதழ் வங்காள கெசட் ஆகும். இவ்விதழின் ஆசிரியர் கங்காதார் பட்டாசடசார்யா. இது ஆங்கில வார இதழாகும். பின்னர் கார்டியன் திக்தர்சன், சமார்சார்தர்பன் போன்ற இதழ்கள் வெளியிடப்பட்டன. அன்றைய இதழ்களின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்களில் ஜேம்ஸ் பக்கிங்காம், இராஜாராம் மோகன்ராய் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்.

**ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம்**

இவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குக் கப்பலின் தலைவராக வந்தவர். இவர் கி.பி.1818இல் கல்கத்தா ஜெர்னல் என்ற வாரமிருமுறை வெளிவந்த இதழை நடத்தினார்.

இதன் நோக்கமாக அரசின் குற்றங்குறைகளை வெளிப்படுத்தித் திருத்துவதே ஆகும். இதனை பக்கிங்காம் வெளிப்டையாக அறிவித்தர்.

இவ்விதழில்

1. மக்களின் குறைகள் வெளியிடப்பட்டது.

2. கிழக்கிந்திய நிறுவனத்தின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டது.

3. உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்து எழுதினார்.

இதனால் இவரை இங்கிலாந்துக்கே ஆங்கில அரசு திரும்ப அனுப்பியது. அவர் அப்பொழுதும் ஓயாமல் அரசுக்கு எதிராக எழுதினார். ஓரியண்டல் ஹெரால்டு என்ற இதழைத் தொடங்கி இந்தியர்களுக்குப் பயன்படும் வகையில் எழுதி வந்தார்.

**இராஜாராம் மோகன்ராய்**

இவர் ஆங்கிலத்தில் பிராமணிகன் மேகசின் என்ற இதழையும், வங்காள மொழியில் சம்பத் கௌமுதி என்ற இதழையும், பெர்ஷி மொழியில் மீரட் அல்-அக்பர் என்ற இதழையும் நடத்தினார்.

இவரின் எழுத்துகள்

1. உருவ வழிபாடு

2. உடன்கட்டை ஏறுதல்

3. பலதார மணம்

4. சாதிய முறை

ஆகியனவற்றைப் போக்கும் வகையில் அமைந்திருந்தது.

இவர் சமூக சீர்திருத்தவாதியாகவும், நாட்டின் நலம் பேணுபராகவும் செய்த தொண்டுகள் மிகப்பல.

**இதழ்களின் வளர்ச்சிக்கான காரணங்கள்**

1. சில ஆங்கிலேய ஆளுநர்களின் விரிந்த மனப்பான்மை

2. நாட்டின் அகப்புறச் சூழல்

3. ஆங்கிலக் கல்வி

4. தந்தி முறை வளர்ச்சி

ஆகியன இந்திய இதழ்கள் வளர்ச்சியுறக் காரணங்களாகும்.

**இதழ்களின் வளர்ச்சிக்கு இடையூறுகள்**

1. வாய்ப்பூட்டுச் சட்டம் (கேக்கிங் சட்டம்)

2. தாய் மொழிப் பத்திரிகைச் சட்டம்

3. 1980இல் செய்தித் தாள் சட்டம்

4. இதழியல் சட்டம்

ஆகியன இதழ்களின் வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்தது.

கி.பி.1882இல் ரிப்பன் பிரபு இந்திய இதழ்களுக்கு அதிக ஊாமை அளித்தார். கி.பி. 1885இல் இந்திய தேசியக் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இதன் வளர்ச்சிக்கு இதழ்கள் உதவின. இதழ்களின் வளர்ச்சிக்கு காங்கிரஸ் இயக்கம் துணை செய்தது. சென்னையில் இந்து, சென்னை மெயில் என்ற இரு ஆங்கில இதழ்கள் தோன்றின. தமிழகத்தில் வீரராகவாச்சாரி, சுப்பிரமணிய ஐயர் போன்றோர் இதழியல் வளரப் பாடுபட்டனர்.

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கு

1920ஆம் ஆண்டு முதல் இந்திய விடுதலை இயக்கம் பல போராட்டங்களைச் சந்தித்தது. அவற்றுள் சில ஒத்துழையாமை இயக்ம், சத்தியாக்கிரகம், அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு, உப்பு சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு, ரௌலட் கட்ட எதிர்ப்பு, கைமன் குழு எதிர்ப்பு, கிலபாத் இயக்கம் ஆகும். இப் போராட்டங்கள் அனைத்திலும் இந்திய இதழ்கள் தமக்குரிய பங்களிப்கைச் செய்ததன் விளைவினால் வெற்றியே கிடைத்தது. இதனால் ஆங்கிலேய அரசு பல அடக்கு, ஒடுக்கு முறைகளை இதழ்களின் மீது திணித்தது. அதையும் மீறி இந்திய விடுதலைக்காக இதழ்கள் குரல் கொடுத்தே வந்தன.

### போராட்டங்கள்

### சைமன் குழு

மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தத்தில் மாறுதல்கள் செய்ய சைமன் குழு அமைக்கப்பட்டது. இக்குழு செல்லுமிடங்களிலெல்லாம் இந்திய மக்களும், தலைவர்களும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அவர்கள் வருகையை எதிர்த்துப் போராட்டத்தையும் நடத்தினர். இச்செய்திகளை இந்திய இதழ்கள் வெளியிட்டு நாடு முழுவதும் மக்களிடம் விடுதலை வேட்கையையும், போராட்டக் குணத்தையும் உருவாக்கியது.

### ரௌலட் சட்டம்

ரௌலட் சட்டம் 1920இல் கொண்டு வரப்பட்டது. இது பேச்சு, எழுத்து உரிமைகளைத் தடைசெய்தது.

அந்நிலையில் இந்திய இதழ்கள அக் கருப்புச் சட்டத்தின் மீது எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட இதழ்களின் ஒரங்களில் கருப்புக் கோடுகள் அச்சிட்டு வெளியிட்டன.

### தண்டியாத்திரை

1930இல் வரலாற்றுச் சிறப்பு மிக்க தண்டி யாத்திரை தொடங்கியது. அப் போராட்டத்தில் காந்தியடிகளுடன் கலந்து கொண்ட பலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பிற இடங்களிலும் இப் போராட்டம் தொடர்ந்தது. இது பற்றிய செய்திகள் புகைப்படத்துடன்

இதழ்களில் வெளிவந்து விடுதலை உணர்வைத் தூண்டின. இது ஆங்கிலேயருக்கு மிகப் பெரிய தலை வலியாக அமைந்தது.

## அவசரச் சட்டம்

1930 மே மாதம் இதழ்கள் அவசரச் சட்டம் ஆங்கிலேய அரசால் கொண்டு வரப்பட்டது. இதன் ஆபத்தை உணர்ந்து இந்திய இதழாளர்கள் ஒன்று கூடினர். இச்சட்டம் கேசரி இதழுக்கு ரூபாய் ஐயாயிரம் தண்டம் விதித்தும், பாம்பே கிரானிக்கள் இதழுக்கு ரூபாய் பதினைந்தாயிரம் பொறுப்புத் தொகை கட்ட வைத்தும் அச்சுறுத்தியது. இந்நிலையில் காங்கிரஸ் புல்லட்டின் என்ற இரகசியச் செய்தித்தாள் பம்பாயிலிருந்து வெளிவந்தது. இதில் விடுதலைப் போராட்டச் செய்திகள் ஆங்கில அரசுக்குத் தெரியாமல் இடம்பெறறது.

1927இல் சதானந்தம் என்பவர் ∴பிரீ பிரஸ் ஆப் இந்தியாவைத் தொடங்கினார். இதுவே இந்தியர்களின் முதல் செய்தி நிறுவனமாகும். இதனையும் அவசரச் சட்டம் நெருக்கியது. இதனால் உறுப்பினராயிருந்த பல இதழ்கள் விலகிக் கொண்டன. 1930 சூன் 13இல் ∴பிரீ

பிரஸ் ஜர்னல் என்ற ஆங்கிலச் செய்தித் தாள் தொடங்கப்பட்டது. இதன் விலை அரையணா. இதில் விடுதலைப் போராட்டச் செய்திகள் அதிகமாக இடம்பெற்றது. இவ்விதழின் தலைப்புக்களும், செய்தித் தாளமைப்பும், செய்தி வெளியிடும் முறையும் சிறப்பாகும்.

## இலண்டன் வட்டமேசை மாநாடு

இலண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள், பம்பாய் கிரானிக்கள், டைம்ஸ் ஆப் இந்தியா, ஸ்டேட்ஸ்மேன், அமிர்த பஜார் பத்ரிகா, டைம்ஸ் ஆப் இந்தியா, மெயில், லீடர், பயோனியர் ஆகிய இந்திய இதழ்களின் சார்பில் அவற்றின் செய்தியாளர்கள் கலந்து கொண்டனர். இம் மாநாடு பற்றிய செய்திகளைத் தங்கள் இதழ்களில் அவர்கள் வெளியிட்டனர்.

## காந்தியடிகளின் பங்கு

காந்தியார் நடத்திய வரிகொடா இயக்கம், அந்நியப் பொருட்கள் புறக்கணிப்புப் போராட்டங்களின் போது இந்திய இதழ்களைக் குற்றவியல் தடுப்புச் சட்டம், அயல் நாட்டு உறவுகள் கட்டம் ஆகியவற்றால் கட்டிப் போட்டது. ஆனாலும் இந்தியர்களின்

போராட்டங்களும், இதழ்களின் வாயிலாக செய்தி பரப்புதலும் தொடர்ந்தது. ஹரிஜன் சேவக் என்ற குஜாராத்தி இதழைத் தொடங்கி அதில் அவரின் கொள்கைகளை பரப்பி வந்தார். ஹரிஜன் இதழ் வெள்ளிக் கிழமை தோறும் வெளிவந்தது. இதில் தீண்டாமைக் கொள்கைகளையும், சமுதாயக் கொள்கைகளையும் தாங்கி வந்தது.

## இதழ்களின் வளர்ச்சி

1935ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி 7 மாநில சட்டசபைகளில் வெற்றி பெற்று அரசமைத்தது. இப்பகுதியில் இதழ்களுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. பொறுப்புத் தொகை நீக்கப்பட்டது, ஏற்கனவே வாங்கிய தொகைகள் திருப்பி அளிக்கப்பட்டன. பல நாளிதழ், வார இதழ்கள் தோன்றின.

**சான்று**

சண்டே ஸ்டாண்டேர்டு, பாரத் ஜோதி, வந்தே மாதரம், பீபிள்ஸ் வார் – பம்பாய்

ஜுகாத்தர் - கல்கத்தா

நேஷளல் ஹெரால்டு - இலக்னோ

கல்கி – சென்னை

தினத்தந்தி – மதுரை

**கழகங்கள்**

1939இல் இந்தியா மற்றும் கீழைநாட்டு இதழ்கள் கழகம் (Indian & Eastern News Paper Society – IENA)

1941இலி இந்திய மொழிச் செய்தித் தாள்கள் கழகம் - Indian Language Newspapers Association

ஆகியன தொடங்கப்பட்டன.

**ஆகஸ்டுப் போராட்டம்**

இந்திய விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டம் ஆகஸ்டுப் போராட்டமே ஆகும். 1942இல் ஆகஸ்டுப் போராட்டங்களின் போது 96 செய்தித் தாள்களைப் பல்வேறு குறிறங்களைச் சாற்றி அரசு நிறுத்தி வைத்தது. காந்தியார் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை இறுதியாகத் தொடங்கினார். அரசம் பல அடக்கு முறைகளைக் கொண்டு வந்தது. இந்தியர்கள் வாழ்வா? அல்லது சாவா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாடு முழுவதும் பல கொந்தளிப்புகள் உருவாகின. அரசு இரும்புக் கரம் கொண்டு இதழ்களை ஒடுக்கியத. அந்நிலையில் கட்டுப்படுத்தப்பட்ட செய்தித் தாள்களை வெளியிடுவதை விட அவற்றை நிறுத்தி விடலாம் என்ற முடிவுக்கு வந்ததன் விளைவு ஹரிஜன், நேஷனல் ஹெரால்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகியன சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டது, ஆனாலும் போராட்டங்கள் முன்னை விடத் தீவிரமாயின். இதன் விளைவாக ஆங்கில அரசு பணிந்தது. 1944 மே மாதம் காந்தி, 1945இல் மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். நேருவின் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. 1947 ஜுன் மாதம் இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தில் இந்திய விடுதலை பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா விடுதலை அடைந்தது. இந் நிகழ்வை பல இதழ்கள் விடுதலைப் போராட்ட வரலாறு, தேசியத் தலைவர்களுக்குப் புகழாரங்கள், போராட்டத் தலைவர்களின் புகைப்படங்கள், பொது மக்களுக்குப் பாராட்டு போன்றவற்றால் அழகு ஊட்டின.

## தமிழக இதழ்கள் - தோற்றம்

தமிழில் உரைநடை, சிறுகதை போன்ற புத்திலக்கியங்களை அறிமுகப்படுத்தியதோடு, அச்சு, அச்சுப் பொறியையும் வழக்கிற்கு வரச் செய்ததும் கிறித்தவப் பாதிரியார்களே. இதே போல் பத்திரிகை வெளியிடுவதிலும் தொடக்கத்தில் முன்னின்றவர்களுமே அப்பாதிரியார்களே.

### தமிழில் வெளிவந்த முதல் இதழ்

1802இல் முதன் முதலில் தமிழ் மொழியிலும் வெளிவந்த பத்திரிகை 'சிலோன் கெஜட" ஆகும். இது தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மும்மொழியிலும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1831இல் தமிழில் வெளிவந்த முதல் செய்தி இதழ் 'தமிழ்ப்பத்திரிகை' ஆகும். பின்னர் 1833இல் விருத்தாந்தி, 1835இல் மெட்ராஸ் கிரானிக்கல், 1855இல் இராஜவர்த்தினி (மாதம் மும்முறை)1852இல் தினவர்த்தமானி ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

#### தினவர்த்தினிமானி

இது தமிழில் வெளிவந்த முதல் நாளிதழாகும். இதை மேதகு பி. பெர்சிவல் எனும் பாதிரியாத் சென்னையில் தொடங்கி வைத்தார். இவ்விதழில் செய்திகள் மட்டுமல்லாது இலக்கியம், விஞ்ஞானம் முதலிய பொருள்கள் குறித்தும் எழுதப்பட்டது. இப்பத்திரிகை மாதந்தொறும் 784 படிகளுக்கு மேல் விற்றது. இவ்விதழ் தமிழ் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது.

சமயப் போட்டிகளுக்கிடையே தமிழ்நாட்டில் பத்திரிகையைக் கருவியாகக் கொள்ளும் வழக்கமும், பத்திரிகைப் படிக்க எழுந்த ஆர்வமும் ஒருங்கே வளர்ந்தது.

#### கிறித்தவ இதழ்கள்

கிறித்தவ இதழ்கள் சிநேக போதகன், வேதவிளக்கம், வேதனாயகம், வேதபோத மாத தோழி, புத்துயிர் போன்றவை ஆகும்.

#### இந்து மத இதழ்கள்

இந்துமத சீர்திருத்தி, சித்தாந்தம், திராவிட பாகவதன், சமரசமார்க்கம், மாதவமித்ரன்

**இசுலாமிய இதழ்கள்**

தத்துவ இஸ்லாம், தாருல் இஸ்லாம், முஸ்லீம், அறமுரசு

**சமணம்**

தரும சீலன்

இச்சமயப் பத்திரிகைகளைத் தொடாந்து சமூகப் பத்திரிகைகள் விரைந்து வளர்ந்தது. ஒவ்வொரு சமூகமும் பிற சமூகங்களை விடத் தங்கள் சமூகமே உயர்ந்தது எனக் காட்டிக் கொள்ள முயன்றது. இவற்றில் பெரும்பான்மையானவை போதுமான வரவேற்பும், நிதி ஆதாரமும் இல்லாத காரணத்தால் நின்று போயின.

**சான்று**

செங்குந்தன், மறவர் குல தூதன், வைசியன், வணிக மித்ரன், யாதவ மித்ரன், சௌராஷ்டிர மணி, செங்குந்தன், பிராமணன்.

## தேசிய இதழ்கள்

**சுதேசமித்திரன்**

ஜி.சுப்பிரமணிய அய்யர் ‘சுதேச மித்திரன்’ (1822) என்ற கிழமை இதழைத் தொடங்கினார். இது நாளடைவில் நாளிதழாக மலர்ந்தது. நாள்தொறும் 1500 படிகள் விற்றன. இதில் நாட்டுணர்வை ஏற்படுத்தி, எழுச்சியை உண்டாக்கி, தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தி சக்தி மிக்க நாளிதழாகத் திகழ்ந்தது.

**இந்தியா**

1907இல் பாரதியார் ‘இந்தியா’ என்ற கிழமை இதழை வெளியிட்டார். பின்னர் இது நாளிதழாக மாறி மூன்றாண்டுகள் வரை சென்னையிலும், புதுச்சேரியிலுமாக நடைபெற்று நின்று விட்டது. தமிழ்ச் செய்தித்தாளில் முதன் முதல் கருத்துப் படத்தை வெளியிட்ட பெருமை ‘இந்தியா’விற்கே உண்டு.

**இன்றைய சமாசாரம்**

தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர் ‘இன்றைய சமாசாரம்’ என்ற பெயரில் காலணா விலையில் நாளிதழைத் தொடங்கினார். இதில் தலையங்கம் கிடையாது. ஆனால் முழுக்க முழுக்கச் செய்திகளே நிறைந்திருக்கும். இது ஒன்றரை ஆண்டு வெளிவந்து நின்று விட்டது. இதே ஆசிரியர் ‘பாரதி’ ‘தேசபந்து’ என்ற இதழ்களையும் நடத்தினார். இதுவும் நின்று போனது.

**தேசபக்தன், நவசக்தி**

திரு.வி.கலியாணசுந்தரம் ‘தேசபக்தன்’ என்ற நாளிதமை 1917 முதல் இரண்டரை ஆண்டுகள் ஆசிரியராக இருந்து நடத்தினார்.

இவரே 1920 முதல் 1940 வரை ‘நவசக்தி’ என்ற கிழமை இதழை நடத்தினார். இது வார இதழாகவும், பின்னர் வாரம் மும்முறை இதழாகவும் சில காலம் வெளிவந்தது. இவர் பத்திரிகை உலகில் நுழைந்த பின்னர் தான் அரசியல் உலகும், பத்திரிகை உலகும் தூய தமிழாயின.

திரு.வி.க.வே தம் இதழ்கள் வாயிலாக வீரத்தையும், ஆற்றலையும், மாறுதலையும் உண்டாக்கினார். மேலும் தமிழ் மக்களிடையே தேசபக்தனும், நவசக்தியும் தமிழுணர்வையும், விடுதலையார்வத்தையும் உருவாக்கின.

**தமிழ்நாடு**

1922இல் டாக்டர் பி.வரதராஜுலு நாயுடுவால் சேலத்திலிருந்து வார இதழாகத் தொடங்கியதே 'தமிழ்நாடு' ஆகும். இது பின்னர் நாளிதழாக மாறியது. இதில் டி.எஸ்.சொக்கலிங்கம், ரா.வெங்கட்ராஜுலு, பி.எஸ்.செட்டியர் ஆகியோர் இதழை வெற்றிகரமாக நடத்தினர். இதில் பேசும் முறையையே ஓரளவு இலக்கணத்துடன் அமைத்து நடையை அமைத்தனர். இது மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

**சுதந்திரச் சங்கு**

1930இல் சங்கு கணேசனால் வார இதழாகத் தொடங்கப்பட்டதே 'சுதந்திரச் சங்கு'. பின்னர் வாரம் மும்முறை வெளிவரும் இதழாகவும், நாளிதழாகவும் மாறியது. இது தீவிரமான அரசியல் போராட்ட இதழாகும். இதில் சூடான நடை, முதல் பக்கத்திலேயே கருத்துப் படம் போன்றவை இருந்ததால் பதினாயிரக் கணக்கில் விற்றது.

**தினமணி**

1934இல் 'தினமணி' பத்திரிகை உலகில் அனுபவமிக்க சதானந்தத்தால் தொடங்கப் பட்டது. இதன் ஆசிரியராக டி.எஸ். சொக்கலிங்கம் எட்டு ஆண்டுகள் வரை இருந்தார். இவர் தலையங்கத்தை விறுவிறுப்பாகவும் காரசாரமாகவும் எழுதுவார்.

**தினசரி**

1944இல் டி.எஸ். சொக்கலிங்கம் நாளிதழாக 'தினசரி' யைத் தொடங்கி நடத்தினார். இவர் எழுதிய பல தலையங்கங்கள் இன்றும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இவருக்கு திறம்பட்ட நிரிவாகத் திறன் இல்லாததால் தொடர்ந்து பத்திரிகையை நடத்த இயலவில்லை.

**ஊழியன்**

இதன் ஆசிரியர் ரா.சொக்கலிங்கம் ஆவார். இவரின் நடை திரு.வி.க.வின் இலக்கிய மரபு நடையைப் பின்பற்றி அமைந்தது. இதுவும் சில ஆண்டுகளுக்குப் பின் நின்று விட்டது.

**பாரததேவி**

இது எஸ்.வி.சாமியால் தொடங்கப்பட்ட மாத இதழாகும். பின்னர் இது நாளிதழாக மாறியது. இதன் ஆசிரியர்களாக வா.ரா.ந.ராமரத்தினம் இருந்தார். இது காரசாரமாக எழுதி காங்கிரஸ் கட்சியைப் பின்பற்றி வந்த நாளிதழாகும்.

**பிற இதழ்கள்**

ஜயபேரிகை, ஜயக்கொடி, தினச்செய்தி, நாத்திகம், மணிக்கொடி போன்ற நாளேடுகள் தோன்றிக் காங்கிரசை அதரித்தன.

## திராவிட இயக்க இதழ்கள்

இந்திய விடுதலைப் போர் தமிழ் இதழ்களின் வளர்ச்சிக்கு எந்தளவிற்கு உறுதுணையானதோ அந்தளவிற்கு திராவிட இயக்கமும் இருந்தது. தமிழ்நாட்டில் மக்களாட்சி இயக்கத்தைத் தொடங்கி வைத்ததும், 1920இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இயக்கமும் திராவிட இயக்கமே. 1920 முதல் 1937வரை நீதிக்கட்சி ஆண்டது. விடுதலைக்குப் பின் 1967முதல் தமிழகத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவை திராவிட இயக்கத்தைச் சார்ந்தவையே. தமிழ் இதழியல் வரலாற்றில், வளர்ச்சியில் திராவிட இயக்கத்திற்கும் பெரும் பங்குண்டு.

### திராவிடர் சங்கம்

1912இல் சென்னை ஒன்றிய சங்கம் என்றமைப்பை ஏற்படுத்தினர். இதன் நோக்கமாக அரசாங்கத்தில் பிராமணர் அல்லாதோருக்கும் உரிய பங்கு கிடைக்க வேண்டும் என்பதேயாகும்.. இது 1913இல் ‘திராவிடர் சங்கமாக’ பெயர் மாற்றம் பெற்றது. 1916இல் சென்னையில் முப்பது தலைவர்கள் ஒன்று கூடி அரசுப் பதவி மட்டுமல்லாது அரசியலிலும் பங்கு பெற வேண்டும் என ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ என்றமைப்பை ஏற்படுத்தினர்.

### ஜஸ்டிஸ்

அரசியல் இயக்கத்திற்காக இதழ்கள் தேவை என உணர்ந்த தலைவர்கள் தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் நாளிதழ் தொடங்க முடிவு செய்தனர். இந்த இதழ்களை நடத்த தென்னிந்திய மக்கள் சங்கம் என்ற அமைப்பை நிறுவினர். 1917இல் ஜஸ்டிஸ் என்ற ஆங்கில நாளிதழை வெளிவந்தது. இந்த இதழின் பெயரே கட்சியின் பெயராகவும் அமைந்தது.

### திராவிடன்

ஜஸ்டிஸ் இதழாளர்கள் தமிழில் வெளியிட்ட நாளிதழ் திராவிடன் ஆகும். இப்பத்திரிகையின் நோக்கங்கள் தலையங்கத்தில் தெளிவாக்கப்பட்டிருந்தது. அவை அரசாங்கச் செய்திகள், வேளாண் விவரங்கள், கல்வி தொடர்பான தகவல்கள், போர் தொடர்பான செய்திகள், மனதை மகிழ்விக்கும் மாண்புள்ள கதைகள் வேறு பல செய்திகள் ஆகியனவாகும். இவற்றை அடியொற்றி பல்துறை அறிஞர்கள் எழுதுவார்கள் என்ற கருத்து மணிப்பிரவாள நடையில் கூறப்பட்டிருந்தது.

1928ஆம் ஆண்டு ‘திராவிடன்’ நிருவாகப் பொறுப்பு ஈ.வெ.ரா.வினிடம் வந்தது. இவ்விதழ் தமிழில் தோன்றிய இரண்டாவது இதழாகும். இது தமிழரின் உரிமையைக் காக்கவும், சாதி சமயச் சீர்திருத்தத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது.

**குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை**

1925இல் குடியரசு இதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியரும் பெரியாரே ஆவார். இவ்விதழ் எரிமலையாக இருந்தது. சமுதாயக் கொடுமைகள் அனைத்தையும் வெடித்து நொறுக்கும் வெடிகுண்டாகத் திகழ்ந்தது. கடவுள், சாதி, சமயம், மூடநம்பிக்கைகள், போலி அரசியல், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பொய்யான பழக்க வழக்கங்கள் அனைத்தையும் குடியரசு சாடியது. 1933இல் குடியரசு தடை செய்யப்பட்டது. உடனே பெரியார் ‘புரட்சி’ என்ற வார இதழைத் தொடங்கினார். இதில் இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும் என்று தலையங்கம் எழுதியதற்குப் பெரியார் கைது செய்யப்பட்டு, பத்திரிகையும் தடை செய்யப்பட்டது. உடனே பெரியார் ‘பகுத்தறிவு’ என்ற நாளிதழைத் தொடங்கினார். பின்பு இதனை வார இதழாக மாற்றினார். 1940இல் நீதிக்கட்சியிடமிருந்து ‘விடுதலை’ இதழ் பெரியாரின் கைக்கு வந்தது. இதன் தலையங்கத்தைப் பெரியாரே எழுதினார். இப் பத்திரிகையில் யார் எழுதினாலும் தரம் தாழாமல் எழுத வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார். விடுதலையின் ஆசிரியராக அறிஞர் அண்ணா இருந்தார். இவரும் தலையங்கத்தை எழுதினார். இவரின் புகழ்பெற்ற தலையங்கம் ‘குன்றம் உயர்ந்தது, கோடு தாழ்ந்தது’ ஆகும்

ரிவோட், ஜஸ்டிசைட், மாடர்ன் ரேஷனலிஸ்டு

பெரியார் ரிவோட், ஜஸ்டிசைட், மாடர்ன் ரேஷனலிஸ்டு ஆகிய ஆங்கில இதழ்களையும் தொடங்கி நடத்தினார்.

**திராவிடநாடு, காஞ்சி**

அறிஞர் அண்ணா 1942இல் திராவிடநாடு இதழைத் தொடங்கினார். அண்ணாவின் எழுத்தாற்றலைப் புலப்படுத்த திராவிடநாடு உதவியது. மேலும் தமிழ் உரைநடையையும் அது வளப்படுத்தியது. அதில் அடுக்குநடை குறிப்பிடத் தகுந்ததாகும். இதில் அரசியல் பொருளாதாரக் கருத்துக்களும், அதை விளக்கக் கூடிய கதைகளும், கட்டுரைகளும் இடம்

பெற்றது. அண்ணா எழுதிய 'தம்பிக்கு' என்ற மடல் வடிவக் கட்டுரைகள் தமிழ் நாட்டின் அரசியலைப் படம் பிடித்துக்காட்டியது. அண்ணா 'காஞ்சி' என்ற வார இதழையும் நடத்தினார்.

**முரசொலி**

இதன் நிறுவனர் கலைஞர் கருணாநிதி ஆவார். இவரின் எழுத்து காட்டாற்று வெள்ளம் போன்ற வேகம் நிறைந்தது. கத்தி வீச்சு போல் கூர்மையானது. கனல் தெறித்தாலும் அதில் நகைச்சுவையும் இழையோடும்.

## பிற இதழ்கள்

நகர தூதன், போர்வாள், திராவிடன்ஈ தமிழ் அரசு, தென்னாட்டுப் புத்தன், தீப்பொறி, குயில், பொன்னி, இசை ஒலி, மறுமலர்ச்சி, சமரசம், சூறாவளி, திராவிடம், சமத்துவம், ஈரோட்டுப் பாதை, தென்னகம் போன்றவற்றைச் சுட்டலாம்.

**பாலதீபிகா**

இது இந்தியாவிலேயே சிறுவர்களுக்காகத் தொடங்கப்பட்ட முதல் இதழ் ஆகும். இது நாகர்கோயிலிலிருந்து 1840இல் வெளியானது.

அமிர்தவர்சனி

இது 1860இல் தமிழில் பெண்களுக்கான முதல் இதழாக வெளிவந்தது. இவ்விதழ் இந்துப் பெண்களின் முன்னேற்றத்திற்காக வெளிவந்தது.

**ஜனவிநோதினி**

இது 1870இல் வெளிவந்தது. இதில் தாய்மார்களுக்குப் பயன்படும் குறிப்புகளும், நல்வழிக்குரிய திட்டங்களும், இந்திய வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட உண்மைக் கதைகளும், முழுப்பக்க வண்ணப் படங்களும், வழிப்பயணம், துணிச்சலான செயல்கள் ஆகியவை பற்றிய விவரங்களும் ஒருங்கே கொண்டிருந்தது.

**செந்தமிழ்**

இது 1902இல் சேதுபதி மன்னரால் தொடங்கி வைக்கப்பட்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் இன்று வரை நடத்தப்பட்டு வருகிறது. இதில் தமிழ்ப் புலமை மிக்கவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதினர்.

ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**துறை இதழ்கள்**

**மருத்துவம்**

இத்துறைக்கென ஆயுர்வேத பாஸ்கரன், வைத்திய போதினி, சித்தர் திரு உள்ளம், தமிழ் வைத்தியக் களஞ்சியம், தமிழ் வைத்தியம், மருத்துவன், மூலிகை மணி போன்ற 15க்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன.

**சட்டம்**

சட்டத்துயையில் மாதச் சட்டப் பத்திரிகை, வக்கீல் குமாஸ்தா ஜெர்னல், பத்திரலேகரி, வக்கீல், லாயர் போன்றவை வெளிவந்துள்ளன.

**திரட்டு இதழ்கள்**

மஞ்சரி, திங்கள், காதம்பரி, குமரி மலர், விருந்து போன்றவை திரட்டு இதழ்களாகும்.

**கவிதை இதழ்கள்**

பாரதிதாசன் - குயில்

சுரதா – சுரதா, கவிதை

பொன்னடியான் - முல்லைச்சரம்

ப.பரமசிவன் - எழிலோவியம்

## விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்கள்

தமிழ் இதழ்களின் வேகமான வளர்ச்சிக்கு இந்திய உரிமைப் போர், இரு பெரும் உலகப் போர்கள் உறுதுணையாக நின்றன. விடுதலை இயக்க காலத்தில் வெளிவந்த தமிழ் இதழ்கள் மிகப் பல.

அவற்றுள் சில

சுதேசமித்திரன், இந்தியா, விஜயா, லோகோபகாரி, சூரியோதயம், ஞானபானு, பிரபஞ்ச மித்திரன், இந்திய தேசாந்திரி, தேசபக்தன், நவசக்தி, தமிழ்நாடு, வந்தேமாதரம், காந்தி, தினசரி, எக்ஸ்பிரஸ், தினமணி, சுதந்திரச் சங்கு, விமோசனம், இராட்டின மகிமை, நவமணி, செயபாரதி, தேசபந்து, இந்திய வாலிபன், விழுப்புரம், பாலபாரதம், கிராம ஊழியன், சிவாஜி, விநோதினி, தமிழ் முரசு, தமிழன் குரல், செங்கோல் போன்றவை ஆகும்.

## தற்காலத் தமிழ் இதழ்கள்

நாடு விடுதலையடைந்த பிறகு செய்தித்தாள்கள், மாத, வார, வாரமிருமுறை இதழ்கள் பல்கிப் பெருகி உள்ளன. இதன் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் வியக்கத்தக்க மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. ஆனால் நோக்த்தில் மாற்றமுள்ளது. இன்றைய இதழ்கள் வாணிப நோக்கத்தையே முதன்மையாகக் கொண்டுள்ளது. விற்பனையைக் கூட்டி ஆதாயத்தைப் பெருக்க அனைத்து வழிகளையும் கையாள்கின்றன. குறிப்பாக மின்னணு புரட்சியினால் விளைந்த வானொலி, தொலைக்காட்சி, அலைபேசி, இணையம் போன்றவற்றின் அசுர வளர்ச்சியால் இதழ்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள பகீரதப் பிரயத்தனம் பண்ண வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இன்றைய இதழ்களில் நம்பகத் தன்மை, துல்லியம், உண்மை, நேர்மை, மக்களின் அவசியத் தேவை முதலியன கேள்விக் குறியாகி விட்டன.

விடுதலைக்கு முன் வெளிவந்த இதழ்கள் ஆசிரியர்களின் பெயரையும், ஆற்றலையுமே நம்பி நடைபெற்றன. ஆனால் இன்று திரைப்படம் சார் செய்திகளுக்கும், ஆபாசக் கவர்ச்சிக்கும் முதலிடம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

**எழுச்சி**

தற்கால இதழ்கள் அமைப்பு முறை, அச்சிடுதல், வண்ணம் போன்றவற்றில் நல்ல வளர்ச்சியைக் கொண்டுள்ளன. பல துறைசார்ந்த செய்திகளும் அறிந்து கொள்ளும் வண்ணம் சில இதழ்களில் ஆங்காங்கேயும், சில துறை சார் இதழ்களும் வெளிவந்தன, வந்து கொண்டிருக்கின்றன.

**வீழ்ச்சி**

வாணிப நோக்கத்தையே கொண்டு செயல்பட்டதன் விளைவு நீண்ட காலம் தாக்குப் பிடிக்க இயலாது போனது. சமுதாய விழிப்புணர்வு, பொது மக்களுக்குப் பயன்படும் வண்ணமில்லாமல் பொழுது போக்கு வண்ணமாகவும், வண்ணமயமாகவும் மாறிய நிலை, மஞ்சள் பத்திரிகை அளவுக்கு கீழிறங்கிய போக்கு, அரசியல், சாதி, மதம் சார்ந்த செய்திகளில் சார்புத் தன்மையைக் கொண்டிருத்தல், அறிவியல் வளர்ச்சி போன்ற காரணங்களால் தற்கால இதழ்கள் வீழ்ச்சியை நோக்கிச் சென்றது.

தற்கால இதழ்களில் சிலவற்றை வகைப்படுத்தி சான்றுக்குகாகக் காணலாம். அவை பின்வருமாறு.

**புலனாய்வு இதழ்கள்**

நக்கீரன், ஜுனியர் விகடன், தராசு, நெற்றிக் கண், போலீஸ் போன்றவை புலனாய்வு இதழ்களாகும். இன்று நக்கீரன், ஜுனியர் விகடன் தவிர மற்றவை தாக்குப் பிடிக்க முடியாமல் நின்று விட்டன.

**வாரஇதழ்கள்**

வார இதழ்களில் ராணி, குங்குமம், குமுதம், ஆனந்த விகடன், கல்கண்டு போன்றவற்றைக் கூறலாம்.

**பக்தி இதழ்கள்**

பக்தி இதழ்கள் சக்தி விகடன், குமுதம் பக்தி இதழ், ஆலயம் போன்றவையாகும்.

**மாதமிருமுறை / மாதஇதழ்**

ராணிமுத்து, மாலைமதி, அவள்விகடன், சிநேகிதி போன்றவை.

## பழைய இதழ்கள்

1. 1831 – ‘தமிழ்ப் பத்திரிகை – திங்கள் இதழ் - கிறிஸ்தவ சமய இதழ். இது தமிழில் வெளிவந்த முதன் முதல் பத்திரிகை.

2. 1840 – பாலதீபிகா – சிறுவர்களுக்கான இதழ். 3 மாதத்துக்கு ஒரு முறை நாகர்கோயிலிலிருந்து வெளிவந்தது.

3. 1855 – தினவர்த்தமணி – வாரப்பத்திரிகை. தமிழில் செய்திகளை வெளியிட்ட முதல் இதழ். செய்திகளுடன் இலக்கியம், அறிவியல் முதலிய கட்டுரைகள் வெளிவந்தன.

4. 1865 – விவேக விளக்கம் ஸ்ரீபிரம சமாஜத்தால் வெளியிடப்பட்டது.

5. 1871 – பிரம தீபிகை. இதனை காசிவிசுவ நாத முதலியார், பாரி‘ஸ்டர் இராமராஜு சென்னையில் நடத்தினர்.

6. 1875 – சிநேக போதன் - பாளையங்கோட்டையிலிருந்து வெளி வந்த கிறிஸ்தவ திங்கள் இதழ்.

7. 1879 – நடுத்தர பள்ளி உயர்தர நண்பன் - இதன் ஆசிரியர் அண்ணாதுரை ஐயர்.

8. 1882 – சத்திய வேதக்கொடி – கிறிஸ்தவ மாத இதழ். ஆசிரியர் மாசிலாமணி.

9. 1883 - இந்துமத சீர்திருத்தி – பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் கே. ஆறுமுகம் பிள்ளை.

10. 1887 – திராவிட ரஞ்சனி – திருச்சியிலிருந்து வெளிவந்த திங்கள் இதழ். டி.வி. வெங்கடராமையர் இவ்விதழின் ஆசிரியர்.

11. 1887 – மகாராணி – மகளிருக்காக வெளிவந்த திங்கள் இதழாகும். இதன் ஆசிரியர் வி.கிருஷ்ணமாச்சாரியார்.

12. 1888 சன்மார்க்க போதினி – சி.ஆர். சீனிவாச சாஸ்திரியால் சிதம்பரத்திலிருந்து வெளிவந்த திங்கள் இதழாகும்.

13. 1890 – சிவபக்தி சந்திரிகை – திருவாடியிலிருந்து வைத்தியநாத சிவனால் வெளியிடப்பட்டது.

14. 1892 – விவேக சிந்தாமணி என்ற திங்கள் இதழை சி.வி.விசுவநாத அய்யர் வெளிக் கொணர்ந்தார்.

15. 1893 – வித்தியாபானு – கோயமுத்தூரிலிருந்து கே.என். ஈஸ்வரய்யாவால் திங்கள் இதழாக வந்தது.

16. 1894 – சண்மு கவிஜயன் - இதன் ஆசிரியர் டி.பி.கிருஷ்ணசாமி அய்யர்.

17. 1895 கோமாலி – சென்னையிலிருந்து மூன்று மாதத்திற்கொரு முறை தமிழ், ஆங்கில இதழாக வெளிவந்தது.

18. 1896 – தேஜோபிமானி - மலேசியா தம்பலவாணப் பிள்ளையால் திங்களுக்கு இருமுறை வெளிவந்தது.

19. 1897 – தமிழ்க் கல்வி பத்திரிகை – சென்னையிலிருந்த பார்த்த சாரதி அய்யங்காரால் திங்கள் இதழாக வெளிவந்தது.

20. 1898 – அருணோதயம் - கிறிஸ்தவ இதழாக மாதமொரு முறை வந்தது.

## புகழ்பெற்ற இதழ்கள்

### சுதேசமித்திரன்

தாய்மொழி (தமிழ்) வாயிலாக நாட்டு நடப்பை விளக்க 1882இல் சுதேசமித்திரன் என்ற பெயரில் வார இதழை ஜி.சுப்பிரமணிய அய்யர் தொடங்கினார். இது 1887இல் வாரம் இருமுறையாகவும், 1889இல் நாளிதழாகவும் மாற்றம் பெற்றது. இதில் மொழிக் கலப்பு மிகுதியாகக் காணப்பட்டது. இவ்விதழ் தமிழ் மக்களிடையே அரசியல் உணர்வு, காந்தியம் ஆகியனவற்றை அறியச் செய்தது. சுதேசமித்திரன் காந்தியடிகளைப் பற்றி முதன் முதலாக செய்தி வெளியிட்டதோடு, எண்பது முறை தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் பற்றி தலையங்கமும் எழுதிய பெருமைக்குரியதாகிறது. இவ்விதழ் அரசியல், பொருளாதாரம் போன்ற பல துறைகளில் செய்திகள், கட்டுரைகள், தலையங்கம், துணுக்குச் செய்தி, டிபட்டிச் செய்தி, மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பு போன்றவற்றை வெளியிட வழிவகை செய்தது.

### இந்தியா

இப்பத்திரிகையை பாரதியார் 1906இல் தொடங்கினார். இது மக்களிடையே சுதந்திர உணர்வை பரப்பியது. இதில் முதன் முதலில் கேலிச் சித்திரங்கள் வரைந்து கருத்துக்களைப் பதிய வைக்கும் உத்தியைத் தொடர்ந்து கையாளப்பட்டது. அன்றைய காலக் கட்டத்திலேயே ஏறத்தாழ 4000 பிரதிகள் விற்றது.

### சந்தா முறை

எல்லா அரசு ஊழியருக்கும் - ரூ.50

ஜமீன்தார், ராஜாக்கள் - ரூ.30

மாத வருமானம் ரூ200க்கு மேற்பட்டோருக்கு - ரூ.15

மற்றவர்களுக்கு ரூ.3

என விநோத முறையில் சந்தாக் கட்டணம் அறிவிக்கப்பட்டு பெறப்பட்டது.

**தேசபக்தன்**

1917இல் திரு.வி.க. தொடங்கியது தேசபக்தன். சிறுசிறு வாக்கியங்களுடன், பிற மொழிக் கலப்பின்றி தனித் தமிழில் தலைப்புகள் வெளியிட்டு பெருமையை ஈட்டியது. இதன் இலச்சினை 'தெய்வம் இகழேல், தக்கார் நெறி நில், தேசத்தொடு ஒத்து வாழ்' என்ற வாசகங்களை வட்டத்திற்குள் பொறித்து, நடுவே இந்திய நாட்டுப்படமும், சென்னை அமையும் இடத்தில் ஒரு விண்மீன் படமும் கொண்டதாக அமைந்தது. இவ்விதழின் குறிக்கோள் 'தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகிறான், சுயாட்சி கேட்கிறான், சகோதரத்துவத்தை உண்டு பண்ணுகிறான்' என்பதாகும்.

**நவசக்தி**

ஒன்பது ஆற்றல்கள் என்னும் பொருள் கொண்ட நவசக்தியை திரு.வி.க. தேசபக்தனிலிருந்து விலகிய பின் தொடங்கினார். இது 1923இல் வாரம் மும்முறை, 1924இல் வாரம் ஒரு முறை வெளிவந்தது. இவ்விதழின் இருபுறமும் 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு, என்கடன் பணிசெய்து கிடப்பதே' என அச்சிடப்பட்டிருக்கும். இதில் திரு.வி.க. எழுதிய தலையங்கங்கள் மிகவும் புகழ்பெற்றவையாகும்.

**சுதந்திரச் சங்கு**

இது தீவிர தேசிய இதழாக கணேசன் என்பவரால் 1930இல் வாரம் மும்முறை வெளிவந்தது. இதில் 8 பக்கங்களில் எண்ணற்ற செய்திகளைத் தாங்கி வந்தது. சுதந்திரம் பற்றிய சூடான செய்திகளைச் சங்க நாதமாக முழங்கியது. இவ்விதழ் தமிழ்நாட்டிலேயே அதிகம் (75,000 படிகள்) விற்பனையானது. மதுரையில் மட்டும் 10,000 படிகள் விற்றது. செய்தித் தாளுக்கு முகவர்களை அமர்த்தும் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியது சுதந்திரச் சங்கே ஆகும். இவ்விதழின் அமைப்பு முறையினாலும், செய்திகளின் தன்மையினாலும், விற்பனையினாலும் குறிப்பிட்ட சிறிது காலத்திற்குள்ளேயே தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றது.

**மணிக்கொடி**

இவ்விதழ் 1933இல் தொடங்கப்பட்டது. இதன் ஆசிரியர் சீனிவாசன் ஆவார். இதில் சிறுகதைகள், தொடர்கதைகள், திறனாய்வு அதிகம் வெளிவர வழி வகை செய்தது. இவ்விதழில் ஏராளமான எழுத்தாளர்களை எழுத வைக்க ஊக்கம் தந்தது, இதனை உருவாக்கியவர்கள் பசி, பட்டினி கிடந்து நடத்தினர். புனைகதை இலக்கியத்தை வரலாறாக எழுதுவோர் மணிக் கொடிக்கு முன், மணிக்கொடிக்குப் பின் என வகைப்படுத்துமளவுக்கு சிறந்திருந்தது. இதில் எழுதிய எழுத்தாளர்களை மணிக்கொடி பி.எஸ்.இராமையா, ந.பிச்சமூர்த்தி, அழகிரிசாமி, மௌனி, ஜானகிராமன், க.நா.சு. என்ற அடைமொழி கொடுத்தே அடையாளப்படுத்தினர்.

## புகழ் பெற்ற பத்திரிகையாளர்கள்

**பாரதியார்**

இவர் இந்தியா என்ற தமிழ்மாத இதழையும், பாலபாரதி என்ற ஆங்கில வார இதழையும் நடத்தினார். இவ்விதழ்கள் புரட்சிகரமாக அமைந்து மக்களின் சுதந்திர வேட்கையைத் தூண்டியது. பாரதியார் சிறந்த கவிஞர் மட்டுமல்ல சிறந்த எழுத்தாளரும் ஆவார். மேலும் சக்கரவர்த்தினி, கர்மயோகி ஆகிய மாத இதழையும் நடத்தினார்.

**திரு.வி.க.**

இவர் ஒரு தமிழ்ப் பேராசிரியர் மட்டுமல்ல, தமிழக தேசியத் தலைவர்களுள் ஒருவர். தமிழ்நாட்டில் தொழிற் சங்கங்களை நிறுவிய தொழிலாளர் தலைவரும் ஆவார். இவர் தேசபக்தன், நவசக்தி ஆகிய இதழ்களின் ஆசிரியராகத் திகழ்ந்தார். இவர் நடையின் சிறப்புகளாக வினைமுற்று, வினா எழுப்பி விடையளிப்பது ஆகியன திகழ்ந்தன.

**சான்று**

என்ன நயம்!, என்ன எளிமை! அந்தோ! எழுமின்!

தேசபக்தனில் மற்ற இதழ்களில்லாத பயண இலக்கியம், கட்டுரைகள், பழந்தமிழ் நூலறிமுகம், நூல் திறனாய்வு முதலிய பகுதிகள் அமைந்து சிறப்பளித்தன. மேலும் தொழிலாளர்களைப்

பற்றி எதுவும் எழுதப் பத்திரிகைகள் தயங்கிய காலத்தில் தொழிலாளர் நலனுக்கு என்றே பக்கங்களை ஒதுக்கி புதுமை மற்றும் புரட்சியை ஏற்படுத்தினார்.

# இதழியல் சட்டங்கள்

பொதுமக்களுக்கு அனைத்துச் செய்திகளையும் தருவது இதழியல் மரபாக இருந்தாலும் சில செய்திகளை வெளியிடக் கூடாது என்பது அரசின் சட்டமாக உள்ளது. வயலுக்குப் பாதுகாப்பாகவும், உடையவனுக்கு உரிமை தருவதாகவும் அமைகின்ற வேலி போலக் குடியாட்சி நாடுகளில் சட்டத்திற்குட்பட்ட பத்திரிகைச் சுதந்திரம் அமைந்துள்ளது. அப்பத்திரிகைச் சட்டங்கள் சிலவற்றைக் காணலாம்.

### 1835ஆம் ஆண்டு செய்தித் தாள் பதிவுச் சட்டம்

இச்சட்டத்மை சார்லஸ் மெக்கா.ஃப் காலத்தில் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் செல்லும் நிலையில் இருந்தது. இச்சட்டத்தின் படி அச்சகர், வெளியிடுபவர் பெயர்கள், அச்சகம் அமைந்திருக்குமிடம், பதிப்பிக்குமிடம் ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும். இதனையளிக்கத் தவறியவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் அபதாரமும், இரண்டாண்டு சிறைத் தண்டனையும் அளிக்கப்படும்.

### 1878 ஆம் ஆண்டு இந்திய மொழி இதழ்கள் சட்டம்

தலைமை ஆளுநர் லிட்டன் பிரபு காலத்தில் இந்திய மொழி இதழ்களுக்குக் கடுமையான சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி இதழ்கள் குறிப்பிட்ட தொகையினைப் பிணையமாகக் கட்ட வேண்டும். அரசாங்கத்தின் மீது வெறுப்பு உண்டாகும்படி எழுதக் கூடாது. இனம், சாதி, மதம் இவற்றினடிப்படையில் கலவரத்தைத் தூண்டும் வகையில் எழுதக் கூடாது. இதனை ஒப்புக் கொண்டு அச்சிடுபவர், வெளியீட்டாளர் இருவரும் நீதி மன்ற நடுவர் அல்லது காவல் துறை அதிகாரியிடம் உறுதி மொழிப் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுக்க வேண்டும். இது தொடர்பாக வழக்கு எதுவும் தொடுக்க முடியாது. இச்சட்டத்தை மீறியவர்களுக்கு முதலில் எச்சரிக்கை அறிவிப்பு வரும், மீண்டும் தொடர்ந்தால் பிணையத் தொகையை இழப்பதோடு அபராதமும் சிறைத் தண்டனையும் அளிக்கப்படும். 1831ஆம் ஆண்டு இச்சட்டம் திரும்பப் பெறப்பட்டது.

**1931ஆம் ஆண்டு இந்திய இதழ்கள் (நெருக்கடி கால அதிகாரங்கள்) சட்டம்.**

இச்சட்த்தின் மூலம் கொலை, வன்முறை முதலியனவற்றைத் தூண்டும் வகையில் அல்லது ஆதரிக்கும் வகையில் அமையும் வெளியீடுகளைத் தடுப்பது நோக்கமாக அமைந்திருந்தது. இச்சட்டத்தின் படி இதழ்கள் பத்தாயிரம் ரூபாய் பிணையத் தொகையாகக் கட்ட வேண்டும். செய்தித் தாள்களில் தேசியத் தலைவர்கள் கைது, ஊர்வலம், தடியடி போன்ற செய்திகளையும் படங்களையும் வெளியிடத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

**1951ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

1950இல் இந்தியநாடு குடியரசு அமைப்பிற்கான அரசியல் சட்டங்களை வரைமுறைப்படுத்தியது. இதில் 19இன் உட்பிரிவு 1(19-1) கருத்துச் சுதந்திரம் பற்றியதாக இருந்தது. இரண்டாம் பிரிவில் கருத்துச் சுதந்திர உரிமைக்கும் சில வரையறைகள் கொண்டு வரப்பட்டன. இச்சட்டம் அயல்நாடுகளுடன் உள்ள பொது உறவுகளுக்குத் தீங்கு உண்டாக்கும் முறையிலும், பேசுவதும், எழுதுவதும் தண்டனைக்குரிய குற்றமாகக் கூறியது.

**1954ஆம் ஆண்டு இதழ்கள், செய்தித்தாள்கள் அனுப்புகைச் சட்டம்**

இச்சட்டம் எந்த ஒரு வெளியீடாக இருந்தாலும் அதன் ஒரு படியை மத்தியரசு பரிந்துரைத்த நூலகங்களுக்கு விலையின்றிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக மும்பை மத்திய நூலகம், கல்கத்தா தேசிய நூலகம், சென்னை கன்னிமாரா நூலகங்களுக்கு அனுப்ப வேண்டும்.

**1956ஆம் ஆண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டம்**

இச்சட்த்திற்கு பெரோஷ் காந்தி சட்டம் என்று பெயர். நாடாளுமன்றத்தின் விவாதங்களையும், நடவடிக்கைகளையும் செய்தித் தாள்கள் வெளியிடும் போது தவறுகள் காணப்பட்டால் அது தொடர்பாக அவ்விதழ்களின் மீது சிவில் அல்லது கிரிமினல் வழக்குத் தொடரக் கூடாது. அதற்குப் பதில் உரிமை மீறல் விளக்கம் கேட்கும் முறை பரிந்துரைக்கப்பட்டது.

**1956ஆம் ஆண்டு செய்தித்தாள், புத்தகப் பதிவுச்சட்டம்**

இந்தியாவில் வெளியாகும் புத்தகங்கள், செய்தித்தாள்கள் தில்லியிலுள்ள பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். புத்தகம் வெளியிட்ட இரண்டு நாள்களுக்குள் படியொன்றைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். அனுமதி பெற்ற

பின் நாள், வார இதழ்கள் ஒன்றரை மாதத்திற்குள்ளும், பிற இதழ்கள் மூன்று மாதத்திற்குள்ளும் வெளியிட வேண்டும்.

**1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம்**

பிறர் படைப்புகளிலுள்ள கருத்துக்களையோ, மொழியாக்கத்தையோ, தழுவியோ உரியவரின் அனுமதியின்றி வெளியடக் கூடாது. விற்பனைக்குக் கிடைக்காத புத்தகங்களைப் படியெடுத்துக் கொள்ள நூலகங்களுக்கு அனுமதியுண்டு. தற்போதுள்ள சட்டப்படி ஆசிரியரின் வாழ்நாள் காலம், அதற்குப் பின் 50 ஆண்டுகள் வரை பதிப்புரிமை வழங்கபட்டுள்ளது.

**1971ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்**

நீதிமன்ற நடுவர்கள், அவர்தம் தீர்ப்புகள் போன்றவற்றை அவமதித்து எழுதுவதோ, விமரிசித்து எழுதுவதோ கூடாது. தீர்ப்புக்கு முன் வழக்கிலுள்ள நபர்களை குற்றவாளி என எழுதக் கூடாது.

**இந்தியன் பீனல் கோடு சட்டங்கள்**

1. இ.பி.கோ. 124 ஏ – நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் பேசுவது, எழுதுவது நாட்டுத் துரோகம் எனக கருதி தண்டனை அளிக்கிறது.

2. இ.பி.கோ. 505 - இராணுவ வீரர்களிடம் கலவரங்களை உண்டாக்கும்படி அறிக்கை வெளியிடுவதையும், வதந்திகள் பரப்புவதையும் தடுக்கிறது.

3. இ.பி.கோ. 295-ஏ – மதவுணர்வுகளுக்கு ஊறு தேடுவதைத் தடுக்கிறது.

என பல்வேறு சட்டங்கள் உள்ளன.

**பத்திரிகைக் கவுன்சில்**

பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டிக்காக்கவும், இதழியல் துறையில் ஈடுபட்டவர்களிடம் பொறுப்புணர்ச்சியையும், தொண்டு மனப்பான்மையை வளர்க்கவும் உருவானதே பத்திரிகை கவுன்சில எனப்படும் பத்திரிகை மன்றம்.

**அமைப்பு**

பத்திரிகை மன்றத்தில் ஒரு தலைவர், 28உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் ஆவர். 28 உறுப்பினர்களில் 20போ பத்திரிகையாளர்கள், 5பேர் நாடாளுமன்ற உறுப்பினர்கள், 3பேர் கல்வி, அறிவியல், சட்டம், இலக்கியத்துறையைச் சார்ந்தவர்களாக இருப்பர்.

பத்திரிகை மன்றத்தின் தலைவரை நாடாளுமன்றத் தலைவர், மக்களவைத் தலைவர், பத்திரிகை மன்ற உறுப்பினர்களின் ஒரு பிரதிநிதி ஆகிய மூவர் கொண்ட குழு நியமிக்கும். பெரும்பாலும் நீதிபதிகளையே பத்திரிகை மன்றத் தலைவராக நியமிப்பது வழக்கம்.

**பணிகள்**

பொது மக்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இடையே ஒரு பாலமாக பத்திரிகை மன்றம் செயல்டபடும். இதழ்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது, செய்தித்தாள்கள், செய்தி நிறுவனங்களின் தரத்தைக் காத்து மேம்படுத்துவதும் தலையாயப் பணிகளாகும்.

## இதழ்களின் சுதந்திரம்

ஜனநாயகம் பரப்பும் தூதுவன் இதழ்களே ஆகும். அவை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் என்பது அரசின் நிருவாகக் கட்டுப்பாடின்றிச் செயல்படுதல், சுதந்திரமாக செய்திகளை வெளியிடுவது போன்றனவாகும்.

**கூறுகள்**

1. செய்திகளைப் பெற உரிமை

2. முன் கட்டுப்பாடின்றி அச்சிடும் உரிமை

3. அச்சமோ, அச்சுறுத்தலோ இன்றி அச்சிடும் உரிமை

4. தகவல் தொடர்புக்கு வேண்டிய வாய்ப்புகளையும், சாதனங்களையும் பெற்றுக் கொள்ளும் உரிமை

5. அரசு, மக்கள் தலையிடாமல் செய்திகளைப் பரப்புகின்ற உரிமை.

ஆகியன பத்திரிகைச் சுதந்திரத்தின் கூறுகளாக அமைந்துள்ளன.

**தடைகள்**

இதழ்கள் தனித்து நிற்கவும், சுதந்திரமாகச் செயல்படவும் சில நடைமுறைத் தடைகள் உள்ளன. அவற்றை இரு வகையாகப் பிரிக்கலாம்.

**அகத்தடைகள்**

1. நிதிப்பற்றாக் குறை

2. அரசியலாளர்கள், தொழிலதிபர்கள் செல்வாக்கு

3. முழுச் சுதந்திரமின்மை

4. பத்திரிகை உடைமை முறை ஒரு சிலர் கைக்குள் இருப்பது

5. வலுவான பத்திரிகையாளர் சங்கம்.

**புறத்தடைகள்**

1. செல்வாக்குள்ள விளம்பரதாரர்

2. குண்டர்களின் தாக்குதல்

**பத்திரிகை சுதந்திரத் தேவை**

சுதந்திரச் சமுதாயத்தின் தூண்களில் ஒன்று பத்திரிகை சுதந்திரம். செய்திகளையும், சிந்தனைகளையும் சுதந்திரமாகக் கொள்ள முடியாவிட்டால் வேறு எந்த உரிமையும் கிடைக்காது. பொது நல ஈடுபாட்டோடு எல்லா நிலைகளிலுள்ள அதிகாரத்தையும் விமர்சிக்கும் உரிமை இதழ்களுக்கு உண்டு. அனைத்துச் செய்திகளையும் அச்சமின்றி, சிதைக்காமல், மறைக்காமல் வழங்குவது இதழ்களின் கடமை. இக்கடமையை நிறைவேற்ற சுதந்திரம் தேவை.

இதழ்கள் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்றாலும் அறத்திற்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டும்.

பிளேட்டோ - இதழியல் அறம்

பிளேட்டோ எழுதிய ‘குடியரசில்’ குறிப்பிட்டிருக்கும் சில பொது அறங்கள்

1. மெய்யறிவு
2. துணிவுடைமை
3. பண்பட்ட பங்கு
4. நீதி
5. வாய்மை

என்பனவாகும் என ஏ.என். அகுஜா பிளேட்டோவின் சில நற்பண்புகளைத் தந்துள்ளார்.

**விலக்க வேண்டியவை**

1. உண்மையாக இருந்தாலும் வன்முறைக்கு இடம் கொடுக்கும் வகையில் எழுதக் கூடாது.

2. சாதிக் கலவரத்தைத் தூண்டும் வகையில் எழுதுதல் ஆகாது.

3. தனி மனிதரையோ, சமுதாயத்தையோ, பொய்யாகவோ, குதர்க்கமாகவோ தாக்கியோ எழுதுதல் முறையாகாது.

4. பண்படாத, கட்டற்ற மொழி நடையைப் பயன்படுத்துதல் கூடாது.

5. சாதித் தொடர்பான நிகழ்ச்சி, விவரங்கள் போன்றவற்றை மிகைப்படுத்தியோ, சிதைத்தோ கூறுதல் வதந்திகளைப் பரப்புதல் கூடாது.

6. சமுதாய ஒற்றுமையைப் பாதிக்கும் வகையில் செய்திகளை மிகைப்படுத்தியோ, பெரிய தலைப்புகளோடு எழுதக் கூடாது.

7. பல்வேறு சமயங்களைப் பற்றியோ, நம்பிக்கைகள் பற்றியோ மரியாதையற்ற முறையில் கருத்துகளை வெளியிடுதல் முறையாகாது.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு அறத்தோடு இதழாளர்கள் எழுத வேண்டும். இவ்வறங்களைப் பத்திரிகை நிறுவனங்களும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

## இன்றைய இதழியல்

இதழ்கள் செய்திகளைத் தருவதோடு, மக்களுக்கு அறிவைப் புகட்டி, அரசியல் விழிப்புணர்வை உண்டு பண்ணி சமுதாயத்தைச் சீர்திருத்தி மக்களின் உரிமையைப் பாதுகாத்து நாகரித்திற்கு நல்ல முன்னுதாரணமாகவும் திகழ்கின்றன. மக்களின் தேவைகளும் விருப்பங்களும் பெருகப் பெருகச் சமூக அமைப்பும் அதற்கேற்ப மாறிக் கொண்டே வருகிறது.

## இதழ்களின் வளர்ச்சிப் போக்கு

தமிழ் இதழ்கள் சாதி, சமய உணர்வில் ஆழ்ந்து சிறு வட்டத்தில் கிடந்தோரை உலகளாவிய வட்டத்திற்குள் அடியெடுத்து வைக்க உதவியதோடு. மெத்தப் படித்தவர்களே எழுத முடியும் என்ற நிலையை மாற்றி, அறிவு வேட்கை கொண்டு ஆர்வ மிகுதியுடையோர், எவரும் எழுதலாம் என்ற நிலையை உருவாக்கியது. இதழ்கள் தம் நடையில் பல வகுப்பினரின் தனி நடையைக் குறைத்து, பல வட்டாரச் சொற்கள் விரவுவதைத் தடுத்து, தமிழ் மக்கள் அனைவரும், தமிழ் தெரிந்த அனைவரும் உணர்ந்து கொள்ளும் பொது நடையை ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.

## இன்றைய இதழ்களின் வகைகள்

கால அளவு வகைப்பாடு

1. நாளிதழ்கள்
2. வார இதழ்கள்
3. மாதமிருமுறை இதழ்கள்
4. மாத இதழ்கள்
5. காலாண்டு இதழ்கள்
6. அரையாண்டு இதழ்கள்
7. ஆண்டிதழ்கள்

என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

## எண்ணிக்கை வகைப்பாடு

ஒவ்வொரு இதழும், வெளிவரும் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிப்பர். அவை

### சிறிய இதழ்கள்

சர்வோதயம், கிராம ராஜ்யம்

### நடுத்தர இதழ்கள்

கலைமகள், அமுத சுரபி

### பெரிய இதழ்கள்

குமுதம், ஆனந்த விகடன், கல்கி, குங்குமம், இதயம்

இவற்றுள் குமுதம் ஏறத்தாழ 6 இலட்சம் பிரதிகளை வெளிக் கொணர்ந்து முதலிடத்தைப் பெறுகிறது.

### இன்றைய இதழ்களின் நோக்கம்

பழைய இதழ்கள் எல்லாம் ஒரு குறிக்கோளை நோக்கி தனது பயணத்தைத் தொடங்கியது. குறிப்பாக விடுதலை உணர்வு, அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு, ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலியவற்றை அனைத்துத் தரப்பினருக்கும் கொண்டு சேர்த்தது. இவை மக்களிடையே எழுச்சியையும், தேசப்பற்றையும் உருவாக்கின.

ஆனால் இன்றைய இதழ்கள் பொதுவாக வாணிப நோக்கத்தையே தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இவை விற்பனையைக் கூட்டி, ஆதாயத்தைப் பெருக்க எல்லா வழிகளிலும் முயல்கின்றன.

இன்றைய இதழ்களின் விற்பனை அதில் வெளிவரும் வண்ணப் படங்கள், திரைப்பட விமரிசனங்கள், திரைப்படத் துணுக்குகள், தொடர் கதைகள் ஆகியனவற்றைச் சார்ந்தே அமைந்துள்ளது. இதழாசிரியர் யாரென்று கவலைப்படுவதில்லை.

### இன்றைய இதழ்களின் எழுச்சிப் போக்குகள்

தற்காலத் தமிழ் இதழ்களில் பல எழுச்சிப் போக்குகள் தென்படுகின்றன.

அவை

1. இதழ்களின் அமைப்பு முறை
2. அச்சிடுதல்
3. நடை
4. இலக்கியப் போக்குகள்
5. துறை சார்ந்த தனி இதழ்கள்

போன்றவை எனலாம்.

ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் தமிழ் இதழ்கள் வெளி வருகின்றன. தமிழ் இதழ்களின் வளர்ச்சிப் பரப்பை அதனை வகைப் படுத்தியதிலிருந்தே அறியலாம்.

## வீழ்ச்சிப் போக்குகள்

பயிர்களிடையே வளரும் களை போல சமுதாயத்தைச் சீர்குலைக்கிற சில நச்சுப் போக்குகளும் ஊடு நூலாக வளர்ந்து வருவதையும் மறுக்க முடியாது.. அவற்றை இனம் கண்டு, உணர்ந்து அகற்ற வேண்டும். இல்லையெனில் நன்மைகளை விடத் தீமைகளே அதிகம் ஏற்படும்.

வாணிப நோக்கோடு செயல்படும் இதழ்கள் அறத்தில் கவனம் கொள்ளாது கவர்ச்சி, படங்கள், கதைகள், துணுக்குகள், கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டு இளந் தலைமுறையினர் முதல் வயோதிகர் வரை கவர்ந்து இழுத்து வருகிறது.

சிலர் பாலுணர்வை மலிவுப் பொருளாக்கி இதழ்களின் அட்டைப் படம் முதல் தொடங்கி பல இடங்களில் வெளியிட்டு விற்பனையைப் பெருக்கி ஆதாயம் அடைந்து வருகின்றனர்

திரைப்படத் துறையினரும், நடிகர்களும், நடிகைகளும் இதழ்களுக்குத் தீனி போட்டுத் தங்களின் ஆதாயத்தையும் பெருக்கி வருகின்றனர். பாலுணர்ச்சியை மிகைப்படுத்தி எழுதும் கதைகளும், அதற்கு வரையப்படும் படங்களும் மக்களினத்தைச் சீரழிக்கின்றன.

இவ்விதழ்களை ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் வாங்கி படிக்க முடியாத சூழல் உள்ளது.

பல இதழ்களில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், மக்களின் மன வளத்தை நல்ல முறையில் வளர்க்க உதவவில்லை. சமுதாயப் பண்பாடு, நாட்டு ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு ஆகியனவற்றை வளர்ப்பனவாக இல்லை. குப்பைகள் என்று ஒதுக்கக் கூடியனவற்றை வெளியிட்டு வாசகர்களின் உள்ளங்களில் இருள் மண்டச் செய்யவே துணை நிற்கின்றன.

## எதிர்காலத் தேவை

1. பாலுணர்வு
2. வன்முறை
3. மூன்றாந்தர அரசியல்
4. ஆபாசக் கலை

போன்றவற்றைப் பேணி வளர்க்கும் இழி செயல்களை விட்டு விட்டு இதழ்கள் தங்களுக்குரிய சமுதாயக் கடமைகளையும், பொறுப்புணர்வையும் உணர்ந்து செயல்பட வேண்டும். அப்போது தான் புதியதோர் சமுதாயத்தைப் படைக்க இயலும். மேலும் உண்மையைத் திரித்துக் கூறுகின்ற இருட்டடிப்புச் செய்கின்ற மக்களைத் திசை திருப்புகின்ற இதழ்கள் இருந்தால் பாதகமான விளைவுகளே ஏற்படும்.

இதழ்கள் உண்மையிலேயே சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமானால் அவை சில அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இத்தகு கொள்கைகளை வழிகாட்டும் விதிமுறைகளாக நல்ல இதழ்கள் பின்பற்றுகின்றன.

இதழ்கள் கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றினால் சமூகத்திற்குப் பெரிதும் துணை செய்யும்.

### 1. பொறுப்பு

இதழ்களுக்கும் சமுதாய பொறுப்பு உண்டு. அதிக விற்பனைக்காக வாசகர்களைக் கவரும் நோக்கில் பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிடக் கூடாது.

### 2. சுதந்திரம்

இதழ்களுக்கு உண்மையான செய்திகளை வெளியிட சுதந்திரம் உள்ளது. எதற்கும், யாருக்கும் அஞ்சியோ, அறநெறிக்குப் புறம்பாகவோ எதையும் பெறக் கருதியோ சுதந்திரத்தை இழக்கக் கூடாது.

### 3. கட்டுப்பாட்டுக்குள்ளடங்காமை

பொது, சமுதாய நாட்டு நலனைப் பாதிக்கும் வகையில் எந்தக் கட்டுக்குள்ளும் இதழ்கள் தங்களை ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது. பொது நலனுக்கு எதிராகத் துணை போகக் கூடாது. சிலருக்குக் கட்டுப்பட்டோ, அஞ்சியோ ஒரு தலை சார்பாகச் செய்திகளை வெளியிடக் கூடாது.

### 4. உண்மையாக, சரியாக வெளியிடல்

இதழ்கள் செய்திகளை மாற்றாமல், திரிக்காமல் உள்ளது உள்ளபடி வெளியிட வேண்டும். செய்திகளுக்குத் தருகின்ற தலைப்புகள் கவர்ச்சி கருதி வண்ணம் பூசும் வகையில் எழுதக் கூடாது. வாசகர்களுக்குச் செய்தித் தாள் உண்மைகளை மட்டுமே வெளியிடுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

### 5. ஒரு தலைச் சார்பின்மை

இதழ்கள் நடுநிலையோடு செய்திகளை வெளியிட வேண்டும். செய்திகளைத் தனியாகவும், அவை பற்றிய கருத்துக்களைத் தனியாகவும் வெளியிட வேண்டும். செய்திகளோடு தங்கள் சொந்தக் கருத்துக்களையும் வெளியிட்டு வாசகர்களைக் குழப்பவோ ஒரு பக்கத்தை ஆதரிக்கச் செய்யவோ, திசை திருப்பவோ கூடாது.

### 6. நியாயமாகச் செயல்படல்

செய்தித் தாள்கள் திட்டவட்டமாகத் தெரியாமல் எதனையும் வெளியிடக் கூடாது. குறிப்பாகச் சிலரைப் பாதிக்கின்ற உணர்வுகளைப் புண்படுத்துகின்ற பெயரையும், புகழையும் பாதிக்கின்ற செய்திகளை வெளியிடும் பொழுது, தொடர்புடையவர்களிடமும் கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொண்டு வெளியிடுவதே முறையாகும்.

### 7. பண்பாடு

செய்திகளைப் பண்பாட்டோடு வெளியிட வேண்டும். குறிப்பாகக் கொலை, கற்பழிப்புப் போன்ற குற்றச் செய்திகளை வெளியிடும் பொழுது மக்களின் பண்பாட்டிற்குக் கேடு செய்யாத வகையில் செய்திகளை வெளியிட வேண்டும்.

## நல்ல செய்தித் தாள்

ஒரு செய்தித் தாளை நல்ல சிறந்த செய்தித் தாளாகக் கருத வேண்டுமானாலட அவற்றில் சில தன்மைகள் இருக்க வேண்டும்.

அவை

### 1. எல்லா முக்கியச் செய்திகளையும் வெளியிடல்

நாட்டிலும், உலகிலும் நடைபெறுகின்றனவற்றுள் வாசகர்களுக்குத் தெரிய வேண்டிய, பயன்படக் கூடிய எல்லா முக்கியச் செய்திகளையும் வெளியிட வேண்டும். எந்த ஒரு முக்கியச் செய்தியும் விடுபடவோ, இருட்டடிப்புச் செய்யப்படவோ கூடாது.

### 2. முழுமையாக வெளியிடல்

வட்டார, தேசிய, உலக முக்கியச் செய்திகளை முழுமையாக வெளியிட வேண்டும்.

என்பனவாகும்.

நேற்றைய, இன்றைய எழுச்சிப் போக்குகளையும், வீழ்ச்சிப் போக்குகளையும் நன்கு ஆய்ந்து இதழ்களின் நோக்கங்களையும், விதிமுறைகளையும் அறிந்து நல்ல செய்தித் தாளை உருவாக்குவதில் இதழியலாளர் ஈடுபட வேண்டும்.

வன்முறை மலிந்து கிடக்கும் நம்நாடு சீரியதோர் இடத்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழ இதழியல் துறை அறத்தைப் போதிக்கும் கூடமாகத் திகழ வேண்டும்.

சமுதாய, அரசியல், நாகரிக வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடியாக இதழ்கள் விளங்க வேண்டும். நல்ல இதழ்கள் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்றன. குறிப்பாக வளர்கின்ற நாடுகளில் செய்தித் தாள்களும், இதழ்களும் பொறுப்போடு பணியாற்ற வேண்டும். அப்பொழுது தான் சமுதாய, பொருளாதார வளர்ச்சி சரியாக அமையும். சமூகமும் முன்னேற்றம் பெறும்.

## பயிற்சி வினாக்கள்

1. செய்தித் தாள் என்றால் என்ன?

2. காகிதமும் அச்சுக் கலையும் குறித்து எழுதுக.

3. இந்திய இதழியல் மூலங்கள் எவை?

4. இதழ்களின் ஒழுங்கு முறைக் கட்டுப்பாடு குறித்து விளக்கம் தருக.

5. சமூகச் சீர்திருத்தத்தில் இராஜாராம் மோகன்ராய் பங்கினை விவரிக்க.

6. இதழ்களின் வளர்ச்சி மற்றும் இடையூறுகளாகத் திகழ்பவை எவை?

7. இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கினைக் கட்டுரைக்க.

8. இந்திய இதழியல் வளர்ச்சி குறித்து எழுதுக.

9. தமிழக இதழ்களின் தோற்றம் குறித்து விளக்கம் தருக.

10. தேசிய இதழ்கள் சிலவற்றை விளக்கி எழுதுக.

11. திராவிட இயக்க இதழ்கள் குறித்து விரிவாக எழுதுக.

12. விடுதலை இயக்கக் காலத்தில் தமிழ் இதழ்களின் பங்கு குறித்து மதிப்பிடுக.

13. தற்காலத் தமிழ் இதழ்கள் பற்றி எழுதுக.

14. குறிப்பு வரைக : பழைய இதழ்கள்

15. புகழ் பெற்ற இதழ்கள் குறித்து விளக்கி எழுதுக.

16. புகழ்பெற்ற பத்திரிகையாளர் பற்றி எழுதுக.

17. இதழியல் சட்டங்கள் பற்றி விரிவாக எழுதுக.

18. குறிப்பு வரைக : பத்திரிகை கவுன்சில்

19. இதழ்களின் சுதந்திரம் எவ்வாறு இருந்தது? இன்று எவ்வாறு இருக்கிறது?

20. இதழ்களின் நடத்தையறம் பற்றிய உங்களது கருத்து யாது?

20. இன்றைய இதழியல் குறித்து மதிப்பிடுக.

அலகு - 3

## செய்தி

செய்தி என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். நான்கு திசைகளிலிருந்தும் கிடைக்கக் கூடிய புதுமையானதே செய்தி ஆகும். இதனை ஆங்கிலத்தில் NEWS - என்பர். அதன் விரிவாக்கமாக

N – North, E – East, W – West, S – South என்பதமைகிறது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பர். செய்தித் தாளுக்கு மூலமாக அமைவது செய்தியாகும். செய்தியில்லாமல் செய்தித்தாள் இல்லை.

**விளக்கம்.**

செய்தி என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

அவை

1. தற்போது நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்றைப் பற்றிக் கூறும் முதல் தகவல்.

2. புதிதாகக் கேட்கப்படுகின்ற ஒன்று.

3. எதையாவது வெளிக்காட்டுவது.

4. சிலா் மறைக்க நினைப்பது.

5. பெரும்பாலான மக்களைப் பாதிப்பது.

6. அதிகப்படியான மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவது.

7. நடைமுறை வாழ்க்கையிலிருந்து மாறுபட்டது.

8. நேற்று அறியாத ஒன்று.

9. மக்களுக்காக அளிக்கப்படுபவை.

10. பெரும் தலைவர்கள் சொன்னது

என்பனவாகும்.

## செய்தியின் வகைகள்

செய்தியின் தன்மையை ஒட்டி அவை பல வகைகளாக அமைகின்றன.

அவை

### 1. எதிர்பார்க்கும் செய்தி

தற்பொழுது இது நடைபெறும் என முன்கூட்டியே அறிந்தவை நடக்கும்போது அது எதிர்பார்க்கும் செய்தி எனப்படும். இதனை வழக்கமான செய்தி என்பர்.

**எ.கா.**

அரசு ஊழியர்கள் சம்பள உயர்வு, தேர்தல் முடிவுகள்

### 2. எதிர்பாரா செய்தி

யாரும் எதிர்பாராத வகையில் திடீரென நிகழ்வது எதிர்பாரா செய்தி எனப்படும். இதனை சிறப்புச் செய்தி என்பர்.

**எ.கா.**

சுனாமி, நிலவதிர்ச்சி, எரிமலை வெடிப்பு

### 3. நேரடிச் செய்தி

நிகழ்வு நடைபெறும் களத்திலிருந்து செய்திகளைச் சேகரித்து உடனுக்குடன் அனுப்பப்படுவது நேரடிச் செய்தியாகும்.

**எ.கா.**

அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு, கிரிக்கெட் போட்டி

**4. விளக்கச் செய்தி**

ஒரு நிகழ்வு எப்படி நடந்தது என்பதை விளக்கமாக அளிப்பது விளக்கச் செய்தி எனப்படும்.

**எ.கா.**

குழந்தை கடத்தல், திருட்டுச் செயல்கள்

**5. கடினமான செய்தி**

மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டாத செய்தி கடினமான செய்தி எனப்படும்.

**6. மெதுவான செய்தி**

உடனடியாக வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டாதவை மெதுவான செய்தி எனப்படும்.

**எ.கா.**

முதலமைச்சர் வருகை, வெளிநாட்டுப் பயணம்

**7. சூடான செய்தி**

வாசகர்களின் ஆர்வத்திற்குத் தீனியாக அப்போதே தரும் பரபரப்புச் செய்தி சூடான செய்தி எனப்படும்.

**எ.கா.**

தேர்தல் முடிவுகள்

**8. புலனாய்வுச் செய்தி**

ஒரு நிகழ்ச்சி எப்படி நடந்தது எனப் புலனறிந்து கூறுவது புலனாய்வுச் செய்தி எனப்படும்.

**எ.கா.**

போபர்ஸ் பீரங்கி ஊழல், விஜய் மல்லையா ஊழல்

## செய்திக் களங்கள்

செய்தி கிடைக்குமிடங்கள் செய்திக் களங்களாகும். இதனை, செய்தி மூலங்கள் என்றும் அழைப்பர்.

அவை

அரசு - பிரதமர், முதலமைச்சர் அலுவலகம்

அரசியல் - கட்சித் தலைமையகம், கட்சிக் கூட்டங்கள்

குற்றம் - காவல் நிலையங்கள், நீதி மன்றம்

வாணிகம் - அங்காடி, பங்குச் சந்தை

விளையாட்டு – போட்டி நடக்குமிடங்கள்

தட்ப வெப்பநிலை – வானியல் ஆராய்ச்சி நிலையம்

திரைப்படம் - ஸ்டுடியோக்கள், திரைப்பட சூட்டிங் நடைபெறுமிடம், நடிகர்கள் அலுவலகம்.

வேளாண்மை – வேளாண்மை அலுவலகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள்.

சமயம் - கோயில், மசூதி, தேவாலயம், பண்டிகைகள் நடைபெறுமிடங்கள்.

பிற – தொழிலாளர் சங்கம், தலைவர்கள் பேட்டி, பேருந்து நிலையம், புகைவண்டி நிலையம்.

# செய்தியாளர்கள்

நிருபம் என்ற சொல்லிலிருந்து நிருபர் அல்லது செய்தியாளர்கள் என்ற சொல் உருவானது. நிருபம் என்பதற்கு செய்திக் கடிதங்கள் என்பது பொருள். இது முகலாயர்கள் காலத்தில் வழக்கத்திலிருந்தது. நிருபங்களை எழுதியோர் நிருபர்கள் எனப்பட்டனர். ஆழ்கடலிலிருந்து முத்துக்களைத் தேடிக் கண்டுபிடிப்பது போல கடினப்பட்டுச் செய்திகளைச் சேகரித்துத் தருபவர்கள் நிருபர்களே.

**வகைகள்**

நிருபர்கள் அவர்களது நிலை, பயிற்சி, பணியாற்றுமிடம், துறை போன்றவற்றின் அடிப்படையில் பொது, சிறப்பு, பகுதிநேரம், வரிச் செய்தியாளர்கள் என வகைப்படுத்தப்படுவர்.

**பொதுச் செய்தியாளர்**

இவர்கள் இன்ன துறை என்று இல்லாமல் அனைத்துத் துறைச் செய்திகளையும் சேகரித்து அனுப்புவர். இவர்கள் செய்தி ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பர்

**சிறப்புச் செய்தியாளர்.**

இவர்கள் தாங்கள் தனித் திறமையும், தேர்ச்சி பெற்றுள்ள ஏதாவது ஒரு துறை சார் செய்திகளை மட்டுமே திரட்டி அனுப்புவர். இவர்கள் பாராளுமன்றச் செய்தியாளர், அயல்நாட்டுச் செய்தியாளர், குற்றவியல், திரைப்படத் துறை, விளையாட்டுச் செய்திகள் எனத் தங்களுக்குள் பிரித்துக் கொள்வர்.

பொதுச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர்கள் ஒரு பத்திரிகையின் முழு நேரப் பணியாளர்கள் ஆவர்

**பகுதி நேரச் செய்தியாளர்கள்**

இவர்கள் பத்திரிகையின் முழு நேரப் பணியாளர்கள் அல்லர். இவர்களுக்குச் சம்பளம் அவர்கள் திரட்டித் தரும் செய்தியின் தன்மைக்கேற்ப வழங்கப்படும். செய்தி சேகரிப்புச் செலவுக்குரிய பணம் வழங்கப்படும்.

**வரிச் செய்தியாளர்கள்**

இவர்கள் பத்திரிகையின் முழு நேரப் பணியாளர்கள் அல்லர். இவர்களுக்குச் சம்பளம் அவர்கள் திரட்டித் தரும் செய்தியின் தன்மைக்கேற்ப, வரிக்கு இவ்வளவு என்று வழங்கப்படும். செய்தி சேகரிப்புச் செலவுக்குரிய பணம் வழங்கப்படாது.

## செய்திச் சேகரிப்பு

செய்தியாளருக்குத் தலைமையாசிரியர் செய்தி திரட்டும் இடங்களைக் குறிப்பிடுவார். அங்கு சென்று செய்தியாளர்கள் செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

**1. நிகழ்ச்சியல் பங்கேற்றுச் சேகரித்தல்**

ஒரு நிகழ்ச்சி நடைபெறும் போது அதில் செய்தியாளர் நேரடியாகப் பங்கேற்றுச் செய்திகளைச் சேகரிப்பர்.

**2. நிகழ்ச்சியில் பார்வையாளராகப் பங்கேற்றல்**

செய்தியாளர் பாராளுமன்றம், சட்டமன்றங்கள் நடைபெறும் பொழுதும், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது பங்கேற்பாளராகக் கலந்து கொண்டு செய்திகளைச் சேகரித்து அனுப்புவர்.

**3. பேட்டியாளராகப் பங்கேற்றல்**

இவ்வகையில் செய்தியாளர் செய்திகளைப் பேட்டிகள் மூலம் பெற்று அனுப்புவது நடைபெறும். கடிதம், தொலபேசி வழியும் செய்திகள் சேகரிக்கப்படலாம்.

**4. வாசிப்பு மூலம் அளித்தல்**

செய்தியாளர் தான் தரும் செய்திகள் பற்றிய முழு விவரங்களைப் படித்துப் பின் சுருக்கமாக வாசகர்களுக்குப் புரியும் வகையில் அளிப்பர்.

**எ.கா.**

நிதியமைச்சரின் வரவு - செலவுத் திட்டம்

### 5. அறிவியல் முறையில் அளித்தல்

புள்ளியியல் அடிப்படை, கருத்துக் கணிப்பு, மின்னணுக் கருவி மூலம் பதிவு செய்து அனுப்புதல் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

# செய்திகளை எழுதும் முறை

**செய்திகள்**

1. அரசுச் செய்திகள்
2. குற்றச் செய்திகள்
3. நீதிமன்றச் செய்திகள்
4. சட்டப் பேரவைச் செய்திகள்
5. அறிவியல் செய்திகள்
6. விளையாட்டுச் செய்திகள்
7. சிறப்புக் கட்டுரைகள்
8. புத்தக மதிப்புரை
9. திரைப்படத் திறனாய்வு

எனப் பல வகைப்படும்.

**சான்று**

**புத்தக மதிப்புரை எழுதுதல்**

புத்தக மதிப்புரை என்பது புதிதாக வெளிவரும் நூல்களைப் பற்றியத் திறனாய்வு செய்யும் பகுதியாகும்.

இதனை எழுதும் போது

நூலின் பெயர், ஆசிரியர் பெயர், விலை, வெளியீட்டாளர், கிடைக்குமிடங்கள் போன்றனவற்றைக் குறிப்பிடுவதோடு அதில் இடம் பெற்ற கருத்துக்களை மட்டுமே மனதில் கொண்டு விருப்பு, வெறுப்பின்றி திறன்களை மட்டும் வெளிக் கொணரும் வகையில் எழுதுதல் வேண்டும்.

**மதிப்புரை அமைப்பு**

1. நூலின் விவரப் பகுதி

2. உள்ளடக்கம், இடம் பெற்றுள்ள செய்தி

3. திறனாய்வு – நூல் குறித்த மதிப்பீடு

**திரைப்படத் திறனாய்வு**

திரைப்படத் திறனாய்வு எழுதுவோர் திரைப்படத் துறையில் முன்னனுபவம் பெற்றிருக்க வேண்டும். கதை, பாடல்கள், நடிப்பு, இயக்கம், ஒலிப்பதிவு ஆகியன குறித்துத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். படத்தின் வெற்றிக்கு யார் காரணமாக அமைந்துள்ளனர் என்பதையும் குறிப்பிடல் நன்மை பயக்கும்.

இன்று திரைப்படத் திறனாய்வில் மதிப்பெண்கள் மூலமும், நன்று, ஒரு முறை பார்க்கலாம், சுமார் எனக் குறிப்பிடப்படுவதும் உண்டு.

# பேட்டி

பேட்டியை நேர்முகம் எனத் தமிழில் அழைப்பர். பேட்டி ஒரு கலையாகும். பேட்டி இல்லையேல் செய்தியில்லை. செய்தி மூலங்களில் முதன்மையானது பேட்டியாகும். பேட்டி நடத்தத் தெரியாதோர் செய்தியாளராக முடியாது.

**நோக்கம்**

1. ஒரு செய்தி தொடர்பான அதி விவரங்களை வெளிக் கொணர்வதும்

2. சாதனை, சோதனைகள் அறிவதும்

பேட்டியின் நோக்கமாகிறது.

**வகைகள்**

**செய்திப் பேட்டி**

ஒரு செய்தியைக் குறித்து பிறரிடமோ, தொடர்புடையோரிடமோ பேட்டி காண்பது செய்திப் பேட்டி எனப்படும்.

எ.கா.

நடிகர் அஜீத்திடம் சூப்பர் ஸ்டார் ரஜனி எனக் கேட்டவுடன் ‘சூப்பர் ஸ்டார் யார் வேண்டுமானாலும் ஆகலாம்’ எனக் கூறிப் பரபரப்பு ஏற்படுத்தியதைச் சுட்டலாம்.

**தொலைபேசிப் பேட்டி**

தொலைபேசி மூலம் பேட்டி காண்பது.

தொலைக்காட்சி, வானொலி - சிறப்பு விருந்தினரிடம் தங்களுக்குப் பிடித்த நடிகர், பாடல், படம், புத்தகம் போன்றவற்றைக் கேட்டறிந்து ஒலி, ஒளி பரப்புவதைச் சுட்டலாம்.

**ஆளுமை விளக்கப் பேட்டி**

வியத்தகு சாதனை செய்தவரிடம் பேட்டி காண்பது.

**எ.கா.**

ஒலிம்பிக் சாதனையாளர் - தடகள வீரர் - மாரிமுத்து

**அடைகாத்தல பேட்டி**

சிலர் தாங்களாகவே வலிய வந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதைச் சுட்டலாம்.

**நடுத் தெரு பேட்டி**

நடுத் தெருவில் நின்று கொள்டு வருவோர், செல்வோரிடம் பேட்டி காண்பது.

**எ.கா.**

நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள்?

தீபாவளித் திரைப்படத்தில் உங்களைக் கவர்ந்த படம் எது?

**பட்டம் பறக்க விடும் பேட்டி**

சிலர் பேட்டிக்காக அழைத்துத் தங்கள் கருத்துக்களையே தொடர்ந்து வலியுறுத்துவார்கள். இதனைப் பட்டம் பறக்க விடும் பேட்டி என்பர்.

**எ.கா.**

வைகோ தன் சிறைவாழ்க்கை, சிவகாசியில் போட்டியிடாமை ஆகியன குறித்து உணர்ச்சி வசப்பட்டு தொடர்ந்து கூறியதைச் சுட்டலாம்.

**பயன்கள்**

1. பொது மக்களின் கருத்துக்களை உருவாக்க
2. மேன்மேலும் விளக்கங்களைப் பெற
3. பல்வேறுபட்ட குணநலன்களை உணர
4. புதிய புதிய செய்திகளை உருவாக்க

பேட்டி பயன்படுகிறது.

பேட்டியை வெற்றிகரமாக நடத்த திட்டமிடுதல், இணங்க வைத்தல், தெளிவாக அறிதல், தொடர் முயற்சி ஆகிய நான்கும் தேவை.

மேலும் வியத்தகு விளைவுகளைத் தருகின்ற பேட்டிகள் பெரும்பாலும் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டிருக்கும். பேட்டி காண்போரின் கேள்விக்கு ஏற்பவும் விளைவு இருக்கும். இயல்பாக புன்முறுவலுடன் நன்றி கூறி பேட்டியை முடிக்க வேண்டும்.

## தலைப்பு

ஒரு செய்திக்குத் தலைப்பு என்பது மனித உடலுக்குத் தலை போன்றது. ஒருவர் பார்த்தவுடனே ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், அவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையிலும் கவர்ச்சிகரமாக செய்திக்குத் தலைப்பிட வேண்டும்.

**தலைப்பு எழுதுதல்**

செய்தியின் முக்கியக் கருத்தினைத் தெரிவிக்கும் வகையிலும், மக்களுக்கு அறிமுகமான சொற்கள், இரு பொருள் தராமல், ஒரே சொல்லைத் திரும்பப் பயன்படுத்தாமல் செய்திகளுக்குத் தலைப்பிட வேண்டும்.

**தலைப்பு வகைகள்**

**ஒரு வரித் தலைப்பு**

ஒரு செய்திக்கு ஒரே வரியில் தலைப்பிடுவதற்கு ஒரு வரித் தலைப்பு என்று பெயர்.

**எ.கா.**

பிப்.21இல் பஞ்சாயத்துத் தேர்தல்

**இடது ஓர ஒட்டுத் தலைப்பு**

இது இடது ஓரத்தில் ஓரே நேர்கோட்டிலமையும்.

எ.கா.

தனுஷ் - ஐஸ்வர்யா விவாகரத்து

**வலது ஓர ஒட்டுத் தலைப்பு**

இது வலது ஓரத்தில் ஓரே நேர்கோட்டிலமையும்.

எ.கா.

நடிகர் விஜய் தனிக்கட்சித் தொடக்கம்

பஞ். தேர்தலில் போட்டி

**படிவ வடிவத் தலைப்பு**

சம நீளமுடைய வரிகள் ஓர் அலகு இடைவெளியிட்டு அமையும்.

எ.கா.

நூதன முறையில் திருட்டு

கூகுள் பே முலம்.

**தலைகீழ் பிரமிடு தலைப்பு**

ஒவ்வொரு அடியும் சிறிது சிறிதாக குறைந்திருக்கும்.

எ.கா.

கர்நாடாகவில் மேகதாது, தமிழகம் எதிர்ப்பு

**நேர்பிரமிடு தலைப்பு**

ஒவ்வொர் அடியும் சிறிது சிறிதாக கூடும்.

குடியரசு தின விழாவில் தமிழக அலங்கார ஊர்திக்கு மறுப்பு

**மேற்கோள் தலைப்பு**

ஒருவர் கூற்றைத் தலைப்பாகக் கூறுதல்

எ.கா.

‘‘வாரிசு நியமனம் தி.மு.க.வில் கிடையாது’’ - ஸ்டாலின் அறிவிப்பு

**நெற்றித் தலைப்பு**

முக்கியச் செய்தி அடிக் கோடிட்டுக் காட்டப்படும்.

எ.கா.

பிக்பாஸ்ஸிலிருந்து கமல் வெளியேறல்.

## முகப்பு

ஒரு செய்தியின் தலைப்பை அடுத்து இடம் பெறுவது முகப்பு. செய்தியின் தலைப்பை அடுத்து இடம் பெறுவது முகப்பு எனப்படும். செய்தியின் முதல் பத்தி முகப்பு. இதை செய்தியின் அறிமுகம் என்பர். செய்தி முழுமையையும் படிக்கத் தூண்டும் வகையில் முகப்பு இருக்க வேண்டும். என்ன? எங்கே? என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

பல்வேறு அறிஞர்கள் முகப்பு எப்படி அமைய வேண்டும் எனத் தங்கள் கருத்தைத் தெரிவத்துள்ளனர்.

அவை

**வால்டர் கேம்பஸ்**

1. ஹே - வாசகர் கவனம் ஈர்ப்பு
2. நீ – ஆர்வம் தூண்டல்
3. பார் - சாரத்தை உணர்த்தல்
4. ஆகையால் - செயல்படத் தூண்டுதல்

**நிலன் பிரவுன்**

1. முகப்பு நேர்மையானதாக இருக்க வேண்டும்
2. பழக்கப்பட்ட பெயர் இருத்தல் நன்று.
3. 25 சொற்களுக்குள் அமைய வேண்டும்.
4. கேள்வி, மேற்கோள் தவிர்க்கப்பட வேண்டும்

என்கிறார்.

**ஷேவார்டு கெய்ன்**

1. அறிவித்தல்
2. சுருக்கம்
3. எளிமை
4. உயிரோட்டம்
5. சுவை
6. தெளிவு

ஆகியன முகப்பிலிருக்க வேண்டும் என்கிறார்.

**முகப்பு வகைகள்**

**சாரமுகப்பு**

செய்தியின் சாரத்தைத் தொகுத்துக் கூறுவது.

**எ.கா.**

கொரனா அதிகரிப்பு இல்லையாதலால் ஊரடங்கு தளர்வு – என மா.சுப்பிரமணியன் தகவல்

**சூழ்நிலை முகப்பு**

செய்தி நடந்த சூழலை விளக்குவது.

**எ.கா.**

நீட் தேர்வில் வெற்றி பெற முடியாது என நினைத்து அனிதா தற்கொலை.

**மேற்கோள் முகப்பு**

ஒரு மேற்கோளோடு முகப்பு அமைப்பது.

‘வேலியே பயிரை மேய்ந்த கதை’ - திருட்டு வழக்கில் போலீஸ்காரர் கைது.

**வருணனை முகப்பு**

ஒன்றைப்படம் பிடித்துக் காட்டுவது போல வருணிப்பது.

நேற்று நடைபெற்ற திருச்செந்தூர் சூரசம்காரத் திருவிழாவில் இலட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். கடலா! கடலலையா!! என்பது போல பக்தர்களின் கூட்டம் கரை புரண்டு ஓடியது.

**கேள்வி முகப்பு**

கேள்வி கேட்கும் விதமாக அமைவது.

தமிழகத்தின் வேலைவாய்ப்பில தமிழில் பயின்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

இவை தவிர புதுமை முகப்பு, குண்டு முகப்பு, பழமொழி முகப்பு, வியப்பு முகப்பு, உரையாடல் முகப்பு போன்றவையும் உண்டு.

## தலையங்கம்

ஒரு முக்கியச் செய்தி பற்றி அதன் ஆசிரியர் சுருக்கமாகக் கருத்துத் தெரிவித்து எழுதப்படுவது தலையங்கமாகும். ஆன்மா, மனச்சான்றே தலையங்கமாகும். முதன் முதலில் தலையங்கம் எழுதியவர் பாரதியாரே ஆவார். இவர், தான் நடத்திய இந்தியா பத்திரிகையிலும் பணிரிந்த சுதேசமித்திரன் இதழ்களிலும் தலையங்கம் எழுதியுள்ளார்.

குறிப்பிட்ட, சில இதழ்களில் மட்டுமே தலையங்கம் வெளிவரும்.

**எ.கா.**

தினமணி, இந்து, தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களும், துக்ளக், ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்ற வார இதழ்கள்

காந்தியடிகள் யங் இந்தியா, ஹரிஜன் ஆகிய இதழ்களில் தலையங்கம் எழுதியுள்ளார்.

**வகைகள்**

ஆங்கில இதழ்களின் அடிப்படையில் தலையங்கம்

1. அறிந்த பொருள் பற்றிய துணைத் தலையங்கம்.
2. பொதுவாகக் கருதப்படும் மேம்போக்கான தலையங்கம்

என வகைப்படுத்தப்படுகிறது.

**இயல்புகள்**

1. நல்ல தலையங்கம் தெளிவான நடையில் வலுவான கருத்துக்களோடு இருக்க வேண்டும்.
2. தலையங்கம் நேரடியாகச் சிக்கலைக் கூறி கருத்துக்களைக் கூற வேண்டும்.
3. தலையங்கம் கட்டுரை போன்று நீண்டு அமையக் கூடாது.
4. தலையங்கம் எழுதுவோர் ஓர் அறிவியலாளரைப் போல சமுதாயத்திற்கு நம்பிக்கை தரும் வகையில் உண்மையாளராக இருந்து எழுத வேண்டும்.
5. எப் பொருள் குறித்தும் தலையங்கம் எழுதலாம்.

## பக்க அமைப்பு

செய்தித் தாளில் அளவு, எழுத்து வகைகள், விதவிதமான தலைப்புகள், பொருத்தமான படங்கள், பல்துறைச் செய்திகள், கதை, கட்டுரைகள், துணுக்குகள், கருத்துப் படங்கள், கேலிச் சிததிரங்கள், விளம்பரங்கள் முதலியவனவற்றைப் பரவலாகவும் பக்கவாரியாகவும் பொருத்தமுற அமைப்பது பக்க அமைப்பு அல்லது பக்கம் கட்டுதல் எனப்படும்.

**பயன்கள்**

1. பிற இதழ்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட
2. வாசகர்களைத் வாங்கத் தூண்ட
3. செய்திகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள
4. கலைத் தோற்றத்தை வடித்துக் காட்ட

பக்க அமைப்புப் பயன்படுகிறது.

**வகைகள்**

**சமநிலைப் பக்க அமைப்பு**

ஒவ்வொரு பக்கத்திலும் கருத்துப்படம், துணுக்கு, பெட்டிச் செய்தி, விளம்பரம் முதலியவை செய்திகளோடு சமநிலையில் அமைந்திருப்பதற்கு சமநிலைப் பக்க அமைப்பு என்று பெயர்.

**மாறுபாட்டு சமநிலைப் பக்க அமைப்பு**

சமநிலைப் பக்க அமைப்போடு சில மாறுபட்ட அமைப்புகளைச் சேர்த்துக் கொள்வதை மாறுபாட்டு சமநிலைப் பக்க அமைப்பு என்பர்.

**கலப்பு நிலைப் பக்க அமைப்பு**

எப்பகுதியும் எங்கும் இடம் பெறலாம் என்பதற்கு கலப்பு நிலைப் பக்க அமைப்பு என்று பெயர்.

## செய்தி நிறுவனங்கள்

நாளிதழ்கட்கு உதவியாக நிற்பவை செய்தி நிறுவனங்கள் எனப்படும். இவை தொலைபேசி, செயற்கைக் கோள், கணிப்பொறி, தொலை ஒளிப்படம், தொலை அச்சு போன்றவற்றின் மூலம் செய்திகளை அனுப்புகின்றன.

**உலகச் செய்தி நிறுவனங்கள்**

**இராய்டர்**

இலண்டனில் 1851இல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜூலியஸ் இராய்டர் ‘ராய்டர் பீரேர் என்ற செய்தி நிறுவனத்தைத் தொடங்கினார். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குச் செய்திகளை உடனுக்குடன் கொடுக்கின்ற உலகின் தலை சிறந்த நிறுவனம் இராய்டர் ஆகும்

**அசோசியேட் பிரஸ்**

1848இல் நியுயார்க்கில் ஹார்பர் நியூஸ் அசோசியேசன் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. பின் 1857இல் டெலிகிராபிக் அண்ட் ஜெனரல் நியூஸ் அசோசியேசனுடன் இணைந்த போது

நியூயார்க் அசோசியேட் பிரஸ் என்ற பெயர் மாற்றம் பெற்றது. 1934இல் கூட்டுறவு நிறுவனமாக மாற்றப்பட்டது.

**யுனைடெட் பிரஸ் இண்டர்நேசனல்**

1909இல் ஸ்கிரிப்ஸ் யுனைடெட் பிரஸ் அசோசியேசன், 1915இல் ஹார்ஸ்ட் தொடங்கிய இண்டர் நேசனல் நியூஸ் சர்வீஸ் ஆகிய இரண்டும் இணைந்து உருவானதே யு.பி.ஐ. நியுயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இது தனியாரின் கட்டுப்பாட்டிலிருக்கிறது.

**ஏஜன்சி பிரான்ஸ் பிரஸ்**

இது பல சிறிய நிறுவனங்கள் ஒன்று கூடி 1835இல் பாரிஸ் நகரில் தொடங்கப்பட்டது ஆகும். பிரஞ்சுககாரர்களின் போராட்டத்தின் விளைவாக ஏஜன்சி பிரான்காஸ் இண்பென்டின்ட்ஸ் என்றமைப்பை இலண்டனில் நிறுவி அதிலிருந்து ஏ.ஃ.பி. உருவானது. இதன் நிருவாகத்தில் பிரஞ்சு செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சிகள், செய்தி நிறுவன ஊழியர்கள், பொது மக்களின் சார்பாளர்கள் பங்கு பெறுகின்றனர்.

**டாஸ்**

இது 1918 முதல் சோவியத் ரஸ்யாவின் செய்தி நிறுவனமாகச் செயல்படுகிறது. இதனை 'ரோஸ்டா' என்றழைத்தனர். 110 நாடுகளில் செய்திகளைத் திரட்ட தனியே அலுவலகங்களையும், அலுவலர்களையும் கொண்ட பெரிய நிறுவனமாகும். இது அரசுக்குப் புறம்பான செய்திகளை வழங்காது.

**உள்நாட்டுச் செய்தி நிறுவனங்கள்**

**பிரஸ் டிரஸ்ட ஆப் இந்தியா**

1947ஆம் ஆண்டு வரை இந்தியாவின் ஒரே செய்தி நிறுவனமாக ஏ.பி.ஐ. திகழ்ந்தது. இது கொடுத்த செய்திகள் இங்கிலாந்து சார்புடையதாகவே இருந்தது. எனவே இந்திய இதழியலாளர்கள உள் நாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றை அமைத்து உலகச் செய்திகளைப் பெற்றுக் கொள்ள எண்ணி பி.டி.ஐ. அமைத்தனர். 1948 முதல் இராய்டர் செய்திகள் பி.டி.ஐ. மூலமே செய்தித் தாள்களுக்குக் கிடைத்தன. இது ஐரோப்பிய இந்தியச் செய்தித் தாள்களுக்குஇடையே விரைவான செய்தித் தொடர்பை ஏற்படுத்தித் தந்தது. வானொலி, தொலைக்காட்சி, அரசுச் செய்தித் துறை, வணிகக் கழகங்கள், தொழிற்சாலை ஆகியனவற்றிற்குத் தேவையான செய்திகளையும் இந் நிறுவனம் வழங்கி வருகிறது.

**யுனைடெட் பிரஸ் ஆப் இந்தியா**

1933இல் கல்கத்தாவில் சென்குப்தாவினால் தோற்றுவிக்கப்பட்டது. இதன் கிளை இலாகூரில் திறக்கப்பட்டது. இது பொருளாதார நெருக்கடியால் 1961இல் மூடப்பட்டது. இதன் பணிகளை யு.என்ஐ. ஏற்றுச் செய்து வருகிறது.

**யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா**

யு.பி.ஐ. நிறுவனத்தைத் தான் கொடுத்த கடனுக்காக மேற்கு வங்க அரசு யு.பி.ஐ. நிறுவனத்தைக் கைப்பற்றியது. அந்நிலையில் ஐந்து பெரிய நிறுவனங்கள் உரிய தொகையைச் செலுத்தி யு.பி.ஐ. நிறுவனத்தை மீட்டது. 1959இல் யு.என்.ஐ. என பதிவு செய்தது. இதனை 1961 முதல் செயல்பட வைத்தனர். இதன் தலைமையகம் மும்பை. அமெரிக்க நாட்டு ஏ.பி. நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அயல் நாட்டின் செய்திகளை இந்திய இதழ்கட்கு வழங்குகிறது. வணிக நிலையங்கட்கும் தேவையான செய்திகளை

வழங்குகிறது. இந்தியாவில் யு.என்.ஐ. பி.டி.ஐ.க்குப் பிறகு உள்ள இரண்டாவது பெரிய செய்தி நிறுவனம் ஆகும்.

**இந்துஸ்தான் சமாச்சார்**

இது தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் தொடங்கப்பட்ட முதல் செய்தி நிறுவனம் ஆகும். இது ஆங்கிலம் தவிர 8 இந்திய மொழிகளில் செய்திகளைத் தருகிறது. இது 1948இல் தனியார் நிறுவனமாகத் தொடங்கப்பட்டு 1957இல் கூட்டுறவு நிறுவனமாக மாற்றப்பட்டது. இந் நிறுவனம் சிறிய ஊர்களுக்கும் செய்தியாளர்களை அனுப்பி வட்டாரச் செய்திகளைத் தொகுத்து இந்திய மொழிகளுக்கு தருகிறது.

**சமாசார் பாரதி**

இந் நிறுவனமும் இந்தியாவில் பல்வேறு மொழிகளில் செய்திகளை வழங்குகிறது. சிறிய நிருவாகத்தில் நடைபெறும் இந்திய மொழி இதழ்களுக்கும் செய்திகளை வழங்குகிறது. இதற்குப் பெரிய இதழ்களின் ஆதரவு கிட்டவில்லை.

இவை தவிர டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய செய்தி நிறுவனங்கள் தாங்களாகவே இந்தியன் நியூஸ் சர்வீஸ் என்ற நிறுவனத்தைச் சில காலம் நடத்தின. பத்திரிகைகள், தொலைக்காட்சி ஆகிய இரண்டிற்குமான செய்திகளைத் தரும் நோக்கில் சில நிறுவனங்கள் தோன்றின.

**எ.கா.**

ஏ.என்.ஐ., ஐ.என்.ஐ.

## நிருவாக அமைப்பு

ஒரு நிருவாகம் சிறப்பாக அமைந்தால் மட்டுமே அது சார்ந்து இயங்குபவை சிறப்பாக அமையும்.

ஒரு செய்தித் தாளுக்கு

1. அலுவலகம்

2. பணிப்பிரிவு

என்ற இரண்டு பிரிவுகளுண்டு.

ஆனால் நடுத்தர, பெரிய இதழ்களில் 3 துறைகள் செயல்படுகின்றன.

அவை

1. வாணிபப் பகுதி

2. இயந்திரப் பகுதி

3. ஆசிரியர் பகுதி

இவற்றை முன் அலுவலகம், பின் பணியறை, செய்தியறை எனவும் கூறுவர்.

தற்போது நாளிதழ்களில்

1. ஆசிரியப் பிரிவு

2. வாணிபப் பிரிவு

3. இயந்திரப் பிரிவு

4. வளர்ச்சிப் பிரிவு

5. புள்ளி விவரப் பிரிவு

6. நிருவாகப் பிரிவு

என்ற 6 பகுதிகள் நாளிதழ்களில் உள்ளன.

## ஆசிரியர் பிரிவு

ஒரு நாளிதழின் தரமும், தனித் தன்மையும் அதன் ஆசிரியப் பிரிவு சார்ந்தே அமைகிறது. இவரே நாளிதழின் இதயம் எனக் கருதப்படுகிறார். இப் பிரிவில் தலைமையாசிரியர்,

இவருக்குத் துணையாக ஒவ்வொரு பகுதிக்கும் ஓராசிரியர், துணையாசிரியர், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் உண்டு.

**செய்தியறை**

இதில் உள்ளூர், வட்டார, மாநில, தேசிய, உலகச் செய்திகள் வந்து குவிந்த வண்ணமிருக்கும். இவற்றை வகைப்படுத்துவது செய்தியறையின் பணியாகும்.

**படி எடுக்கும் பகுதி**

இப் பகுதி செய்திகளைச் செப்பனிட்டு உருவாக்குகிறது. இது செய்தி, துணையாசிரியர் பணியாகும். இவர்கள் வெளியிடப் போகும் செய்தியைச் செப்பனிடுதல் அதற்கு ஒரு தகுந்த தலைப்பினை அளிப்பர்.

**தலையங்கப் பகுதி**

எது காலத்தின் தேவையோ அதனைத் தீர்மானித்துத் தங்களின் கொள்கை அடிப்படையில் தலையங்கம் எழுதுவர்.

**படப் பகுதி**

ஆசிரியர்களின் குறிப்புக்குத் தகுந்தவாறு செய்திக்குரிய புகைப்படங்களை புகைப்படக்காரர், ஓவியர்கள் அமைத்துக் கொடுப்பர்.

**நூலகம்**

இதில் அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், படங்கள், பழைய செய்தித் தாள்களின் தொகுப்புகள், தலைவர்களின் படங்கள், வாழ்க்கைக் குறிப்புகள் போன்றவை தொகுத்து வைக்கப்பட்டிருக்கும்.

## வாணிபப் பிரிவு

ஓரிதழ் தொடர்ந்து நடைபெற வாணிபப் பிரிவே இன்றியமையாததே. இதற்குப் பொதுவாக இதழ் வெளியீட்டாளரே தலைவராக இருப்பார். பெரிய நாளிதழ்களில் இத்துறைக்கு வாணிப நிருவாகி தலைவராக இருப்பார்.

**விளம்பரப் பகுதி**

இப் பகுதிக்குப் பொறுப்பு விளம்பர நிருவாகி ஆவார்.

இப் பகுதியை

1. உள்ளூர் விளம்பரப் பிரிவு
2. பொது விளம்பரப் பிரிவு
3. வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள்
4. சட்ட விளம்பரங்கள்

என நான்காகப் பிரிப்பர்.

**விற்பனைப் பகுதி**

இது நாளிதழுக்கு வாழ்வளிக்கும் பகுதியாகும்.

இது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கும்

அவை

1. நகரச் சுழல் பகுதி
2. வட்டாரச் சுழல் பகுதி
3. கணக்குப் பகுதி

## இயந்திரப் பிரிவு

இப் பகுதி இயந்திரக் கண்காணிப்பாளர் ஒருவரின் மேற்பார்வையில் இயங்கும்.

இது ஐந்து பகுதிகளைக் கொண்டது.

அவை

1. அச்சுக் கோர்க்கும் பகுதி
2. அமைப்புப் பகுதி
3. படங்களைச் செதுக்கும் பகுதி
4. அச்சடிக்கும் அறை
5. மெய்ப்புப் திருத்தும் பகுதி

ஆகும்.

## இதழ்களின் பகுப்பும் அமைப்பும்

இதழ்கள் அதன் இயல்பு, வெளியிடப்படும் காலம், உள்ளடக்கம், தரம், நோக்கம் போன்றவற்றால் வேறுபடுகின்றன.

இவ்வடிப்படையில் இதழ்களை

1. காலயடிப்படை
2. தன்மையடிப்படை
3. உள்ளடக்கயடிப்படை

என வகைப்படுத்தலாம்.

## காலயடிப்படைப் பகுப்பு

இதழ்களை வெளியிடும் காலத்தின் அடிப்படையில்

1. நாளிதழ்கள்

   அ. காலை இதழ்கள் - தினத் தந்தி, தினகரன், தினமலர், தினமணி

   ஆ. மாலை இதழ்கள் - மாலை முரசு, மாலை மலர்

2. பருவ இதழ்கள்

   அ. வார, வாரமிருமுறை – குமுதம், ஆனந்த விகடன், கல்கி, குஙகுமம் ஜுனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர்

   ஆ. திங்கள் இருமுறை – வானொலி, வர்த்தகக் குரல்

   இ. திங்கள் - கலைமகள், அமுத சுரபி, தாமரை, ராணிமுத்து, மங்கையர் மலர்

   ஈ. காலாண்டு – காவ்யா

   உ. அரையாண்டு - இலக்கியப் பத்திரிகைகள்

   ஊ. ஆண்டு - இதழ்கள் - தீபாவளி, பொங்கல் சிறப்பு, கல்லூரி, பள்ளி மலர்கள்

என வகைப்படுத்துவர்.

## தன்மையடிப்படைப் பகுப்பு

### தரமான இதழ்கள்

பெரும்பாலும் புலமை மிக்கவர்கள் படிக்கக் கூடிய இதழ்கள் தரமான இதழ்கள் எனப்படும்.

**எ.கா.**

செந்தமிழ்ச் செல்வி, ஆராய்ச்சி. காலச் சுவடு, சமூக விஞ்ஞானம்.

### மக்கள் இதழ்கள்

அனைத்துத் தரப்பு மக்களும் படிக்கக் கூடிய இதழ்கள் மக்கள் இதழ்கள் எனப்படும். தமிழில் வெளிவரும் பெரும்பான்மை இதழ்கள் இவ்வகையைச் சார்ந்தவையே.

### நச்சு இதழ்கள்

படிப்போர் மனதைக் கெடுக்கும் வகையில் கதை, கட்டுரைகள், படங்களைக் கொண்டு வெளிவரும் இதழ்கள் நச்சு இதழ்கள் ஆகும்.

## உள்ளடக்க அடிப்படைப் பகுப்பு

உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, வெளி வரும் இதழ்களைப் பகுக்கலாம்.

1. பொழுது போக்கு இதழ்கள் - குமுதம், ஆனந்த விகடன்
2. அரசியல் இதழ்கள் - ஜனசக்தி, விடுதலை, முரசொலி
3. இலக்கிய இதழ்கள் - செந்தமிழ்ச் செல்வி, எழுத்து
4. கவிதை இதழ்கள் - குயில், முல்லைச் சரம்
5. சிறுவர் இதழ்கள் - கோகுலம், அணில்
6. அறிவியல் இதழ்கள் - கலைக் கதிர், வளர் தமிழ்
7. மருத்துவ இதழ்கள் - நல்வழி, உடல் நலம்
8. கல்வி இதழ்கள் - கல்வி, ஆசிரியர் குரல்

9. மகளிர் இதழ்கள் - அவள் விகடன், சிநேகிதி

10. தொழில் இதழ்கள் - வளர் தொழில், ஏர் முரசு

11. கொள்கை விளக்க இதழ்கள் - கூட்டுறவு, சர்வோதயம்

12. வாணிப இதழ்கள் - வர்த்தகர் உலகம், வணிகச் செய்தி

13. விளையாட்டு இதழ்கள் - ஒலிம்பிக், விளையாட்டு உலகம்

14. சோதிட இதழ்கள் - மாத சோதிடம், விதி

15. சமய இதழ்கள் - தரும சக்கரம், இராம கிருஷ்ண விஜயம்

16. திரைப்பட இதழ்கள் - பேசும்படம், ஜெமினி

17. புலனாய்வு இதழ்கள் - நக்கீரன், ஜு.வி.

18. புதின இதழ்கள் - மாலைமதி, குங்குமச் சிமிழ்

19. தொகுப்பு இதழ் - மஞ்சரி

20. துணுக்கு இதழ்கள் - கல்கண்டு, முத்தாரம்

இவற்றில் பல இதழ்கள் தற்போது வெளிவரவில்லை.

## பயிற்சி வினாக்கள்

1. செய்தி பற்றிய விளக்கம் யாது?

2. செய்திகளின் வகைகளை விளக்கி எழுதுக.

3. செய்திக் களங்களாகத் திகழ்பவை எவை?

4. செய்தி சேகரிப்பது எவ்வாறு நிகழ்கிறது?

5. குறிப்பு வரைக : புத்தக மதிப்புரை

6. பேட்டியின் வகைகளை விளக்குக.

7. தலைப்பு வகைகளைப் பட்டியலிடுக.

8. முகப்பின் வகைகளைச் சுட்டுக.

9. தலையங்கத்தின் இயல்புகள் எவை?

10. பக்க அமைப்பு குறித்து விளக்கம் தருக.

11. உள்நாட்டு செய்தி நிறுவனங்களை விளக்கி எழுதுக.

12. வெளிநாட்டு செய்தி நிறுவனங்களை பற்றி விளக்கம் தருக.

13. இதழ்களின் நிர்வாக அமைப்பில் ஆசிரியர், வாணிபம், இயந்திரப் பிரிவு குறித்து கட்டுரைக்க.

14. இதழ்களின் பகுப்பும் அமைப்பும் குறித்து கட்டுரை வரைக.

**அலகு – 4.**

## கருத்துப்படங்கள்

கருத்துப்படம் என்பது பொது மக்களின் எண்ணப் பிரதி பலிப்பே ஆகும். இப்படங்களின் உள்ளடக்கமாக அரசியல், போராட்டம், விலைவாசி உயர்வு, சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இக் கருத்துப் படம் படத் தலையங்கங்களைக் கொண்டது.

### முதல் கருத்துப்படம்

1857 - இல் இந்தியாவில் டெல்லி கெசட் இதழில் முதல் கருத்துப் படம் வெளிவந்தது. தமிழ்நாட்டில் பாரதியாரின் இந்தியா இதழின் முதல் பக்கத்தில் கருத்துப்படம் வெளிவந்தது. இக் கருத்துப்படங்கள் தேசபக்தன், விநோதினி இதழிலும் வெளிவந்தன.

### காலணா இதழ்கள்

காலணா விலை கொண்ட இதழ்கள் காலணா இதழ்கள் எனப்பட்டன. இவற்றில் குறிப்பிடத் தகுந்த இதழ் ‘காந்தி’. இவ்விதழிலும் கருத்துப்படங்கள் வெளிவந்தது.

இன்றைக்கு நாளிதழ்களில் முதல் பக்கத்திலும், வார இதழ்களில் உட்பக்கங்களிலும் கருத்துப்படங்களை வெளியிடுகின்றன.

### வகைகள்

பொதுவாகக் கருத்துப் படங்களை அவற்றை வெளியிடும் முறையின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

### 1. தலையங்கக் கருத்துப்படம்

ஆசிரியரின் தலையங்கத்திற்கு அரண் செய்யும் வகையில் தலையங்கத்தை ஒட்டி சில கருத்துப் படங்களை இதழ்களில் வெளியிடுவார்கள்.

**எ.கா.**

ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்றவற்றில் வெளி வந்த படங்கள்.

## 2. அரசியல் கருத்துப்படம்

அரசியல் நடவடிக்கைகளைக் கிண்டல் செய்ய வெளிவிடும் கருத்துப் படங்கள் இவ்வகையைச் சார்ந்தது.

## 3. கட்டத்திற்குள் கருத்துப்படம்

வாசகர்களின் கருத்தைக் கவர, ஒரு கட்டம் கட்டி கருத்துப் படங்களை வெளியிடலாம்.

**எ.கா.**

தினத்தந்தி – ஆண்டிப் பண்டாரம்

## கேலிச் சித்திரங்கள்

இதில் கருத்துக்கு முதலிடம் கிடையாது.

இக் கேலிச் சித்திரங்களில் மனிதர்களின் தோற்றங்கள் அல்லது செய்கை மரபுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

**சான்று**

1. வின்ஸ்டன் சர்ச்சில் - வாயில் சுருட்டு
2. ஜவகர்லால் நேரு – சட்டைப் பொத்தானில் ரோஜாப் பூ
3. பாரதியார் - தலைப் பாகை, முறுக்கு மீசை
4. மூதறிஞர் இராஜாஜி – கறுப்புக் கண்ணாடி
5. பெரியார் - கைத்தடி

முதலியன அவர்களின் அடையாள முத்திரைகளாகக் கேலிச் சித்திரங்களில் வெளிப்படும்.

பெரும்பாலான இதழ்களில் அரசியல் பற்றிய கேலிச் சித்திரமே மிகுதியாக இடம்பெறும்.

பல சொற்களில் தலையங்கம் எழுதி உணர்த்த முடியாத கருத்துக்களைக் கூட கேலிச் சித்திரங்களும், கருத்துப் படங்களும் எளிதாக உணர்த்தி விடும்.

கருத்துப் படங்கள், கேலிச் சித்திரங்கள் - வேறுபாடு

கருத்துப்படங்களுக்கும், கேலிச் சித்திரத்திற்கும் மிகவும் நுட்பமான வேறுபாடே உள்ளது.

கருத்துப் படங்கள் ஒரு மையக் கருத்தை எடுத்துரைக்கும் வகையில் எளிமையான படங்களைக் கொண்டிருக்கும். குறைவான சொற்களிலோ, சொற்களில்லாமலோ கருத்தை விளக்குவார்கள். கருத்துப் படங்களைப் படத் தலையங்கங்கள் எனலாம்.

**எ.கா.**

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' பிளவு பட்டதை இரட்டை இலைச் சின்னம் இரண்டாக பிரிந்திருப்பது போலக் காட்டியதைச் சுட்டலாம்.

இங்கு எந்தக் கருத்தை உணர்த்த விரும்புகிறார்களோ அதனை மட்டும் பெரிதாக வரைந்து காட்டுவார்கள்.

கேலிச் சித்திரங்கள் பெரும்பாலும் சில மனிதர்களை அவர்களின் கொள்கைகளைக் கேலி செய்யும் வரைபடங்களாகும். கேலிச் சித்திரத்தைத் தீட்டுபவர்கள் வரைகின்ற தலைவரின் ஓரியல்பை சுட்டிக்காட்டி வரைந்து அவரைக் கேலி செய்யும் வகையில் படத்தை அமைப்பார்கள்.

**எ.கா.**

இந்திராகாந்தி – நீண்ட மூக்கு

எம்.ஜி.ஆர். – கறுப்புக் கண்ணாடி, குல்லா

சுருங்கக் கூறின் கருத்துப் படங்களில் கருத்துக்கே முதலிடம். கேலிச்சித்திரத்தில் சம்பந்தப்பட்ட நபரின் தோற்றத்திற்கே முக்கியத்துவம் தரப்படும். இத்தகு படங்களில் செய்திக்குரியவரின் குறிப்பிடத்தக்க அம்சம் அல்லது செய்தியின் குறியீடு பெரிது படுத்தப்படுகிறது.

## தனித் திறமை

கருத்துப் படங்களையும், கேலிச் சித்திரங்களையும் வரையும் ஓவியர்களிடம் சில தனித் திறமைகள் இருக்க வேண்டும். அவர்கள் நகைச்சுவை உணர்வுடன் ஒன்றை உணர்த்தும் ஆற்றல் பெற்றவராகவும், கற்பனைத் திறத்தோடு எதனையும் விரைந்தறியும் கூர்மையும் பெற்றவர்களாகவும், விழிப்புணர்ச்சியோடு நாட்டின் நடப்புகளையும், தலைவர்களின் நடவடிக்கைகளையும், உற்று நோக்கிக் கவனித்து வர வேண்டும். சமுதாய உணர்வும், கிண்டலும் கேலியும் சேர்ந்த கூட்டுக் கலவையாகக் கேலிப் படம் உருவாக வேண்டும்.

கேலிச் சித்திரக்காரர்கள் விரைவாகப் படங்களை வரைய வேண்டும். தனி மனித ஆதாயம் கருதியோ, யாரையும் அச்சுறுத்துவதற்காகவோ மந்றவர்களின் மனதைப் புண்படுத்தும் நோக்கத்திலோ படங்களை வரையக் கூடாது. படங்களை உண்மையின் அடிப்படையில் மக்களுக்கு சிலவற்றைக் கூறவும்ஈ சிந்திக்க வைக்கவுமே வரைய வேண்டும்.

# பெட்டிச் செய்திகள்

## நோக்கம்

பெட்டிச் செய்திகளின் நோக்கம், வாசகர்களுக்குச் செய்திகளை வெளியிடுவதை விட உணர்வுகளை எழுப்புவதே ஆகும்.

வாசகர்களின் கண்களையும், கருத்தையும் கவர வேண்டும் என்பதற்காக பெட்டிச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இதில் அச்சம், வியப்பு, மகிழ்ச்சி முதலிய உணர்வுகளை எழுப்பத் தக்க சிறிய செய்திகள் இடம் பெறும்.

## பெயர்க் காரணம்

நான்கு புறங்களிலும் கோடுகள் அமைக்கப்பட்டு அதன் இடையே செய்திகள் வெளியிடப்படுவதால் இதற்குப் பெட்டிச் செய்தி என்று பெயர்.

## இடம்

இவை இதழ்களின் முதல் பக்கத்தில் அல்லது கண்பார்வை எளிதில் படும் இடங்களில் அமைப்பதுண்டு.

## தேர்ந்தெடுத்தல்

பெட்டிச் செய்திகளை வாசகரின் சுவை உணர்வைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும்.

### நடை

பெட்டிச் செய்திகளை எழுதுமிடத்து மிகச் சுருக்கமாக, கவர்ச்சியான நடையில் எழுத வேண்டும்.

**எ.கா.**

1. ஆண் - பெண்ணாக மாறிய விந்தை

2. பூமியை நோக்கி வரும் அதிசயக் கல்

3. இரண்டு தலை நான்கு கால்களுடன் அதிசயக் குழந்தை

4. மாட்டின் கண்ணில் எம்.ஜி.ஆர்.

5. வேப்பிலை மரம் தரும் இனிப்புப் பால்.

## காலநிலைக் குறிப்புகள்

மனிதர்களின் அன்றாட வாழ்வில் காலநிலை ஒன்றிப் பிணைந்துள்ளது. இது அவர்தம் பணிக்குத் தேவையாக உள்ளது. எனவே இதழ்கள் காலநிலைக் குறிப்புகளை வெளிவிடுகின்றன.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் வாழ்க்கையின் சீர்குலைவுகளின் போது அவையே முதல் பக்க முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளாக அமையும்.

அனைத்து நாளிதழ்களிலும் நகரங்களின் குறைந்தளவு, அதிகளவு தட்ப வெப்பநிலை விவரங்கள் வெளியிடப்படுகின்றன. பருவக் காற்று, பருவ மழை, காற்றழுத்த தாழ்வு மண்டல நிலை, புயல் இவற்றின் போக்கு வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள் மூலம் விளக்கப்படுகின்றன. மேலும் செயற்கைக் கோள் மூலம் பெறப்படும் அனைத்து வானிலை நிலவரங்களும் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன.

## அங்காடி நிலவரம்

சாதாரண மக்களின் வாழ்வை விலைவாசி பாதிக்கின்றது. அத்தியாவசியப் பண்டங்களின் விலையுயர்வு, சரிவு ஆகியவை பற்றி அறிந்து கொள்ள நாளிதழ்கள் துணை நிற்கின்றன.

மேலும் இவை பங்குச் சந்தைகளின் நிலவரத்தை அறிந்து கொண்டு வாங்கவோ, விற்கவோ உதவும்.

## இலச்சினை

இலச்சினை என்பது இதழின் குறிக்கோளை உணர்த்தும் வகையில் அதனை உருவம் செய்யும் படம், ஒரு கவிதை வரி அல்லது ஒரு பொன்மொழி அல்லது ஒரு வாக்கியம் இவற்றுடன் தெளிவிக்கும் சின்னமாகத் திகழ்வது ஆகும்.

சுருங்கக் கூறின் இதழின் இலட்சியத்தைச் சுட்டுவதாகும்.

இது ஒரு இதழுக்கு ஒன்றாக அமையும். அந்த இதழின் தனித் தன்மையை உணர்த்துவதாக அமையும். சில இதழ்கள் உருவத்தை மட்டுமே பெற்று வரும்.

**எ.கா.**

1. குமுதம் - அல்லி மலர்

2. ஆனந்த விகடன் - விகடனார் உருவம், ‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’ – என்ற கண்ணி.

3. துக்ளக் - சுல்தான் படம்

4. தராசு – தராசு படம், நாமார்க்கும் குடியல்லோம் எனும் தொடர்.

இவற்றைத் தலையங்கம் பக்கத்திலும்ஈ வாசகர் கடிதம் பக்கத்திலும் இதழ்கள் வெளியிடுகின்றன.

# இடநிரப்பி (Filler)

பக்கப்புனைவின் போது காலி விழும் இடத்தை நிரப்ப சில செய்திகள் அல்லது துணுக்குகள் உதவுகின்றன. பெரும்பாலும் இவற்றிற்குத் தலைப்பு இராது. ஆனால் தேதி குறிக்கப்பட்டிருக்கும். முழுவதுட் ஒதுக்கி விட முடியாத செய்திகளை இட நிரப்பிகளாகப் பயன்படுத்துகின்றனர்.

செய்தித்தாள்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களில் இடையிடையே வரும் வெற்றிடங்களை நிரப்ப துணுக்குகள், துண்டுச்செய்திகள், பொன்மொழி போன்றவற்றை அவ்விடங்களில் வெளியிடும்.

சில இதழ்கள் நகரின் வெப்பநிலை, இதழ்களின் சந்தா விவரங்கள் போன்றவற்றையும் அவ்விதழ்களின் சிறப்பு மலர்கள், அதே நிறுவனம் வெளியிட்டு வரும் பிற இதழ்கள் பற்றிய விவரங்களைக் கொண்டிருக்கும்.

## கையெழுத்துப் பத்திரிகைகள்

அச்சடிக்காமல் கையால் எழுதித் தயாரிக்கும் பத்திரிகை கையெழுத்துப் பத்திரிகை எனப்படும்.

ஒரு சிறந்த, திறமை மிக்க படைப்பாளி தன் படைப்பை கையெழுத்தாக அமைத்து இதழ் வடிவில் வெளியிடுவான். இதில் படங்கள். கட்டுரைகள், கதைகள், துணுக்குகள், தொடர்கள் போன்றவை கையெழுத்தாலே அமையும்.

இப் பத்திரிகைகள் வெகு சிறப்பாகவும், வசீகரமாகவும் மிளிர்ந்தன. சில கதைகள், கட்டுரைகள் ஆகியனவற்றில் அதிக அக்கறை செலுத்தின. இவை எல்லாம் இளைஞர்களின் ஆற்றலை, உழைப்பை, பொறுமையை மற்றும் எழுத்துக் கலையிலும் பத்திரிகைத் துறையிலும் அவர்களுக்கிருக்கின்ற ஆர்வத்தையும் வெளிப்படுத்துகின்றன..

கையெழுத்துப் பத்திரிகைகள் சுய பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும் நல்ல தளமாக அமைய முடியும். இப் பத்திரிகைகள் எழுதி, எழுதி முன்னேற்றம் பெறுவதற்கும் உதவக் கூடிய பயிற்சிக் களமாக அமையும்.

வளர்கிற எழுத்தாளன் எழுதுகிற எழுத்துக்களைச் சேமித்து வைக்கிற மலர்க் கூடை போல கையெழுத்துப் பத்திரிகை திகழ வேண்டும். கையெழுத்துப் பத்திரிகை நடத்துகிறவர்களில் பெரும்பாலானோர் காலப் போக்கிவ் அதனை அச்சுப் பிரதியாகக் கொண்டு வர வேண்டும் என விரும்புகின்றனர். சிலரே அதில் வெற்றியும் அடைந்துள்ளனர்.

இவை பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களால் தொடங்கப்பட்டு சில தொடர்ந்து வெளிவருவதுண்டு.

### இயல்பு

கையெழுத்துப் பத்திரிகைகள்

1. குறிக்கோளுடன் நடத்தப்படும்.

2. சிறந்த இலட்சியங்களைப் பேசுவதாக அமையும்.

3. பெரும்பான்மையும தரமுடையதாக் காணப்படும்.

4. பெரும்பாலும் வட்டார இதழ்களாகவே அமையும்.

பல புகழ் பெற்ற இதழாளர்கள் முதலில் கையெழுத்துப் பத்திரிகையை நடத்தியவர்களே.

**சான்று**

1. கலைஞர்.கருணாநிதி – மாணவ நேசன்
2. அ.மா. சாமி – செந்தமிழ்ச் சோலை

## இராயல்டி

இராயல்டி (உரிமம்) எனப்படுவது ஒரு நிறுவனம் அல்லது தனி நபர் (உரிமைதாரர்) மற்றொரு நிறுவனத்திற்கு அல்லது தனிநபருக்கு தன்னுடைய அறிவு சார்ந்த அல்லது பொருள் சார்ந்த உரிமையைப் பயன்படுத்த அல்லது விற்பனை செய்ய அனுமதித்தற்காக வழங்கப்படும் ஒரு வகைக் கட்டணமாகும்.

ராயல்டி முறையைப் பரவலாக பயன்படுத்தும் துறைகளாக இசைத்துறை, ஓவியத் துறை, புத்தகத் துறை, ஊடகத் துறை, எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறை போன்றவை திகழ்கின்றன.

எழுத்தாளர்களின் படைப்பிற்கு அப்படைப்பினைப் பெற்றுக் கொள்வோர் அளிக்கும் ஊதியம் அல்லது பங்குத் தொகை இராயல்டி எனப்படும்.

வரி அல்லது பக்க அளவைக் கணக்கிட்டு ஊதியம் தரும் இதழ்களும் உள்ளன. எழுத்தாளர்களின் நட்சத்திர மதிப்பு உயர உயர இரயால்டியும் உயரும்.

### நூல் வர்த்தகத் துறையும் ராயல்டியும்

எழுத்தாளர்கள் இரண்டு வழிகளில் தங்களது படைப்புகளைப் பதிப்பித்து விற்பனைச் சந்தைக்குக் கொண்டு வர இயலும்.

### 1. சுயபதிப்பு

எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளைத் தாங்களே அச்சிட்டு விற்பனைச் சந்தைக்குக் கொண்டு வருவதைக் குறிப்பிடலாம். படைப்புக்கான மொத்த உரிமையும் அதன் இலாபம், நஷ்டம் அனைத்தும் எழுத்தாளர் ஒருவரையே சேரும்.

### 2. பதிப்பு நிறுவனம் அல்லது பதிப்பாளர் மூலம் பதிப்பித்தல்

பெரும்பாலும் எழுத்தாளர்கள் அச்சு தொடர்பான சிக்கல்களைத் தவிர்க்கவும், தங்களது படைப்புகளை எளிதில் சந்தைப் படுத்தவும் பதிப்பு நிறுவனங்களின் சேவைகளை

நாடுகின்றனர். இம் முறையில் எழுத்தாளர்கள் ராயல்டி தொடர்பான விஷயங்களில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### கணக்கிடப்படும் முறை

உலகளவில் ஒரு புத்தகத்திற்கு சராசரியாக 10% முதல் 12% வரை ராயல்டி வழங்கப்படுகிறது. பிரபலமான எழுத்தாளர்களுக்கு 15% முதல் 20 % வரை ராயல்டியும் புதிய எழுத்தாளர்களுக்கு 7.5% முதல் 9.5% வரை ராயல்டி வழங்கப்படுகிறது.

மொழிபெயர்ப்பு நூல்கள், நேரடியாக எழுதப்பட்ட நூல்கள், தடித்த அல்லது மெலிந்த அட்டை கொண்ட நூல்கள் என புத்தகத்தின் வகை சார்ந்து ராயல்டி தொகை நிர்ணயிக்கப்படும்.

### பிற முறைகள்

### நிலையான கட்டணம்

பதிப்பகத்தார் படைப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அச்சாகும் முன்போ அல்லது அச்சான பின்போ வழங்குவர். இது படைப்பிற்கான அச்சுச் செலவு, அஞ்சல் செலவு, விநியோகச் செலவு போன்றவற்றைக் கணக்கிட்டு அதன் பிறகு இந் நிலையான கட்டணத் தொகை நிர்ணயிக்கப்படும். படைப்புகளினால் பதிப்பகத்தாருக்கு இலாபம் வந்தாலோ அல்லது நஷ்டம் வந்தாலோ படைப்பாளியைச் சாராது.

### விற்பனையைப் பொறுத்துக் கட்டணம்

படைப்புகளின் விற்பனைக்கு ஏற்ப காலாண்டு, அரையாண்டுக்கு ஒரு முறை பதிப்பகத்தார் வழங்குவர்.

### முன் கட்டண முறை

நிலையான கட்டணம், ராயல்டி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதே இந்த முன் கட்டண முறையாகும். சில பதிப்பகத்தார் சில குறிப்பிட்ட புத்தகங்களை ராயல்டிக்குப் பதில் கொடுத்து விடுவதுமுண்டு. சில பதிப்பகத்தார் ராயல்டியும் கொடுத்து 10 முதல் 25 பிரதிகளைக் கொடுப்பதுமுண்டு.

## அக்கறையின்மை

எழுத்தாளர்கள் அதிக அளவில் ராயல்டி தொடர்பாக அக்கறை காட்டாதிருப்பதற்கு

1. பதிப்பாளர்கள் பணமுடிப்பு எனும் பெயரில் ஒரு தொகையை எழுத்தாளர்களுக்குக் கொடுத்து விடுவது.

2. ராயல்டி தொடர்பான விழிப்புணர்வு இல்லாமை, தவறான புரிதல்

3. பிற மொழி இலக்கியங்களைப் போல் தமிழ் நூல்கள் உலக அரங்கில் விற்பனை ஆகாது என்ற கணிப்பு.

## சுரண்டல்

புத்தகத் தயாரிப்பு, விளம்பரங்கள், சந்தைப்படுத்துதல் ஆகியனவற்றில் எல்வாம் ஆங்கிலப் புத்தகங்களுக்கு இணையாக தமிழ்ப் புத்தகங்கள் மேம்பட்டிருக்கின்றன. ஆனால் பதிப்பகத்தார் படைப்பாளிகளை ஏமாற்றி விடுகின்றனர்.

## சான்று

1. கருப்பக் கிளகம் ராமசாமிப் புலவர் போன்றோருக்குக் கருப்பட்டிக் காப்பி வாங்கிக் கொடுத்தே நூல்களை எழுதி வாங்கிவிடுவது தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய சமயப் பின்னணி கொண்ட பதிப்பகத்தாரின் வேலை என்பர்.

2. பன்மொழிப் புலவர் கா. அப்பாத் துரையாருக்கு ஒரு பொட்டலம் பிரியாணி வாங்கிக் கொடுத்தே மொழி பெயர்ப்பு வேலையை வாங்கி விடுவார்களாம்.

3. புதுமைப்பித்தன் போன்றோர் பல முறை அலைந்தும் பணம் கிடைக்காமையை நொந்து போய் தம் எழுத்திலே குறிப்பிட்டுள்ளார்.

4. பிரபஞ்சனை இடது சாரி இயக்கத்தோடு பிணைந்திருக்கும் நிறுவனமும், இலக்கியப் பத்திரிகை நடத்தும் பிரபல நிறுவனம் ஏமாற்றியதை அவரே கூறியுள்ளார்.

5. சாருலதா ‘எனக்குத் தரும் ராயல்டி செல்போன் டாப் அப் செய்வதற்கு’ மட்டுமே உதவுகிறது என்று கூறியுள்ளார்.

6. கண்ணதாசன் ஏமாற்றப்பட்டதால் அவர் மகன் காந்தி கண்ணதாசன், ‘கண்ணதாசன் பதிப்பகம்’ எனத் தொடங்கினார்.

இராயல்டி கொடுத்து விடுவதால் படைப்புகளின் பதிப்புரிமை இதழ் நடத்துவோருக்குக் கிடைத்து விடுகிறது. இவற்றை அவ்விதழ் தவிர ஏனைய இதழ்கள் அல்லது பதிப்பகத்தார் வெளியிட விரும்பினால் அவர்களின் முன் அனுமதி பெறவேண்டும். பெரிய இதழ்கள் பதிப்புரிமையை எழுத்தாளர்களுக்கே கொடுத்து விடுகின்றன. பல அறிஞர்கள் தங்கள் படைப்பிற்கு அவர்களின் வாழ்நாள் முழுவதற்கும், பின்னர் தங்கள் குடும்பத்தாரும் இராயல்டி பெற வழிவகை உண்டு. நூல்களாயின் அதன் விற்பனைக்கேற்ப இராயல்டி சதவிகித அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்படும்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

ஓர் இதழின் வாசகர்களுடைய விருப்பத்தையும், உள்ள உணர்வுகளையும் எடுத்துரைப்பவை வாசகர் கடிதங்கள் அல்லது ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களாகும்.

தலையங்கத்தின் எதிரொலியாக ஆசிரியருக்குக் கடிதங்கள் அமைகின்றன. ஓர் இதழின் வாசகர்கள் அதில் வெளிவந்த செய்திகள் முதலிய படைப்புகளைப் பற்றி எழுகின்ற எதிரொலியாக இவை அமையும். மேலும் இவை அரசியல், சமூகம் முதலிய சிக்கல்களைப் பற்றிய வாசகர்களின் கருத்துக்களைத் தெரிவிப்பனவாகவும் அமையும்.

பொதுச் சிக்கல்களை செய்தித் தாள்களும், பொது மக்களும் கலந்து வெளிப்படுத்தும் போது பொது மேடைகளாக ‘ஆசிரியருக்குக் கடிதங்கள்’ அமையும்.

### வெளிநாட்டு இதழ்களில்

அமெரிக்கா, இங்கிலாந்து இதழ்களில் ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதி சிறப்பான இடத்தைப் பெறுமி வகையில் அமைந்தது.

**எ.கா.**

இலண்டன் டைம்ஸ் - நாளிதழில் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியே விரும்பிப் படிக்கும் பகுதியாக அமைந்ததைக் குறிப்பிடலாம்.

ஆங்கில இதழ்களுக்குக் கடிதம் எழுதுவதையே பெருமையாகக் கொள்வோருமுண்டு.

### தமிழ் நாளிதழ்களில்

#### தினமணி

இவ்விதழுக்கு நாலு வரி என்ற தலைப்பில் கடிதங்கள் வரும். இவை நல்ல வரவேற்பைப் பெற்றது.

#### குமுதம்

வாசகர்களிடமிருந்து கடுமையான சொற்களை வாங்கிக் கட்டிக் கொள்வதும், அத்தகைய கடிதங்களைப் பெருமையுடனும் வெளியிடுவது வழக்கமான ஒன்றாகும்.

**துக்ளக்**

இப் பத்திரிகை வாசகர் கடிதங்களைச் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி, அதற்கான பதிலையும் விளக்கத்தையும் வெளியிடுகிறது.

**பயன்**

1. இதழைப் பற்றிய பொதுக் கண்ணோட்டத்தைப் பெற
2. இதழின் செய்தி மதிப்பை அறிய
3. இதழின் செல்வாக்கு, அமைப்பு ஆகியன பற்றி தற்சோதனை செய்து கொள்ள
4. இதழில் செய்ய வேண்டிய மாற்றங்கள் முதலியவற்றை மேற்கொள்ள
5. வாசகரின் வரவேற்பை அறிய
6. வாசகர்களின் உள்ளக் கிடக்கை, குறைகள் பற்றி அறிய

ஆசிரியருக்கு எழுதும் கடிதங்கள் பயன்படுகின்றன.

# துணுக்குகள்

## நகைச்சுவைத் துணுக்குகள்

மனிதன் எப்பொழுதும் கடுமையான செய்திகளைப் படிக்கவும் சிந்திக்கவும் விரும்புவதில்லை. அவன் சிலவற்றை நகைச் சுவையோடு பார்க்க விழைகிறான். இவை வார, மாத இதழ்களில் மட்டுமல்ல நாளிதழ்களிலும் பொழுது போக்குக்காவும், மனமகிழ்ச்சிக்காகவும் இடம் பெறுகின்றன.

**எ.கா.**

தினத் தந்தி நாளிதழ் முதன் முதலாக நாள்தொறும் நகைச் சுவைத் துணுக்குகளை வெளியிட்டதைச் சுட்டலாம்.

தமிழில் நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்து வெளிவந்த முதல் வார இதழ் ஆனந்த விகடனாகும்.

சிறந்த நகைச்சுவைத் துணுக்குகள் வெறும் சிரிப்பை மட்டுமல்ல நாட்டின் நடப்புகளையும் மக்களுக்கு எழுப்புகின்றன. நகைச்சுவைத் துணுக்குகளில் அவசியம் படம் இடம் பெற்றிருக்க வேண்டும்.

முன்பு இதழ்களில் பணியாற்றியவர் மட்டுமே நகைச்சுவைத் துணுக்குகள் எழுதுவதுண்டு. பின்னர் நகைச்சுவை எழுதுவதற்கென்றே ஒரு தனிப் பிரிவினரே தோன்றி புகழ் பெற்று வருகின்றனர்.

காந்தியடிகள் ‘எனக்கு நகைச்சுவை உணர்வு இல்லாவிட்டால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்திருப்பேன்’ என்று கூறியது சிந்திக்கத்தக்கதாகும்.

தமிழ் இதழ்கள் பெரும்பாலும் துணுக்குகளை ஆங்காங்கே தம் இதழ்களில் வெளியிடுகின்றன. இவை நகைச்சுவை, தகவல் துணுக்களாக அமையும்.

சில இதழ்கள் துணுக்குகளை மட்டுமே மிக அதிகமாக வெளியிடும்.

**சான்று**

1. கல்கண்டு

2. முத்தாரம்

படத்துணுக்குகள்

படத்துணுக்குகள், பேச்சு மொழி இல்லாதன. நகைச்சுவைக்கு அணிசேர்ப்பது படங்களே ஆகும். தமிழில் நகைச் சுவைக்கு முதலிடம் கொடுத்து வெளிவந்த முதல் இதழ் ஆனந்த விகடன் ஆகும்.

படங்கள் இல்லாத நகைச்சுவைத் துணுக்குகள் ஒப்பனை செய்து கொள்ளாத பெண்கள் போன்றவை என்பர்.

சிலபடங்களைப் பார்த்தவுடனேயே நமக்கு சிரிப்பு தோன்றிவிடும். வார, மாத இதழ்களில் சிறுகதைகளுக்கும், தொடர் கதைகளுக்கும் அணி சேர்க்கும் வகையில் ஓவியங்களை வெளியிடுகின்றன. இவற்றில் படங்கள் உரைநடைக்குத் துணை போகின்றன. படங்களே கருத்துக்களையும், செய்திகளையும், கதைகளையும் கூறும் வகையில் வெளியிடுகின்றனர்.

**எ.கா.**

1. தினத்தந்தி – ஆண்டிப் பண்டாரம்

2. ராணி – குரங்கு குசேலா

சிறுவர் இதழ்களில் படங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் பெரிதும் படங்களை விரும்புகின்றனர்

**வகைகள்**

இதழ்களில் வெளிவரும் படங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிப்பர்.

அவை

### 1. பேச்சு மொழியற்றவை

படங்களோடு எந்த வாசகமும் வெளியிடாமல் கதையை, கருத்தை வெளியிடலாம். இதில் கதாபாத்திரங்கள் பேசும் முறையிலில்லாமல் படங்களே தன்னிலை விளக்கங்களாக அமையும்.

### 2. படக்கதை

படங்களின் மூலமே ஒரு கதையைக் கூறலாம். இவை ஓரே இதழிலிலோ, தொடர் கதைகளாகவோ இடம் பெறும்.

### 3. கருத்துப்படங்கள்

ஏதாவது ஒரு கருத்தை விளக்கும் வகையில் படம் அமையலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட படப் பாத்திரம் ஒவ்வொரு இதழிலும் கருத்துக்களைக் கூறுவதாக – தொடர் கருத்துப் படமாக அமையலாம்.

### வாயில்கள்

1. பொதுக் கூட்டங்கள்
2. விழாக்கள்
3. பொது இடங்கள்
4. வாழ்க்கை வரலாற்று நூல்கள்

ஆகியன துணுக்குகளை உருவாக்கும் வாயில்களாக அமைகின்றன.

## செய்தித் துணுக்குகள்

கண்களையும், காதுகளையும் திறந்து வைத்து மிக நுட்பமாகக் கவனிப்போருக்கு செய்தித் துணுக்குகள் கிடைக்கும்.

**சான்று**

1. கிருபானந்த வாரியார்
2. புலவர். கீரன்
3. சுகி.சிவம்
4. தென்கச்சி கோ.சுவாமிநாதன் - போன்ற சொற்பொழிவாளர்களின் கூட்டங்கள்

போன்றவற்றில் கிடைக்கும் குட்டிக்கதைகள், செய்திகள், கருத்துகள் போன்றவற்றை

சொல்லக் கேட்டவை, கேட்டு ரசித்தவை போன்ற தலைப்புகளில் இதழ்களுக்கு எழுதி அனுப்பினால் தகுந்த சன்மானமும், புகழும் கிடைக்கும். எதிர்காலத்தில் எழுத்தாளராக வாய்ப்புண்டு.

# விளம்பரம்

விளம்பரம் என்பது விளம்பரதாரர் தமது உற்பத்திப் பொருள், பணி ஆகியனவற்றின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு அல்லது பரப்பும் பொருட்டுப் பணம் செலுத்தித் தாம் விரும்பும் விளம்பரச் சாதனங்களின் வழி பொது மக்களுக்கு எடுத்துரைத்து வாங்கத் தூண்டுவதாகும். சந்தையியலின் குரல் விளம்பரம் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

மக்களின் தகவல் சாதனங்களில் தலைமையானது விளம்பரமே ஆகும்.

## விளம்பர நோக்கம்

விளம்பரத்தின் தலையாய நோக்கமே அறிவித்தலாகும். இது தெரியப்படுத்துதல் என்ற நிலையைப் பெறும் போது விளம்பரமாகிறது.

## விளம்பரப் பணி

ஒருவர் தான் நினைத்ததை பலரும் புரிந்து கொள்ள வைப்பதும், பின் அதனை வாங்கத் தூண்டுவதும் விளமபரத்தின் பணியாகும்.

## விளம்பர குறிக்கோள்

அவர்களுக்குச் சொல்லாவிடில் அவற்ளை நீ விற்க முடியாது என்பது விளம்பரத்தின் குறிக்கோளாக அமைகிறது.

## விளம்பர வாயில்கள்

1. செய்தித் தாள்கள்
2. இதழ்கள்
3. துண்டுப் பிரசுரங்கள்
4. சுவரொட்டிகள்
5. கடிதங்கள்
6. வானொலி

7. தொலைக் காட்சிகள்

8. திரைப்படக் காட்சிகள்

9. ஒலிபெருக்கி

போன்றவற்றின் வாயில்களாக விளம்பரத்தினைச் செய்வர்.

## விளம்பர வடிவமைப்புக் கூறுகள்

ஒரு நல்ல விளம்பரத்திற்குப் பின் வரும் வடிவமைப்புக் கூறுகள் தேவை.

அவை

1. முக்கியத் தலைப்பு

2. துணைத் தலைப்பு

3. முக்கிய வரைபடம்

4. மாதிரி வரைபடம்

5. விவர வரிகள்

6. வணிக உரிமைக் குறியீடு

7. விளம்பரத் தொடர்

## விளம்பர வகைகள்

விளம்பரத்தன் நோக்கத்தையும், பயனையும் கருதி பல்வகையாகப் பகுக்கலாம் எனினும் பொதுவாக அரசு விளம்பரம், தனியார் விளம்பரம், வணிக விளம்பரம் என மூவகையாகப் பகுப்பர்.

## அரசு விளம்பரம்

மத்திய, மாநில அரசு சார்ந்த துறைகள் வெளியிடும் அனைத்து விளம்பரங்களும் அரசு விளம்பரங்கள் ஆகும்.

இவ்விளம்பரங்கள் அரசின் திட்டங்களை, கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக வெளியிடப்படும்.

இவ்வகையில் சில வேளைகளில் அரசு தன்னிலை விளக்கமாக சில அறிவிப்புகளை வெளியிடுவதும் அடங்கும்.

இவ்வகை விளம்பரங்கள் சமூகப் பயன், சமுதாய நலன் அடிப்படையில் வெளியிடப்படும்.

## தனியார் விளம்பரம்

தனி நபர்கள், தங்களைப் பற்றியும் தங்கள் சார்பானவை பற்றியும் வெளியிடப்படும் விளம்பரம் தனியார் விளம்பரம் எனப்படும்.

**எ.கா**.

1. பிறந்த நாள்
2. திருமண நாள் - வாழ்த்துகள்
3. பெயர் மாற்றம்
4. பிறந்த நாள் மாற்றம்
5. வழக்கறிஞர் தங்கள் கட்சிக்காரர் சார்பாக வெளியிடும் அறிவிப்புகள்.

## வணிக விளம்பரங்கள்

வணிக நோக்கில் வெளியிடப்படும் அனைத்து விளம்பரங்களுமே வணிக விளம்பரங்களாகும்.

**வகைகள்**

1. பொருள்சார் விளம்பரம்
2. நிறுவனம் சார் விளம்பரம்

**பொருள்சார் விளம்பரம்**

விற்க உள்ள பொருள் பற்றியோ, வாணிகப் பெயர் பற்றியோ, வாணிகக் குறியீடு பற்றியோ வருவன பொருள்சார் விளம்பரங்களாகும்.

நிறுவனம் சார் விளம்பரம்

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறுவது நிறுவனம் சார் விளம்பரமாகும்.

**பிற வகைகள்**

பொருளியல், மருத்துவம், சமுதாயம், கல்வி, அரசியல் ஆகிய துறைகளில் அதிகமாகத் தேவைப்படும் விளம்பரங்களை சமூக விளம்பரம் எனலாம்.

**எ.கா.**

1. போதைத் தடுப்பு விளம்பரங்கள்
2. இலவச மருத்துவ சிகிச்சை
3. தொண்டு நிறுவன விளம்பரங்கள்
4. புகையிலைத் தடுப்பு விளம்பரங்கள்

**விளம்பரக் கட்டணம்**

விளம்பரங்களின் அளவு எத்தனை சதுர செண்டி மீட்டர் என்று கணக்கிட்டு இவற்றிற்கான கட்டணங்களைத் தாள்கள் பெறுகின்றன. இது பக்கங்களுக்கு ஏற்ப மாறுபடும். முதல், கடைசிப்பக்கம் விளம்பரங்கள் அதிகக் கட்டணத்துடன் வெளியிடப்படும். ஒற்றை எண்ணுள்ள பக்கங்களில் இடம்பெறும் விளம்ரங்களின் கட்டணம் படிபடியாகக் குறைந்து காணப்படும்.

## விளம்பரப் பகுதி

விளம்பரப் பகுதி, பொதுவாக இருவகையாகப் பகுக்கப்படும்.

அவை

உள்ளூர் விளம்பர, பொர்து விளம்பரப் பிரிவு என இருவகையாகும்.

### 1. உள்ளூர் விளம்பரப் பிரிவு

இப் பிரிவு உள்ளூர் சில்லறை விளம்பரங்களைக் கவனிக்கும். விளம்பர வடிவமைத்தல், விளம்பரங்களைச் சேகரித்தல் ஆகிய பணிகளை இப்பகுதியினா் செய்வா். நகரப் பதிப்பில்

உள்ளூர் நிறுவனங்கள், விழா மலர் விளம்பரங்கள், வரி விளம்பரங்கள் போன்றவை இதிலடங்கும். சில இடங்களில் விற்பனை முகவரே விளம்பரம் சேகரித்தலும் உண்டு.

### 2. பொது விளம்பரப் பிரிவு

வெளியிலிருந்து விளம்பரங்களை இப் பகுதியினா் கவனிப்பா். இப்பகுதியினா் தேசிய விளம்பரங்களும், வெளிநாட்டு விளம்பரங்களையும் பெற்று வெளியிடுவா். நிறுவன விளம்பரங்கள் அரசு விளம்பரங்கள் போன்றவை இவ்வகையிலடங்கும். சமுதாய நலன் கருதி சமுதாயத்திற்குத் தேவைப்படும் அறிவுரைகள், வழி முறைகளையும் வெளியிடுவதுண்டு.

**எ.கா.**

பன்னாட்டு மருந்து நிறுவனங்கள்

1. எய்ட்ஸ்
2. காச நோய்
3. புற்று நோய்
4. வெறிநாய்க் கடி

போன்றவற்றிற்கு எதிரான மருந்து முறைகள், தடுப்பு முறைகளைப் பெரியளவில் வெளியிடுகின்றன..

சமீப காலங்களில் அரசின் சாதனை விளம்பரங்கள் இருபக்களவில் கூட வெளிவருகின்றன.

## விளம்பர ஒழுக்க நெறிகள்

1. விளம்பரங்கள் இந்திய நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டு அமைய வேண்டும்.

2. சமுதாய ஒழுக்கம், கண்ணியம், மதச் சம்பிரதாயங்கள் ஆகியனவற்றைச் சிதைக்காதவாறு

3. இந்திய அரசியலமைப்பு விதிகளுக்கும், நோக்கங்களுக்குக் கட்டுப்பட்டும்

4. இந்திய அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் நெறிகள், திருத்தங்கள் ஆகியனவற்றிற்கு உட்பட்டும்

5. தொழில் அல்லது தொழிலாளர்கள் உறவுகளைப் பாதிக்காத வகையிலும்

6. தேசியச் சின்னங்கள், தலைவர்கள், சமுதாயப் பெரியோர்கள் பற்றிய உருவகம் சிதையாவாறு

7. பிற நாட்டோடு கொண்ட நட்பு பாதிக்காதவாறு

அமைய வேண்டும்.

8. குற்றம், ஒழுங்கு மீறல், வன்முறை, சட்ட மீறல் போன்றனவற்றில் மக்கள் ஈடுபடத் தூண்டும் வகையில்

9. குற்றச். செயல்களை நியாயப்படுத்தும் வகையில்

10. குற்றத்தின் பின்னணிகளை விவரிப்பதாகவோ

11. உடலுக்கு ஊறுவிளைவிக்கும் பொருள்கள் பற்றிய விவரங்களை வெளியிடுதல்

12. ஒரு பொருள் மக்களின் நம்பிக்கைக்கு மாறாகச் செயல்படும் என வெளியிடுதல்

13. பிற பொருள், தயாரிப்பு நிறுவனத்தோடு ஒப்பிட்டுக் காட்டல்

14. வரையறைக்குட்பட்ட ஒரு புள்ளி விவரத்தை உலகம் தழுவியதாகக் காட்டுவது

போன்றவை கூடாது.

15. அடகு வியாபாரம்

16. பதிவு பெறாத சீட்டு நிறுவனம்

17. போலி திருமண ஏஜன்சி

18. பதிவு செய்யப்படாத வேலை வாய்ப்புப் பணிகள்

19. குறி கூறுதல்

20. சோதிடம், மாந்திரீகம், செப்படி வித்தைகள்

போன்றவற்றிற்கு விளம்பரம் செய்தல் கூடாது.

ஆனால் இன்று பல விதி மீறல்கள் நடைமுறையில் உள்ளதைக் காணமுடிகிறது.

## விளம்பர நிறைகள்

1 பொருள் பற்றி அறிந்து கொள்ள

பொருளின்

2. தன்மை,

3. பண்பு,

4. அமைப்பு,

5. விலை - பற்றி அறிய

6. பொருளை வாங்கத் தூண்ட

7. பொருள் கிடைக்குமிடத்தை அறிய

8. பொருள் பற்றி முழுமையா அறிய

9 தொழில் நுட்பத் துறை வளர்ச்சியை அறிய

10. விளம்பர நிறுவனங்கள் சம்பாதிக்க

## குறைகள்

1. பண்பாட்டுக் கலப்பு

2. பண்பாட்டுச் சீரழிவு

3. போலிகள் பெருக

4. பொருளாதார ஏற்றத் தாழ்வு தோன்ற

5. தேவையில்லாத பொருளையும் வாங்கும் நிலை

6. உண்மைத் தன்மை காப்பாற்றப் படாத நிலை ஏற

7. முறைகேடுகள் தோன்ற

8. சிறுவர்களை அதிகமாக ஈர்க்க

9. திணித்தல் நிலை ஏற்பட

10. குற்றங்களும், பிழைகளும் பெருக

வழிவகை செய்வதால் பல தீமைகள் சமுதாயத்தில் ஏற்படுகின்றன.

விளம்பரங்கள் வெளியிடுவதில் பல இதழ்கள் கொள்கை எதுவும் கொண்டிருப்பதில்லை. தரமற்ற பொருள்கள், மூடநம்பிக்கையை ஏற்படுத்துபவை, ஏமாற்றும் நிறுவனங்கள், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் போன்றவற்றைக் கொண்டுள்ள விளம்பரங்களைப் பணத்திற்காக வெளியிடுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

1. கருத்துப் படங்களின் வகைகள் குறித்து எழுதுக.

2. கேலிச் சித்திரங்கள் என்றால் என்ன? விளக்கம் தருக.

3. குறிப்பு வவரைக : பெட்டிச் செய்திகள்

4. இலச்சினை என்றால் என்ன? எடுத்துக் காட்டு தருக.

5. குறிப்பு வரைக : இடநிரப்பி

6. கையெழுத்துப் பத்திரிகை குறித்து எழுதுக.

7. இராயல்டி குறித்து விரிவாக எழுதுக.

8. ஆசிரியர் கடிதம் குறித்து விளக்குக.

9. துணுக்குகள் குறித்து எழுதுக.

10. விளம்பரத்தின் நோக்கம், வகைகள் குறித்து விவரிக்க.

11. விளம்பரத்தின் ஒழுக்க நெறிகள் குறித்து விளக்குக.

12. விளம்பரத்தின் நிறை, குறைகளை மதிப்பிடுக.

அலகு – 5.

## புலனாய்வு இதழ்கள்

தமிழ் இதழ்களின் வளர்ச்சி இமயத்தைத் தொடும் அளவிற்குச் சென்ற நிலையில் உச்சத்தைத் தொட்ட இதழ்களுள் புலனாய்வு இதழ்களும் ஒன்றாகும். இவ்விதழ்கள் தொடக்கக் காலத்தில் மாதத்திற்கு இருமுறையாக வெளிவந்தது. இவ்விதழுக்கு இருந்த வரவேற்பின் காரணமாக வாரத்திற்கு இருமுறையாக வெளிவந்தது. புலனாய்வு இதழ்களைப் பல பெரிய நிறுவனங்களும் தொடங்கியது.

**நோக்கம்**

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட செய்திகளையும், உண்மைகளையும் இனம் கண்டு தோண்டித் துருவி வெளிக் கொணர்வதை நோக்கமாகக் கொண்டது புலனாய்வு இதழ்கள்.

**இயல்பு**

புலனாய்வு இதழ்களின் இயல்புகளாக

1. மிகவும் பரபரப்புச் செய்தி
2. தனி மனிதச் செய்தி
3. குழுக்கள் சார்ந்த செய்தி
4. அரசியல் செய்திகள்
5. குற்றப் பின்னணியுடைய செய்திகள்
6. அனைத்துத் துறை சார்ந்த செய்திகள்

ஆகியனவை அமைகின்றன.

**குறைகள்**

1. அதிகார வருக்கத்திலுள்ள குறைகளையும், குற்றங்களையும் வெளிச்சமிட்டுக் காட்டுவதால் அவர்கள் அல்லது அவைகளிடமிருந்து ஏற்படும் அச்சுறுத்தல்.

2. அரசின் வெறுப்பினைச் சம்பாதிக்கும் நிலை ஏற்படுவது.

3. புலனாய்வு இதழ்களின் நிருபர்களுக்கு ஏற்படும் இடையூறுகள், இன்னல்கள்.

4. விருப்பு, வெறுப்பின்றி செயல்படும் தன்மை

5. குற்றச் செய்திகளை வெளியிடாமலிருக்க கையூட்டுப் பெறுவது

6. சில புலனாய்வு இதழ்கள் மஞ்சள் பத்திரிகை போன்று செயல்படுவது.

7. சின்ன பிரச்சினையைப் பெரிதாக்கி, பூதாகரமாக்குவது

8. செய்திகளை மிகைப்படுத்திக் காட்டுவது

9. விற்பனையை மையமாக வைத்தே செயல்படுவது

10. புலனாய்வு என்ற பெயரில் ஆதாரமின்றி கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் செயல்படுவது.

ஆகியன புலனாய்வு இதழ்களின் குறைகளாகும்.

**நிறைகள்**

1. ஒர் அரசை நடுநிலையாகச் செயல்பட நினைக்க வைப்பது

2. தங்கள் தவறுகளை பொதுமக்கள் அறிந்து கொண்டு விடுவாரோ என்ற அச்ச நிலை ஏற்பட்டு மக்களோ, அதிகார வருக்கமோ, அரசோ ஒழுங்காகச் செயல்படுவது

3. தனி மனிதப் பிரச்சினையைச் சமுதாயப் பிரச்சனையாக்குவது

4. ஆட்சி அதிகாரம், செல்வாக்கு, புகழ், செல்வந்தன் என்ற நிலையினால் ஒருவர் தவறிழைக்கமாலிருக்க

5. அனைவரையும் நேர்மையாகச் செயல்பட வைக்க

புலனாய்வு இதழ்கள் பயன்படுகின்றன.

**புகழ் பெற்ற புலனாய்வு இதழ்கள்**

1. ஜீனியர் விகடன்
2. நக்கீரன்
3. தராசு
4. நெற்றிக்கண்
5. போலீஸ்

இவற்றில் இன்று பல புலனாய்வு இதழ்கள் நின்றுவிட்டன.

# நச்சு இதழ்கள்

சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் இதழ்களை நச்சு இதழ்கள் எனலாம். இவற்றின் உள்ளடக்கம் முழுமையும் நச்சுத் தன்மை கொண்டதாக அமைந்திருக்கும்.

**நோக்கம்**

1. விற்பனை

2. பரபரப்பு

ஆகியவையே நச்சு இதழ்களின் நோக்கமாகும்.

**இயல்பு**

1. தீவிரவாதம்

2. பாலுணர்வு

3. சாதி உணர்வு

4. மத உணர்வு ஆகியனவற்றைத் தூண்டும் செய்திகளை வெளியிடுவது நச்சு இதழ்களின் இயல்பாக அமைகிறது.

5. அரசுக்கு எதிர்ப்பான செய்திகள்

6. நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும் செய்திகள்

7. சமுதாய நலனுக்கு எதிரான செய்திகள்

8. கொச்சை உணர்வுகளைக் கொண்ட படங்கள்

9. கொச்சை உணர்வைத் தூண்டும் கட்டுரைகள்

10. மருத்துவப் பகுதி என்பதில் வக்கிரமான செய்திகளை

வெளியிடல் நச்சிதழ்களின் இயல்புகளாக அமைகின்றன.

## இன்றைய கால இதழ்களும் சமூகமும்

உலகின் பல பக்கங்களிலிருந்தும் புத்தறிவு, புதிய பார்வை போன்றவற்றைக் கொடுத்து மக்கள் புதிய பாதையில் அடியெடுத்து வைக்கப் புதிய புதிய செய்திகளைக் கொண்டு வந்து தருவது இதழ்களாகும். இதழ்கள் செய்திகளைத் தருவதோடு, மக்களுக்கு அறிவைப் புகட்டி, அரசியல் விழிப்புணர்வை உண்டு பண்ணி சமுதாயத்தைச் சீர்திருத்தி மக்களின் உரிமையைப் பாதுகாத்து நாகரித்திற்கு நல்ல முன்னுதாரணமாகவும் திகழ்கின்றன. மக்களின் தேவைகளும் விருப்பங்களும் பெருகப் பெருகச் சமூக அமைப்பும் அதற்கேற்ப மாறிக் கொண்டே வருகிறது.

### இதழாசிரியர்கள்

இதழ்களின் ஆசிரியர்களாக தொடக்க காலத்தில் சமய, சமூக, இலக்கியத் தோய்வு மிக்கவர்களே இருந்துள்ளனர். இவர்கள் விடுதலை இயக்கக் காலத்தில் விடுதலை வேட்கையையும், விழிப்புணர்வையும், தாகத்தையும் ஏற்படுத்தினர். மேலும் பல துறை அறிவு மிக்கவர்கள், அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள், பன்மொழித் திறனுடையோர், உலகியலறிவு மிக்கோர் என்ற பரிணாம வளர்ச்சியில் ஆசிரியர்கள் வந்தனர்.

### இதழ்களின் வளர்ச்சிப் போக்கு

தமிழ் இதழ்கள் சாதி, சமய உணர்வில் ஆழ்ந்து சிறு வட்டத்தில் கிடந்தோரை உலகளாவிய வட்டத்திற்குள் அடியெடுத்து வைக்க உதவின. இதழ்களில் மெத்தப் படித்தவர்களே எழுத முடியும் என்ற நிலையை மாற்றி, அறிவு வேட்கை கொண்டு ஆர்வ மிகுதியுடையோர், எவரும் எழுதலாம் என்ற நிலையை உருவாக்கியது. இதழ்கள் தம் நடையில் பல வகுப்பினரின் தனி நடையைக் குறைத்து, பல வட்டாரச் சொற்கள் விரவுவதைத் தடுத்து, தமிழ் மக்கள் அனைவரும், தமிழ் தெரிந்த அனைவரும் உணர்ந்து கொள்ளும் பொது நடையை ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.

நாட்டின் விடுதலைக்குப் பின் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கே வார, நாளிதழ்கள் தமிழில் வெளிவந்தன. அவற்றில் ‘தினமணி, ‘சுதேசமித்திரன் ‘தினத் தந்தி’ ஆகிய நாளிதழ்களும், ‘ஆனந்த விகடன்’ ‘கல்கி’, போன்ற வார இதழ்களும், மாத இதழ்களில்

‘கலைமகள்’ ‘அமுத சுரபி’ ஆகிய இதழ்களுமே நினைவிற்கு வருகின்றன. ஆனால் இன்று வெளிவரும் இதழ்களை மிக எளிதாகப் பட்டியலிட முடியாது. அவற்றையெல்லாம் தொகுத்தால் ஒரு பெரிய நூலாக உருவாகும்.

## இன்றைய இதழ்களின் வகைகள்

கால அளவு வகைப்பாடு

1. நாளிதழ்கள்
2. வார இதழ்கள்
3. மாதமிருமுறை இதழ்கள்
4. மாத இதழ்கள்
5. காலாண்டு இதழ்கள்
6. அரையாண்டு இதழ்கள்
7. ஆண்டிதழ்கள்

என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

## இயல்பு – வகைப்பாடு

1. செய்தித் தாள்கள்

இதனை காலை, மாலை இதழ்கள் என வகைப்படுத்தலாம்.

2. பொழுது போக்கு வார இதழ்கள்
3. இலக்கிய இதழ்கள்
4. துணுக்கு இதழ்கள்

என்னும் வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.

## எண்ணிக்கை வகைப்பாடு

ஒவ்வொரு இதழும், வெளிவரும் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிப்பர்.

அவை

**சிறிய இதழ்கள்**

சர்வோதயம், கிராம ராஜ்யம்

**நடுத்தர இதழ்கள்**

கலைமகள், அமுத சுரபி

**பெரிய இதழ்கள்**

குமுதம், ஆனந்த விகடன், கல்கி, குங்குமம், இதயம்

இவற்றுள் குமுதம் ஏறத்தாழ 6 இலட்சம் பிரதிகளை வெளிக் கொணர்ந்து முதலிடத்தைப் பெறுகிறது.

**இன்றைய இதழ்களின் நோக்கம்**

பழைய இதழ்கள் எல்லாம் ஒரு குறிக்கோளை நோக்கி தனது பயணத்தைத் தொடங்கியது. குறிப்பாக விடுதலை உணர்வு, அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு, ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலியவற்றை அனைத்துத் தரப்பினருக்கும் கொண்டு சேர்த்தது. இவை மக்களிடையே எழுச்சியையும், தேசப்பற்றையும் உருவாக்கின.

ஆனால் இன்றைய இதழ்கள் பொதுவாக வாணிப நோக்கத்தையே தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இவை விற்பனையைக் கூட்டி, ஆதாயத்தைப் பெருக்க எல்லா வழிகளிலும் முயல்கின்றன.

இன்றைய இதழ்களின் விற்பனை அதில் வெளிவரும் வண்ணப் படங்கள், திரைப்பட விமரிசனங்கள், திரைப்படத் துணுக்குகள், தொடர் கதைகள் ஆகியனவற்றைச் சார்ந்தே அமைந்துள்ளது. இதழாசிரியர் யாரென்று கவலைப்படுவதில்லை.

**இதழ்கள் சுதந்திரம்**

விடுதலைக்கு முன்னால் இதழ்களை நடத்தியவர்கள், அந்நிய அரசின் கெடுபிடிக்குள் சிக்கி சின்னா பின்னாமாகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் இன்று இதழ்களுக்குச் சுதந்திரமும் ஓரளவு அரசின் ஆதரவும் உள்ளது. இதழ்களுக்குச் சட்டத்தின் பாதுகாப்பும் கிடைக்கிறது. அரசு விளம்பரங்களைக் கொடுத்து இதழ்களின் வருவாயைப் பெருக்க உதவுகிறது

## தற்கால இதழ்களின் எழுச்சிப் போக்குகள்

தற்காலத் தமிழ் இதழ்களில் பல எழுச்சிப் போக்குகள் தென்படுகின்றன.

அவை

1. இதழ்களின் அமைப்பு முறை
2. அச்சிடுதல்
3. நடை
4. இலக்கியப் போக்குகள்
5. துறை சார்ந்த தனி இதழ்கள்

போன்றவை எனலாம்.

ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் தமிழ் இதழ்கள் வெளி வருகின்றன. தமிழ் இதழ்களின் வளர்ச்சிப் பரப்பை அதனை வகைப் படுத்தியதிலிருந்தே அறியலாம்.

## புலனாய்வு இதழ்கள்

மேலை நாடு போலவே இங்கும் புலனாய்வு இதழ்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. மேலும் செல்வாக்கும் பெற்றுள்ளது. இவ்விதழ்கள் நடு நிலையோடு செயல்பட்டால் பல உண்மை நிலைகளை மக்களுக்கு எடுத்துரைக்க இயலும்.

இவ்விதழ்கள் படிக்கின்ற பழக்கத்தை மக்களிடையே உண்டு பண்ணியது. மனிதன் பொழுது போக்கிற்காக வாசிக்கத் தொடங்கியவன் இன்று பல படிநிலைகளைக் கடந்து இலக்கியச்

சுவையையும், சமுதாய விழிப்புணர்ச்சியையும் ஊட்டும் இதழ்களைத் தேடிச் சென்று வாசிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளான்.

தமிழ் இதழ்களில் கேலிச் சித்திரங்கள், துணுக்குகள், புகைப்படங்கள், கேள்வி – பதில்கள் போன்றவற்றை வெளியிட்டு இன்றுள்ள நடை முறைக் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டும் போக்கு வளர்ந்து வருகிறது.

தற்கால அவசர கால நெருக்கடிச் சூழலுக்கேற்ப மக்களுக்குப் பயனள்ள கருத்துக்களைத் திரட்டித் தருவதோடு அவை இனிப்பு பூசிய மாத்திரைகள் போலவும் செயல்படுகின்றன.

## வீழ்ச்சிப் போக்குகள்

பயிர்களிடையே வளரும் களை போல சமுதாயத்தைச் சீர்குலைக்கிற சில நச்சுப் போக்குகளும் ஊடு நூலாக வளர்ந்து வருவதையும் மறுக்க முடியாது.. அவற்றை இனம் கண்டு, உணர்ந்து அகற்ற வேண்டும். இல்லையெனில் நன்மைகளை விடத் தீமைகளே அதிகம் ஏற்படும்.

வாணிப நோக்கோடு செயல்படும் இதழ்கள் அறத்தில் கவனம் கொள்ளாது கவர்ச்சி, படங்கள், கதைகள், துணுக்குகள், கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டு இளந் தலைமுறையினர் முதல் வயோதிகர் வரை கவர்ந்து இழுத்து வருகிறது.

சிலர் பாலுணர்வை மலிவுப் பொருளாக்கி இதழ்களின் அட்டைப் படம் முதல் தொடங்கி பல இடங்களில் வெளியிட்டு விற்பனையைப் பெருக்கி ஆதாயம் அடைந்து வருகின்றனர்

திரைப்படத் துறையினரும், நடிகர்களும், நடிகைகளும் இதழ்களுக்குத் தீனி போட்டுத் தங்களின் ஆதாயத்தையும் பெருக்கி வருகின்றனர். பாலுணர்ச்சியை மிகைப்படுத்தி எழுதும் கதைகளும், அதற்கு வரையப்படும் படங்களும் மக்களினத்தைச் சீரழிக்கின்றன. இவ்விதழ்களை ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் வாங்கி படிக்க முடியாத சூழல் உள்ளது.

பல இதழ்களில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், மக்களின் மன வளத்தை நல்ல முறையில் வளர்க்க உதவவில்லை. சமுதாயப் பண்பாடு, நாட்டு ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு ஆகியனவற்றை வளர்ப்பனவாக இல்லை. குப்பைகள் என்று ஒதுக்கக்

கூடியனவற்றை வெளியிட்டு வாசகர்களின் உள்ளங்களில் இருள் மண்டச் செய்யவே துணை நிற்கின்றன.

## எதிர்காலத் தேவை

1. பாலுணர்வு
2. வன்முறை
3. மூன்றாந்தர அரசியல்
4. ஆபாசக் கலை

போன்றவற்றைப் பேணி வளர்க்கும் இழி செயல்களை விட்டு விட்டு இதழ்கள் தங்களுக்குரிய சமுதாயக் கடமைகளையும், பொறுப்புணர்வையும் உணர்ந்து செயல்பட வேண்டும். அப்போது தான் புதியதோர் சமுதாயத்தைப் படைக்க இயலும். மேலும் உண்மையைத் திரித்துக் கூறுகின்ற இருட்டடிப்புச் செய்கின்ற மக்களைத் திசை திருப்புகின்ற இதழ்கள் இருந்தால் பாதகமான விளைவுகளே ஏற்படும்.

இதழ்கள் உண்மையிலேயே சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமானால் அவை சில அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இத்தகு கொள்கைகளை வழிகாட்டும் விதிமுறைகளாக நல்ல இதழ்கள் பின்பற்றுகின்றன.

இதழ்கள் கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றினால் சமூகத்திற்குப் பெரிதும் துணை செய்யும்.

## 1. பொறுப்பு

இதழ்களுக்கும் சமுதாய பொறுப்பு உண்டு. அதிக விற்பனைக்காக வாசகர்களைக் கவரும் நோக்கில் பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிடக் கூடாது.

## 2. சுதந்திரம்

இதழ்களுக்கு உண்மையான செய்திகளை வெளியிட சுதந்திரம் உள்ளது. எதற்கும், யாருக்கும் அஞ்சியோ, அறநெறிக்குப் புறம்பாகவோ எதையும் பெறக் கருதியோ சுதந்திரத்தை இழக்கக் கூடாது.

### 3. கட்டுப்பாட்டுக்குள்ளடங்காமை

பொது, சமுதாய நாட்டு நலனைப் பாதிக்கும் வகையில் எந்தக் கட்டுக்குள்ளும் இதழ்கள் தங்களை ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது. பொது நலனுக்கு எதிராகத் துணை போகக் கூடாது. சிலருக்குக் கட்டுப்பட்டோ, அஞ்சியோ ஒரு தலை சார்பாகச் செய்திகளை வெளியிடக் கூடாது.

### 4. உண்மையாக, சரியாக வெளியிடல்

இதழ்கள் செய்திகளை மாற்றாமல், திரிக்காமல் உள்ளது உள்ளபடி வெளியிட வேண்டும். செய்திகளுக்குத் தருகின்ற தலைப்புகள் கவர்ச்சி கருதி வண்ணம் பூசும் வகையில் எழுதக் கூடாது. வாசகர்களுக்குச் செய்தித் தாள் உண்மைகளை மட்டுமே வெளியிடுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

### 5. ஒரு தலைச் சார்பின்மை

இதழ்கள் நடுநிலையோடு செய்திகளை வெளியிட வேண்டும். செய்திகளைத் தனியாகவும், அவை பற்றிய கருத்துக்களைத் தனியாகவும் வெளியிட வேண்டும். செய்திகளோடு தங்கள் சொந்தக் கருத்துக்களையும் வெளியிட்டு வாசகர்களைக் குழப்பவோ ஒரு பக்கத்தை ஆதரிக்கச் செய்யவோ, திசை திருப்பவோ கூடாது.

### 6. நியாயமாகச் செயல்படல்

செய்தித் தாள்கள் திட்டவட்டமாகத் தெரியாமல் எதனையும் வெளியிடக் கூடாது. குறிப்பாகச் சிலரைப் பாதிக்கின்ற உணர்வுகளைப் புண்படுத்துகின்ற பெயரையும், புகழையும் பாதிக்கின்ற செய்திகளை வெளியிடும் பொழுது, தொடர்புடையவர்களிடமும் கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொண்டு வெளியிடுவதே முறையாகும்.

### 7. பண்பாடு

செய்திகளைப் பண்பாட்டோடு வெளியிட வேண்டும். குறிப்பாகக் கொலை, கற்பழிப்புப் போன்ற குற்றச் செய்திகளை வெளியிடும் பொழுது மக்களின் பண்பாட்டிற்குக் கேடு செய்யாத வகையில் செய்திகளை வெளியிட வேண்டும்.

## நல்ல செய்தித் தாள்

ஒரு செய்தித் தாளை நல்ல சிறந்த செய்தித் தாளாகக் கருத வேண்டுமானாலட அவற்றில் சில தன்மைகள் இருக்க வேண்டும்.

அவை

### 1. எல்லா முக்கியச் செய்திகளையும் வெளியிடல்

நாட்டிலும், உலகிலும் நடைபெறுகின்றனவற்றுள் வாசகர்களுக்குத் தெரிய வேண்டிய, பயன்படக் கூடிய எல்லா முக்கியச் செய்திகளையும் வெளியிட வேண்டும். எந்த ஒரு முக்கியச் செய்தியும் விடுபடவோ, இருட்டடிப்புச் செய்யப்படவோ கூடாது.

### 2. முழுமையாக வெளியிடல்

வட்டார, தேசிய, உலக முக்கியச் செய்திகளை முழுமையாக வெளியிட வேண்டும்.

என்பனவாகும்.

நேற்றைய, இன்றைய எழுச்சிப் போக்குகளையும், வீழ்ச்சிப் போக்குகளையும் நன்கு ஆய்ந்து இதழ்களின் நோக்கங்களையும், விதிமுறைகளையும் அறிந்து நல்ல செய்தித் தாளை உருவாக்குவதில் இதழியலாளர் ஈடுபட வேண்டும்.

வன்முறை மலிந்து கிடக்கும் நம்நாடு சீரியதோர் இடத்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழ இதழியல் துறை அறத்தைப் போதிக்கும் கூடமாகத் திகழ வேண்டும்.

சமுதாய, அரசியல், நாகரிக வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடியாக இதழ்கள் விளங்க வேண்டும். நல்ல இதழ்கள் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்றன. குறிப்பாக வளர்கின்ற நாடுகளில் செய்தித் தாள்களும், இதழ்களும் பொறுப்போடு பணியாற்ற வேண்டும். அப்பொழுது தான் சமுதாய, பொருளாதார வளர்ச்சி சரியாக அமையும். சமூகமும் முன்னேற்றம் பெறும்.

## இதழியல் கலைச் சொற்கள்

A

Ad. (Advt) – விளம்பரம்

Add – ஏற்கனவே அனுப்பிய செய்தி, கட்டுரையுள் இணைப்பதற்காக

Alive - இன்னமும் பயன்படுத்தத் தகுந்த நிலையிலுள்ள செய்தி

A.M. – காலைப் பத்திரிகை

Angle – செய்தி எழுதப்பட்டுள்ள கோணம், வலியுறுத்தப்பட்டுள்ள அம்சம்

A.P. – அசோசியேட் பிரஸ் செய்தி நிறுவனம்

Art Work – விளக்கப் படம், புகைப்படம்

A.B.C. – பத்திரிகை விற்பனைத் தணிக்கை நிறுவனம்

Assignment – செய்தியைச் சேகரிப்பதற்காகச் செய்தியாளருக்குத் தரப்படும் முன்திட்டம்.

Advance – பின்னால் நிகழவிருக்கும் ஒரு நிகழ்ச்சி பற்றி முன் தயாரிப்பு

B

B.F. - பெரிய எழுத்துக்கள்

Banner – பத்திரிகையின் எட்டு பத்திகளையும் அடக்கி வெளியிடப்படும் செய்தித் தலைப்பு

Bear – செய்திக் களம்

Bite off – பத்திரிகை வடிவமைப்பின் போது இடத்தைச் சரிக்கட்டும் பொருட்டு செய்தியின் கடைசிப் பத்திகளை நீக்கி வருவதைக் குறிப்பது.

Blead - இதழில் அச்சிடும் பகுதியில் மூலைகளின் ஓரத்தில் இடம்பெறும் பகுதியைக் குறிப்பது.

Blind Interview – பேட்டிகளில் பேட்டியளித்தவர் பெயரைக் குறிப்பிடாமல் ஒரு முக்கிய அதிகாரி என்பது போலக் குறிப்பிடுதல்

Blow – Up – படங்களைப் பெரிதுபடுத்தல்

Body – செய்தியின் தலைப்புக்குக் கீழே வரும் பகுதி

Boil – செய்தியின் நீளத்தைக் குறைத்துக் கொள்வதைக் குறிப்பது.

Book – செய்தியின் அளவு

Box – பெட்டிச் செய்தி, ஒரு முக்கியச் செய்திகளை வலியுறுத்திக் கூறுவதற்குக் கையாளப்படும் முறைகளில் ஒன்று

Break – செய்தி தொடங்க இருக்கும் நொடியைக் குறிப்பது

Brigntner – சுருக்கமான நகைச்சுவைச் செய்தித் துணுக்கு

Budget – செய்தி ஸ்தாபனங்கள் அளிக்கும் (கைவசமுள்ள) செய்திகளின் பட்டியல்

Bull Dog - பத்திரிகையின் முதல் பத்தி

By line – செய்தி, கட்டுரை எழுதியவரின் பெயர்

Blind Spot – பார்வைபடாத இடம் (பகுதி)

C

Caption – பட, புகைப்பட விளக்கங்கள்.

Catch line – செய்தியை அடையாளம் கண்டு கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தை

Check Up – செய்திகளை மீண்டும் சரிபார்த்தல்

Column Rule – பத்திரிகைகளுக்கு இடையே காணப்படும் மெல்லிய கோடு.

Copy – அச்சுக் கோர்க்க அனுப்பப்படும் செய்தி, செய்திப்படி

Copy Desk – செய்தியைப் படியைச் செம்மையாக்கச் செய்யும் துணை ஆசிரியர்கள் அமர்ந்திருக்கும் இடம்.

Copy Paper - அச்சுக் கோர்க்க அனுப்பப்படும் செய்தி அடங்கிய தான்.

Copy Reader – அச்சுக் கோர்த்து செய்தியைப் பிழைகளைத் திருத்துதுவதற்காகப் படிப்வர்.

Copy Writer – விளம்பரங்களை எழுதுதல்

Creed – டெலிபிரிண்டர் மூலம் செய்தி அனுப்புதல்

Crit – (Criticism என்பதன் சுருக்கம்) குறை கூறுதல்

Crop – தேவைப்படும் அளவுக்கு ஏற்றவாறு புகைப்படத்தை வெட்டிச் சீர் செய்தல்.

Cut – நீக்கி விடுதல்

Clippings – (Cuttings) பத்திரிகையிலிருந்து வெட்டி எடுக்கப்படும் செய்திகள் அல்லது பத்திரிகை அலுவலக நூலகத்திலிருந்து பெறப்படும் குறிப்புகள்.

Circus makeup – வரன் முறைக்கு உட்படாத பக்கப் புனைவு.

COBOL – எழுத்து மொழியைக் கணிப்பான் மொழிக்கு மாற்றுவதற்குரிய ஒரு முறை.

Colour – செய்திக்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டுவதைக் குறிப்பது.

Column – பத்தி

Comp. – அச்சு கோர்த்தல்

Compling - பல்வேறு மூலங்களிலிருந்து ஒரே செய்தியைத் தொகுத்து சீர் செய்து செம்மைப்படுத்தல்.

Cover - செய்தியின் அனைத்து விவரங்களையும் ஒன்று விடாமல் சேகரித்தல்

Coverage - சேகரித்த அனைத்தையும் முழுமையாக வெளியிடல்.

Credit Line – செய்தி மூலத்தின் பெயர்

D

Dak – வெளியூர் பதிப்பு

Date Line – நாள் வரி, செய்தி பெறப்பட்டஇடம், நாள் பற்றிய குறிப்பு.

Dead Line – செய்தி கிடைக்கப் பெறவேண்டிய இறுதி நேரத்தைக் குறிப்பது. செய்தி அச்சுக்கு ஏற்றுவதற்குரிய காலக்கெடு.

Deck – தலைப்பின் அடுக்கு

Dope – தனிப்பட்ட முன்தகவல்

Dope Story – வதந்திகளை அடிப்படையாக வைத்து எழுதப்படும் செய்தி, கட்டுரை.

Douple – ஓரே செய்தி, பத்திரிகையில் இரண்டிடங்களில் வெளியாவது.

Dummy – டம்மி – பக்க மாதிரி வடிவமைப்பு, லே அவுட்

Display advertising – காட்சி முறை விளம்பரம்.

Display type – கவர்ச்சிகரமாக அமைந்த அச்சுகள்

E

Embargo – செய்தியை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன் வெளியிடக்கூடாது என்பதைக் குறிப்பது

End – செய்தி, கட்டுரை முடிவுற்றதைக் குறிப்பது.

Exclusion – தனிச் செய்தி, சிறப்புச் செய்தி (ஸ்கூப்)

Ear – காது விளம்பரம்

Edition – பதிப்பு

F

Fat – அளவுக்கு அதிகமான தலைப்பெழுத்துக்களும், செய்திகளும்.

Fake – பொய்ச் செய்தி

Feature – பின்னணித் தகவல்கள் - தனிப்பட்ட கருத்துக்கள் அடங்கிய கட்டுரை – தொடர்ச் சுவைப்பகுதிகள்

Feature Writer – கட்டுரை எழுதுபவர்

File - செய்திகளை தொலைபேசி தந்தி மூலம் அனுப்புதல்

Filler - இடநிரப்பி

Flag – முதல் பக்கத்தின் மேற்பகுதியில் வெளியாகும் நாளிதழின் பெயர்.

Flash – ஒரு முக்கியச் செய்தி பற்றி சில வரிகள் மட்டும டெலிபிரிண்டர் மூலம் வழங்கி விரிவான செய்தியைப் பின்னர் அனுப்புதல்.

Flush – ஓரம் தள்ளுதல்

Free - lancer – பத்திரிகைப் பணியில்லாத ஆனால் பத்திரிகைக்கு தொடர்ந்து செய்தி வழங்கும் செய்தியாளர்.

Fudge - இறுதியாகக் கிடைக்கப் பெறும் செய்திகளை நிரப்ப முதல் அல்லது கடைசிப் பக்கத்தில் விடப்படும் இடம்.

Follow – ups – தொடர் செய்தி

Fourth – நாளிதழ் - மக்களாட்சி அமைப்பைத் தாங்கும் நான்காவது தூண்.

G

Galley Proof – முதன்மை அச்சுப்படி

H

Handout – பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் செய்தி வெளியீடுகள்

Hold – செய்தி, கட்டுரையின் பிரசுரத்தை நிறுத்துவதற்குப் பயன்படுத்தும் வார்த்தை.

Hole – செய்திகளையும், விளம்பரங்களையும் நிரப்பிய பின் நாளிதழில் நிரப்பப்பட வேண்டிய சிறு இடம்.

I

Intro – செய்தியின் முதல் பத்தி

Inset – செய்தி அமைப்புப் பிரிவிற்குச் சென்ற பின் கிடைக்கும் மேல் விவரம்.

Inverted Pyramid – செய்தி எழுதுதலில் பின்பற்றப்படும் தலைகீழ் பிரமிடு முறை.

J

Job (Assignment) - பத்திரிகை நிருபருக்கு ஒதுக்கப்படும் பணி.

Jump – ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்தில் செய்தி, கட்டுரை தொடர்ச்சியைக் கொண்டு செல்லுதல்.

Jump Head – செய்தியின் தொடர்ச்சியில் பயன்படுத்தப்படும் தலைப்பு.

K

Kill (Dead) – ஒரு செய்தி பிரசுரிக்கப்படத் தேவையில்லை. அதைக் கலைத்து விடலாம் என்பதைக் குறிப்பது.

Knock Down - இன்னொரு பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமற்றது என ஒரு பத்திரிகை நிருபர் கூறுவது.

kiker – சிறு தொடர் மேல் தலைப்பு

L

Lay out – டம்மி – பக்க மாதிரி வடிவமைப்பு, லே அவுட்

Lead – முகப்பு முதன்மைப் பததி – பத்திரிகையில் பிரதான செய்தி, இதைப் பெரிய தலைப்புகளில் வெளியிடுவார்கள்

Lead – அச்சுக் கோர்த்தலில் பயன்படுத்தப்படும் உலோகம்.

Leg-man – நிருபர் செய்தி சேகரிக்க உதவும் வெளிநபர் தகவல் சேகரிக்க தொலைபேசியினைப் பயன்படுத்தாமல் வெளியில் சென்று சேகரிப்பது.

Lift – செய்திகளிலிருந்து சில பகுதிகளை எடுத்து விடுதல். இவற்றை வேறு சமயங்களில் பயன்படுத்துவதும் உண்டு.

M.

Make Up – பக்கப் புனைவு

Mast Head – பத்திரிகையின் பெயர், ஆசிரியர், உரிமையாளர், அச்சிடுபவர், பதிப்பாளர்,

Must – கட்டாயம் வெளியிடப்பட வேண்டிய செய்தி, கட்டுரை

N

News Print – செய்தி அச்சிடப்பயன்படுத்தப்படும் காகிதம் (பத்திரிகைக் காகிதம்)

O

Off – the – record – பிரசுரிக்க வேண்டாதது.

P

P.A. – பத்திரிகைச் சங்கம்

Page Fax - மின்னணுவியல் கருவிகள் மூலம் பத்திரிகையின் படங்களை பக்கங்களைத் தொலை தூரத்திற்கு அனுப்புவது.

Page Proof – பக்கப் பிரதி

Pagination – பக்கங்களுக்கு எண்ணிடுதல்

Para – பத்தி

Pic. .- படங்கள்

Pica – 12 புள்ளிகள்

Pica em – 12 புள்ளி நீளம், 12 புள்ளி அகலம் உள்ள அச்செழுத்து

Piece – ஒரு செய்தி அல்லது கட்டுரை

Point – புள்ளி

P.R.O. – மக்கள் தொடர்பு அலுவலர், பத்திரிகை உறவு அலுவலர்

Puff – செய்தியில் தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுக்கப்படும் விளம்பரம்

Pull Out – நாளிதழ் இணைப்பு

Q

Quote – மேற்கோள் காட்டுவது- “…………” என்ற அடைப்புக் குறிகளைப் பயன்படுத்தி ஒருவருடைய பேச்சுகளை அப்படியே வெளியிடுவது.

R

Reader – பிழை திருத்துபவர்

Rejig – புதிய தகவல்களைப் பயன்படுத்தி பழைய செய்தியை மீண்டும் திருத்தி எழுதுவது.

Retainer – செய்தி சேகரிப்பில் வாடிக்கையாக பத்திரிகைகள் அமர்த்தும் நபர். இவர் பத்திரிகையின் பணியில் இல்லாதவர். ஆனால் ஊதியம் வழங்கப்படும். சில வேளைகளில் இத்தகையோர் ஒரு சில பத்திரிகைகளுக்கு மட்டுமே செய்திகளை சேகரித்து வழங்குவர்.

Reuter – ராய்டர் செய்தி நிறுவனம்

Round – Up – ஒரு குறிப்பிட்ட. செய்தி பற்றி ஒட்டு மொத்த செய்தி வழங்கல். இதில் பல நிருபர்களின் செய்தி சேகரிப்பு இடம் பெறும்.

Ribbon – நெற்றித் தலைப்பு

Regionalisation – உள்ளூர் செய்திகளை தொலைதூரத்திற்குச் செயற்கைக் கோள் வாயிலாகவும் உருவ நேர்படி முறையாகவும் அனுப்புதல்.

S

Scoop – பத்திரிகை நிருபர் திரட்டிய சிறப்புச் செய்தி ‘ஸ்கூப் ‘முந்து செய்தி

Side – டெலிபிரிண்டர் மூலம் வரும் செய்திகளில் வெட்டியெடுக்கப்பட்ட பகுதிகளைக் குறிப்பது.

Side bar – தலைமைச் செய்திக்குத் துணையாக அமையும்.

Side Head – செய்தி அல்லது கட்டுரையின் துணைத் தலைப்பு

Slug – கொளு செய்தியின் தலைப்புக் குறிப்பு

Snap – முக்கியமல்லாத சிறிய செய்தி

Splash – காண்க - Lead Story

Spot News – களச் செய்தி

Story – செய்தி அல்லது செய்திக் கட்டுரை

Sizing – புகைப்படங்களையும் செய்திகளையும் பக்க அமைப்பிற்குத் தகுந்தாற்போல் சரி செய்தல்.

Strap – செய்தியில் தலைப்புக்கு மேலே எழுதப்படும் சிறிய தலைப்பு

Streamer – பல பத்திகளில் அடங்கும் தலைப்பு

Stringer – காண்க Retainer

Sub – உதவி ஆசிரியர், மாற்று

Syndicate – பொழுது போக்குக் கூறுகளை வாங்கி விற்று வரும் முகவர்கள்.

T

Tab loids – பத்திகள் கொண்ட சிறு பத்திரிகை

Tag – முக்கிய தலைப்புகளில் கீழிடம் பெறும் சிறிய தலைப்புகள், செய்தியின் முடிவில் குறிப்பிடப்படும் மூலங்கள் ஆதராங்களைக் குறிப்பது.

Tie back – ஏற்கனவே வெளியான செய்தியுடன் தொடர்புடைய ஒரு செய்தி.

Take – காண்க சைட்

Text – தலைப்புகள் நீக்கப்பட்ட அல்லது தலைப்பிடாத செய்தி

Tip – நீண்ட செய்தியை வளர்க்கும் அளவு உள்ள செய்தித் துறை

Tip – Off – பத்திரிகை அலுவலகங்களுக்குக் கிடைக்கப்பெறும் தகவல்கள் செய்தி சேகரிப்பில் இது பெரிதும் உதவும்.

Trim – காண்க Boil

Turn – செய்தியின் தொடர்ச்சி, ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு எடுத்துச் செல்லுதல்

U

UNI – செய்தி நிறுவனம்

V

VDT – ஒளிக்காட்சிக் கருவி

Vet – சட்டப்பிரச்சினைகள் உள்ளது பற்றி ஒரு செய்தி ஆராய்தல்

W

Wild – நாளிதழில் எந்தப் பக்கத்திலும் நிரப்பக் கூடிய செய்தி

Y

Yellow Journalism - இழிநிலை இதழியல்

**பயிற்சி வினாக்கள்**

1. புலனாய்வு இதழ்களின் நோக்கம், இயல்பு குறித்து விளக்கம் தருக.

2. புலனாய்வு இதழ்களின் நிறை, குறைகளை மதிப்பிடுக.

3. குறிப்பு வரைக : நச்சு இதழ்கள்

4. இன்றைய கால இதழ்களின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

5. சிறிய நடுத்தர, பெரிய இதழ்கள் என்றால் என்ன? இவை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

6. தற்கால இதழ்களின் எழுச்சி குறித்து எழுதுக.

7. இதழியல் கலைச் சொற்களின் பயன்பாடு குறித்து எழுதுக.

8. விரிவாக்கம் தருக

1. A.B.C.

2. Blind Interview

3. Bull Dog

4. Crop

5. Credit Line

6. Dead Line

7, End

8. Filler

9. Lay Out

10. Off the Record

11. Ribbon

12. Scoop